வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu
வீரமலர் ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 03 | 19.06.2022 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 195 | பக்கங்கள் : 20


07
அண்டை நாடுகளுடன் வலுவடையும் இந்திய நட்புறவு?


08
வெளிநாட்டு உதவிகளைப் பெறுவதில் இலங்கை எதிர்நோக்கும் இடர்பாடுகள்


10
1987 யூனில் வான் வழியாக மனித நேயம்! 2022 யூனில் கடல் வழியாக மனிதாபிமானம்!


16
தாராள அனுமதி கொடுக்கும் பெற்றோர்கள்

# யாழ்.சர்வதேச விமான நிலையம் ஜூலை 1 தொடக்கம் செயற்படும்

## அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா அறிவிப்பு



யாழ்ப்பாணம், ஜூன். 19

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் சேவைகள் எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி தொடக்கம் மீளவும் ஆரம்பமாகவுள்ளன.

சர்வதேச விமானங்களை வரவேற்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்படுவதோடு, இந்தியா உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த விமானங்கள் வருகை தரும் என எதிர்பார்ப்பதாக துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

19

## புதிய அரசியல் கூட்டணி அமைக்கிறார் சம்பிக்க?

கொழும்பு, ஜூன். 19

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து வெளியேறியுள்ள கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க, பரந்துபட்ட அரசியல் கூட்டணியை அமைக்கும் முயற்சியில் தீவிரமாக இறங்கியுள்ளார்.

43 ஆம் படையணி எனும் இயக்கத்தைக் கட்டியெழுப்பி, ஆரம்பத்தில் புத்திஜீவிகளை உள்வாங்கிய சம்பிக்க ரணவக்க, தற்போது அரசியல் பிரமுகர்களையும் இணைத்துக்கொள்ளத் திட்டமிட்டுள்ளார்.

இதற்கான பேச்சுக்கள் தற்போது வெற்றி

19

## 65 வீத நிரப்பு நிலையங்களில் போதிய எரிபொருள் இல்லை

கொழும்பு, ஜூன். 19

தற்போதைய எரிபொருள் நெருக்கடி காரணமாக நாடுமுழுவதும் உள்ள 65 சதவீத எரிபொருள் நிரப்பு நிலையங்களில் போதிய எரிபொருள் கிடைப்பதில்லை என தெரியவந்துள்ளது.

பெற்றோல், டீசல் மற்றும் மண்ணெண்ணெய் இல்லாமல் சில

19

## நாளை இலங்கைக்கு வருகின்றது நாணய நிதிய பிரதிநிதிகள் குழு!

கொழும்பு, ஜூன். 19

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழுவொன்று நாளை திங்கள்கிழமை இலங்கை வரவுள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து

19

## காங்கேசன் ஊடான கப்பல்சேவை இப்போதைக்கு சாத்தியம் இல்லை



யாழ்ப்பாணம், ஜூன். 19

காங்கேசன்துறை துறைமுகம் ஊடான கப்பல் சேவை உடனடியாக சாத்தியம் இல்லையென அமைச்சர் நிமால் சிறிபால டீ சில்வா தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் விமான நிலையம் மற்றும் காங்கேசன் துறை துறைமுகம் ஊடான கப்பல் போக்குவரத்து ஆகியவற்றை ஆரம்பிப்பது தொடர்பான கலந்துரையாடல் நேற்று மாலை பலாலி விமான நிலையத்தில் இடம்பெற்றது.

விமானம் மற்றும் கப்பல் போக்குவரத்து அமைச்சர் தலைமையில் இடம்பெற்ற இந்த கலந்துரையாடலின் போதே அமைச்சர் மேற்கண்டவாறு

அவர் மேலும் தெரிவிக்கையில்-

துறைமுகம் அருகே அதற்கான வசதிகள்

19

## பெற்றோல் கையிருப்பு முற்றாக முடிவடைகிறது?

கொழும்பு, ஜூன். 19

இலங்கையில் பெற்றோல் கையிருப்பு முற்றாக தீர்ந்துவிடும் நிலைக்குச் சென்றுள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நாட்டில் நாளொன்றுக்கான பெற்றோல் தேவை 3,000 மெற்றிக் தொன்களைத் தாண்டி அதிகரித்துள்ளது. ஆனால் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால்

19

## ஐ.நா. மனித உரிமை சபை முன் நாளை தமிழர்கள் கவனயீர்ப்பு!

ஜெனிவா, ஜூன். 19

ஐ. நா. மனித உரிமைகள் சபையின் 50ஆவது கூட்டத்தொடரில் தமிழினப் படுகொலைக்கு அனைத்துலக சுயாதீன விசாரணை கோரியும் தமிழர்களுக்கு தமிழீழமே நிரந்தரத் தீர்வு என்பதை வலியுறுத்தியும் இலங்கை சர்வாதிகாரத்தின் பொய் முகத்தை பன்னாட்டு சமுகத்துக்கு எடுத்துக் காட்டியும் நாளை திங்கள் கிழமை ஐ.நா. மனித உரிமைகள் சபை முன்றலில் மாபெரும் கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

இது குறித்து ஐரோப்பியத் தமிழர் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில்-

கடந்த 49 ஆவது மனித உரிமைகள் கூட்டத் தொடரில், ஆணையாளரினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் சர்வதேச சட்ட மீறல்களை இலங்கை அரசு மேற்கொண்டதாகவும் எந்த நிலமையிலும் அவர்கள்

19

## இப்படியும் நடக்கிறது...!

சிறுவயதில் படித்த முல்லாவின் கதை ஒன்றுதான் ஞாபகத்திற்கு வருகின்றது.

ஒருநாள் முல்லா ஒரு காட்டு வழியாக வெளியூருக்குச் சென்று கொண்டிருந்தார். வழியில் ஒரு முரடனிடம் அவர் சிக்கிக் கொண்டு விட்டார்.

அந்த முரடனுக்கு முல்லாவைப் பற்றியும், அவருக்கு இருக்கும் புகழைப் பற்றியும் நன்றாகத் தெரியும்.

அவரை அவமானப்படுத்த எண்ணிய முரடன் தன் கைவாளை உருவிக்கொண்டு, “முல்லா அவர்களே, உம்மைப் பெரிய மேதாவி என்றும் எவ்வளவு பெரிய ஆபத்து ஏற்பட்டாலும் உம்முடைய அறிவினாலேயே தப்பிப் பிழைப்பீர் என்றும் பேசிக்கொள்கி றார்களே, அது உண்மைதானா?” என்று கேட்டான்.

“மக்களுக்குப் பொய்பேசத் தெரியாது. அவர்கள் உண்மையைத்தான் பேசுகிறார்கள்” என்றார் முல்லா.

“அப்படியானால் உமது அறிவுச் சாதுரியத்தை நிரூபித்துக் காண்பியும், பார்க்கலாம். இதோ, இந்த வாளால் உமது கழுத்தை வெட்டப்போகிறேன், உம்மால் தப்பிப் பிழைக்க முடியுமா?” என்று முரடன் கேட்டான்.

“உம்முடைய வாளுக்குத் தப்பிப் பிழைக்கமுடியும் என்று எனக்குத் தோன்றவில்லை” என்று கூறிய முல்லா, திடீரென வானத்தைப் பார்த்துவிட்டு மகிழ்ச்சியுடன் சிரித்தார்.

“என்ன சிரிக்கிறீர் ” என்று முரடன் கேட்டான்.

“அன்பரே, உமது கைவாள் எனது தலையைத் துண்டிக்குமுன்பு அதோ வானத்திலே கண்களைப் பறிக்கும் அழகுடன் சிறகுகளை அசைத்துப் பறக்கும் அந்த வினோதமான தங்கப் பறவையை ஆசை தீரப் பார்த்து விடுகிறேன். அதற்குப் பிறகு நீர் எனது தலையை வெட்டிவிடலாம் ” என்றார் முல்லா.

“தங்கப் பறவையா வானத்தில் பறக்கிறது?” என்ற முரடன், வியப்புடன் ஆகாயத்தை அண்ணாந்து நோக்கினான்.

முல்லா திடீரெனப் பாய்ந்து முரடன் கையிலிருந்த வாளைத் தட்டிப் பறித்துவிட்டார்.

“நண்பனே, உம்முடைய உயிர் இப்போது என் கையில் இருக்கிறது. நான் நினைத்தால் உமது தலையை வெட்டி வீழ்த்திவிட முடியும் ” என்றார் முல்லா.

“முல்லா அவர்களே, நீர் வெற்றி பெற்றுவிட்டீர், என்னை மன்னிக்க வேண்டும்” என்று முரடன் தாழ்ந்து அவரை வணங்கினான்.

ரணில் விக்கிமரசிங்க பிரதமராகப் பதவியேற்றதும், பலரும் அவரால் மாத்திரமே இந்த நெருக்கடியை தீர்க்கமுடியும் என்று நம்பினார்கள். அமெரிக்காவிலிருந்து இந்தியா வரைக்கும் அவருக்கு வாழ்த்துத் தெரிவித்தார்கள்.

ஆனால் அவரோ, தான் பதவியேற்றதும் நாட்டின் பொருளாதார நிலைமையை மக்களுக்கு விளக்கமளித்தார். நாடு எந்த நிலையில் இருக்கின்றது என்று பாடம் நடாத்தினார்.

போதாக்குறைக்கு. மக்கள் ஒருநேர உணவை தியாகம் செய்ய வேண்டும், அடுத்த சில வாரங்கள் இன்னமும் கடினமான வாரங்கள் என்று எச்சரிக்கை மணியடித்தாரே தவிர, நிலைமையில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை.

ராஜபக்ஷக்கள் ஆட்சியிலிருந்தபோது இந்தியாவுடன் செய்யப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் கிடைத்த எரிபொருளை வைத்து சமாளித்துக்கொண்டிருந்தாரே தவிர, புதிதாக எந்த உதவியையோ கடனையோ பெற்றுவிட அவராலும் முடியவில்லை.

இந்திய கடனுதவியின்கீழ் கிடைத்த எரிபொருளின் கடைசிக் கப்பலும் இந்த வாரம் வந்துவிட்டது. இனி யாருடனாவது புதிதாக ஒப்பந்தம் செய்து, அதன் பின்னர் எரிபொருள் கப்பல் ஏறிவர சில வாரங்கள் ஆகலாம். அதைவிட கூடவும் செல்லலாம்.

அதனால்தான், அடுத்த இரண்டு வாரங்கள் அரச அலுவலர்களை வீட்டிலிருந்து பணியாற்றுமாறு அரசாங்கம் அறிவித்திருக்கின்றது.

அது ஒருவகையில் நாட்டை முடக்குவதுபோன்றதுதான். இன்னுமொரு வகையிலான ‘லொக்டவுண்’, அவ்வளவுதான். இந்த முடக்கம், மக்களின் எரிபொருள் தேவையை குறைக்க உதவுமே தவிர, அன்றாடம் அவசியமான பணிகளுக்கான தேவையை தவிர்த்துவிடாது. அவ்வாறு அத்தியாவசிய தேவைக்காகவும் மக்கள் வெளியே செல்ல முடியவில்லை என்றால், மீண்டும் ஒரு களேபரம் ஏற்படுவதைத் தடுக்க முடியாமலும் போகலாம்.

இப்போதுகூட, ஆங்காங்கே எரிபொருள் நிரப்பு நிலையங்களில், மக்கள் எரிபொருளைப் பெறுவதற்காக மணிக்கணக்கில் காவல் இருக்கின்றனர். அவ்வாறு இருப்பவர்கள் அமைதியிழந்து ஆங்காங்கே சில வன்முறைகளும் பதிவாகிவருகின்றன.

நிலைமை இப்படியே போனால், மீண்டும் ஒரு மே ஒன்பது ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்கின்றார்கள் சில அவதானிகள்.

முல்லா தன்னை மேதாவி என்று மக்களை நம்ப வைத்திருந்தார். அந்த நம்பிக்கையை பரீட்சித்தபோது அதிலும் அவர் வெற்றிபெற்றதுபோல, நமது பிரதமர் தனது திறமையை நிரூபிக்க வேண்டிய நேரம் வந்திருக்கின்றது.

இல்லையேல், அவரது பதவியை பாதுக்காக்க அவரால் மட்டுமல்ல, கடவுளாலும் முடியாமல் போகலாம்!

- ஊர்க்குருவி

# மன்னார் - புத்தளம் வீதியை திறக்க நடவடிக்கை எடுங்கள்

## பிரதமரிடம் ரிஷாத் எம்.பி கோரிக்கை

கொழும்பு, ஜூன். 19

மக்களின் தேவை கருதி பாவிக்கப்பட்டு வந்த மன்னார் - புத்தளம் (எலுவன் குளம் ஊடான) வரையிலான பாதையை திறக்க நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன், பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிடம் வேண்டுகோள் முன்வைத்தார்.

பிரதமர் ரணில் விக்ரமசிங்க தலைமையிலான, உணவுப் பாதுகாப்பு தொடர்பான கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கட்சித் தலைவர்களுக்கு விடுக்கப்பட்டிருந்த அழைப்பினையடுத்து, நேற்று முன்தினம் பிரதமர் அலுவலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தின் போதே, அவர் குறித்த வேண்டுகோளை முன்வைத்தார்.

வடக்குக்கும், தெற்குக்கும் இடையிலான பொருளாதார ரீதியான தொடர்புகளை ஏற்படுத்தும் நோக்கிலும், இப்பாதை ஊடாக அத்தியாவசிய தேவைகளை மக்கள் மேற்கொள்ளவேண்டியிருப்பதனாலும், மக்களின் பாவனைக் கேற்றவாறு இப்பாதையினை புனரமைத்து, மீள திறந்து விடுமாறு பிரதமரிடம், ரிஷாத் எம்.பி கேட்டுக்கொண்டார்.

இந்தக் கூட்டத்தில் ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள், அமைச்சுக்களின் செயலாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கொழும்பு பாடசாலைகளுக்கு விடுமுறை ‘ஒன்லைன்’ கல்வியைத் தொடர ஏற்பாடு!

கொழும்பு, ஜூன். 19

கொழும்பு மாநகர எல்லைக்கு உட்பட்ட பகுதிகளிலுள்ள அனைத்து அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளுக்கு நாளை மறுதினம் திங்கள் முதல் ஒரு வாரம் விடுமுறை வழங்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

எரிபொருள் நெருக்கடியால் போக்குவரத்து துறையில் ஏற்பட்டுள்ள ஸ்தம்பிதம் உட்பட சில விடயங்களை கருத்திற்கொண்டே இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இக்காலப்பகுதியில் ‘ஒன்லைன்’ மூலம் கல்வி நடவடிக்கை முன்னெடுக்கப்படும்.

நாட்டில் ஏனைய பகுதிகளில் உள்ள பாடசாலைகளை திறப்பதா அல்லது ஒன்லைன் மூலம் கற்றலை மேற்கொள்வதா என்பது குறித்து தீர்மானிக்கும் அதிகாரம், அதிபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளை, காலை 7 மணி முதல் மதியம் 2 மணி வரை மின்வெட்டை அமுல்படுத்தாதிருக்க பொது பயன்பாட்டு ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. (அ)

# தம்பதியிடம் தங்க நகைகள் அபகரிப்பு; நாவற்குழியில் இரண்டு பேர் சிக்கினர்

யாழ்ப்பாணம், ஜூன் . 19

வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த தம்பதியிடம் தங்க நகைகளை அபகரித்த இருவர் கோப்பாய் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 9ஆம் திகதி கல்வியங்காடு - ஆடியபாதம் வீதியில் வைத்து வவுனியாவைச் சேர்ந்த தம்பதியிடம் தாலிக் கொடி, சங்கிலி என 15 தங்கப் பவுண் நகைகள் வழிப்பறிக் கொள்ளை செய்யப்பட்டன.

சம்பவம் தொடர்பில் அன்றைய தினமே கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

வவுனியாவிலிருந்து வட்டுக்கோட்டையில் இடம்பெற்ற திருமண நிகழ்வுக்கு வருகை தந்து திரும்பிய போதே சம்பவம் இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கோப்பாய் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் முன்னெடுத்த விசாரணைகளின் அடிப்படையில் நாவற்குழியைச் சேர்ந்த 19 மற்றும் 22 வயதுடைய இருவர் நேற்று கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களிடமிருந்து கொள்ளையிடப்பட்ட நகைகள் பொலிஸாரினால் மீட்கப்பட்டன.

விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர்கள் இருவரும் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். (அ)

# வீட்டுத் தோட்டத்துக்கான உதவி பொருட்கள் வழங்கல்!

யாழ்ப்பாணம், ஜூன் 19

சாந்தி அக்ரோ நீட்ஸ் உதவி திட்டத்தின் கீழ் வீட்டுத் தோட்டம் செய்வதற்கான விதைகள், தெளி கருவிகள், சேதனப் பசளைகள் வழங்கும் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையால் மக்கள் எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடியை கருத்தில்கொண்டு சாந்தி அக்ரோ நீட்ஸ் இந்த உதவித் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. கடந்த 15ஆம் திகதி முதல் நேற்று 18ஆம் திகதி வரை இந்த உதவித் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த உதவித் திட்டத்தின் கீழ், பணம் கொடுத்து வாங்க முடியாதவர்கள், விசேட தேவையுடையோருக்கே இந்த உதவி திட்டம் வழங்கப்பட்டது.




இந்த நான்கு நாட்களில் 8 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் வீட்டுத் தோட்டத்துக்கான உதவிப் பொருட்களை பெற்றுச் சென்றுள்ளனர்.

இதேசமயம், விதைகள், தெளி கருவிகள், சேதனப் பசளைகள் தேவைப்படுபவர்கள் திருநெல்வேலி சந்தி, சம்பத் வங்கி அருகாமையிலுள்ள அக்ரோ நீட்ஸ் நிலையத்துக்கு சென்று வீட்டுத் தோட்ட உதவிப் பொருட்களை பெற்றுக் கொள்ள முடியும் என்று சாந்தி அக்ரோ நீட்ஸ் அமைப்பின் தலைவர் தேவதுரை ராஜேந்திரன் தெரிவித்துள்ளார். (ஐ)

ஈழநாடு



# சர்வதேச அங்கீகாரம் இந்த அரசுக்கு இல்லை!

## சுட்டிக்காட்டுகிறார் மைத்திரிபால



**கொழும்பு, ஜுன் 19**

**தற்போதைய அரசாங்கத்துக்கு சர்வதேச அங்கீகாரம் இல்லை எனவும், சர்வ கட்சி அரசாங்கம் அமைந்தால் சர்வதேச சமூகத்தின் நம்பிக்கையைப் பெறமுடியும், நாட்டின் நெருக்கடிக்கு குறுகிய காலத்தில் தீர்வு காண முடியும் எனவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

அரசாங்கத்தில் உள்ள சிலர் நாளை வேறொரு அரசாங்கத்திற்கு வந்தால் இந்த பிரச்னைகளுக்கு தீர்வு கிடைக்குமா என கேள்வி எழுப்புவதாக தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி, சர்வகட்சி அரசாங்கம் அமைத்து சுமார் 15 பேர் கொண்ட அமைச்சரவையை நியமித்து பொதுத் தேர்தலை நடத்தினால் சர்வதேசத்தின் ஆதரவைப் பெற முடியும் எனவும் தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கத்தின் மீது நாட்டில் நம்பிக்கை இல்லை எனவும், கடந்த மூன்று வருடங்களாக அவர்கள் செயற்பட்ட விதம் காரணமாக சர்வதேச சமூகத்தின் நம்பிக்கையை அது கொண்டிருக்கவில்லை எனவும் அவர் கூறினார்.

சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதன் முக்கியத்துவம் குறித்து தாம் பல தடவைகள் பேசிய போதும் ஜனாதிபதி அதற்கு சாதகமாக பதிலளிக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே முன்னாள் ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கம் நாட்டை நாளுக்கு நாள் சிக்கலாக்கி வருவதாகத் தெரிவித்த மைத்திரிபால சிறிசேன, ஜனாதிபதியும் பிரதமரும் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளை தனித்தனியாகக் கூட்டிச் செல்வது போன்று இருவருக்கு மிடையில் தொடர்பில்லை என்பது தெளிவாகின்றது எனவும் தெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்க பதவியை ஏற்று கட்சி சார்பற்ற அரசாங்கத்தை அமைக்க அழைப்பு விடுத்தார்.

கட்சி சார்பற்ற அரசாங்கம் பிரச்னைகளுக்குத் தீர்வு காணாது எனவும், நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு அனைத்துக் கட்சி அரசாங்கத்தை அமைக்குமாறும், சர்வதேசத்தின் ஆதரவைப் பெறுமாறும் பிரதமருக்கு தெரிவித்ததாக அவர் தெரிவித்தார்.

ஜப்பான் இலங்கைக்கு பெரும் உதவியாக இருக்கும் நாடு, ஆனால் அதனுடனான இருதரப்பு உறவுகள் தற்போது சீர்குலைந்துள்ளதாகவும், இலங்கையிடம் இல்லாத எண்ணெய், உரம், பூச்சிக்கொல்லி மற்றும் எரிவாயு அனைத்தும் ரஷ்யாவிடம் இருப்பதாகவும், ஆனால் ரஷ்யா தனது விமானத்தில் ஏற்பட்ட பிரச்சனை காரணமாக இலங்கையில் இருந்து விலகியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சர்வகட்சி அரசாங்கத்தின் ஊடாக நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்பட வேண்டுமெனவும், இது தொடர்பில் ஜனாதிபதி முன்னின்று செயற்பட வேண்டுமெனவும் மைத்திரி தெரிவித்தார்.

ஜப்பான், மேற்கு நாடுகள், ரஷ்யா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளில் உள்ள இராஜதந்திரிகளுடன் அனைத்துக் கட்சி அரசாங்கத்தை ஆதரிப்பதாக தாம் கலந்துரையாடியதாக அவர் கூறினார்.

(அ)

# அமெரிக்க ஆதரவாளர்களின் இரையாக மாறியுள்ளார் ரணில்

## சமிந்த விஜேசிறி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜுன். 19

பிரதமர் ரணில் விக்ரமசிங்க அமெரிக்க ஆதரவாளர்களின் இரையாக மாறி விட்டார் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்துள்ளார்.

இலங்கை ரஷ்யாவுக்கு ஆதரவாக மாறுவது அமெரிக்காவுக்கு அரசியல் ரீதியாக நன்மையளிக்காது என்பதால், அமெரிக்க ஆதரவாளர்கள் சிலர், ரஷ்யாவுக்கும் இலங்கைக்கும் இடையில் கருத்து முரண்பாடுகளை உருவாக்கியதாகவும் அவர் கூறியுள்ளார்.

அமெரிக்க ஆதரவாளர்களின் பொறியில் சிக்கியுள்ள ரணில் விக்ரமசிங்கவின் தீர்மானங்கள் காரணமாக ரஷ்யாவில் மானிய விலை கொள்வனவு செய்யப்படும் எரிபொருளை இந்தியாவிடம் இருந்து அதிக பணத்தை செலுத்தி பெற்றுக் கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

ரணில் விக்ரமசிங்க பிரதமராக பதவியேற்ற பின்னர், உலகில் ஏனைய நாடுகளின் உதவிகளை பெற முடியும் என நம்பிய போதிலும் இறுதியில் ரஷ்யாவுக்கும் இலங்கைக்கும் இடையில் இருந்து வந்த இருதரப்பு உறவுகள் சீர்குலைந்தன எனவும் சமிந்த விஜேசிறி கூறியுள்ளார்.

(அ)

# நாட்டின் போக்கை திருத்தவேண்டும்!

## அதற்கு ஜனாதிபதி தனது பதவியை விலகவேண்டும் என்கிறார் சம்பிக்க



கொழும்பு, ஜுன். 19

தெளிவான திட்டம் இல்லாத நாட்டின் போக்கை திருத்திய மைக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இதற்கு ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ பதவி விலக வேண் டும் எனவும், சர்வகட்சி அரசாங்கம் ஒன்றினை அமைப்பது பிரத மரின் பொறுப்பு எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அனைத்துக் கட்சி அரசாங்கத்தை அமைப்பதும், பொதுமக்களுக்கு விடயங்களை விளக்குவதும், நாட்டை ஒன்றிணைந்து கட்டியெழுப்புவதும் இன்றியமையாதது என்றும் அவர் கூறினார்.

நேற்று முன் தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த அவர், இந்த விடயத்தில் அரசியல்வாதிகள் முன்னுதாரணமாக செயற்பட வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

பொருளாதார ரீதியிலும் சமூக ரீதியிலும் நாடு ஆபத்தான கட்டத்தை நோக்கிச் சென்று கொண்டிருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க எச்சரித்தார்.

இவ்வாறானதொரு நிலைமையை தவிர்க்க தெளிவான திட்டம் அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்றும் இதற்கு அனைத்துக்கட்சி அரசாங்கம் ஸ்தாபிக்கப்படவேண்டும் என்றும் அவர் கூறினார். (அ)

# தற்போதுள்ள கல்வித்துறையை முகாமை செய்ய முடியவில்லை

## கல்வியமைச்சின் செயலாளர் கைவிரிப்பு

கொழும்பு, ஜுன். 19

ஒட்டுமொத்த கல்வித்துறையும் தீவிரமான மற்றும் சிக்கலான செயன்முறையைக் கடக்க வேண்டியிருப்பதாகவும், கோவிட் சூழ்நிலையைவிட பொருளாதார நெருக்கடியினால் தோன்றியுள்ள நிலையை முகாமைத்துவம் செய்வது சிக்கலாகியுள்ளது என கல்வி அமைச்சின் செயலாளர் எம்.என்.ரத்னசிங்க, அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவில் (கோபா குழு) தெரிவித்தார்.

நாட்டில் நிலவும் தற்போதைய கோவிட் மற்றும் பொருளாதார நெருக்கடிகளின் மத்தியில் கல்வித் துறையின் எதிர்காலத் திட்டங்கள் குறித்து ஆராய்வதற்காக அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு அதன் தலைவர் திஸ்ஸ விதாரண தலைமையில் அண்மையில் கூடிய போதே கல்வி அமைச்சின் செயலாளர் இவ்வாறு தெரிவித்தார்.

கல்வி அமைச்சு, தேசிய கல்வி நிறுவகம், பரீட்சைகள் திணைக்களம், கல்வி வெளியீடுகள் திணைக்களம் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஆகியவற்றின் அதிகாரிகள் இந்தக் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

குறிக்கப்பட்ட நாட்கள் பாடசாலைகளை நடத்த முடியாமல்போனமையால் வரையறுக்கப்பட்ட காலத்தில் பாடத்திட்டத்தைப் பூர்த்திசெய்ய முடியாமை, தற்பொழுது நிலவும் எரிபொருள் பற்றாக்குறை, பிள்ளைகளின் குடும்பங்களில் காணப்படும் பொருளாதார நெருக்கடி, பெற்றோர் வேலைகளை இழக்கும் நிலை போன்ற மோசமான சூழ்நிலை காணப்படுவதாக கல்வி அமைச்சின் செயலாளர் சுட்டிக்காட்டினார்.

ஒன்லைன் தொழில்நுட்பத்தின் ஊடாக கற்பித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும் கிராமங்களில் பல்வேறு சிரமங்கள் இருப்பதாகவும், ஒன்லைன் தொழில்நுட்பத்தின் ஊடாக கற்பிப்பது மாணவர்களுக்கு வெற்றிகரமான முறையாக இருக்காது என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

கல்வி அமைச்சுக்கான ஒதுக்கீட்டுத் தொகை போதுமானதாக இல்லை என்பது மற்றுமொரு பிரச்னை என்றும், அரசாங்க ஆதாரங்களுக்கு அப்பாற்பட்ட ஏனைய நிறுவனங்களிடமிருந்து பெறப்படவுள்ள யுனிசெப், ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி போன்ற திட்டங்களின் நிதியை மறுசீரமைக்க முன்னுரிமைத் திட்டங்களை செயற்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

குறிப்பிட்ட காலப் பகுதிக்கு மாத்திரம் பாடசாலைகள் நடத்தப்படுவதால் முழுமையான பாடநெறிகளைப் பூர்த்திசெய்ய முடியாமை பரீட்சையுடன் தொடர்புபட்ட விடயம் என்பதால் பாடத்திட்டத்தின் எல்லையைக் குறைப்பதற்கான அவசியம் குறித்தும் குழு கவனம் செலுத்தியது. இல்லாவிட்டால் மாணவர்கள் மாத்திரமன்றி ஆசிரியர்களும் கடுமையான அழுத்தங்களுக்கு ஆளாக நேரிடும் என்றும் குழு சுட்டிக்காட்டியது.

2020 ஆம் ஆண்டில் மாணவர்களின் கற்றல் இழப்பு 54 வீதமாகவும், 2021ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதமாகும் போது இந்த எண்ணிக்கை 88 வீதமாகக் காணப்பட்டது என்றும் இங்கு புலப்பட்டது. இவ்வாறான நிலையில், பரீட்சைகளின் போது உரிய கற்றல் இழப்பைக் கருத்தில் கொண்டு மாணவர்களுக்கு அநீதி இழைக்காத வகையில் வினாத்தாள்களைத் தயாரிக்கப் பரீட்சைகள் திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியத்தை குழு வலியுறுத்தியுள்ளது. தேசிய கல்வி நிறுவகம், கல்வி அமைச்சு மற்றும் பரீட்சைகள் திணைக்களம் ஆகியன ஒருங்கிணைந்து இது தொடர்பில் கொள்கை ரீதியான முடிவொன்றை எடுக்குமாறு குழு பரிந்துரைத்தது.

தற்போது நிலவும் போக்குவரத்துச் சிரமங்களைக் கருத்தில் கொண்டு மாணவர்களை அருகில் உள்ள பாடசாலையில் தற்காலிகமாக இணைக்கும் முறை தயாரிக்கப்பட்டு வருவதாகவும், இதனை இந்த ஆண்டு டிசெம்பர் 31ஆம் திகதி வரை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்த்திருப்பதாகவும் இங்கு தெரிவிக்கப்பட்டது.

அனைத்து சிரமங்களுக்கு மத்தியிலும் க.பொ.த சாதாரணதரப் பரீட்சையை உரிய முறையில் நடாத்தியமைக்காக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மற்றும் ஏனைய அனைத்து அதிகாரிகளையும் குழு பாராட்டியுள்ளது. கோவிட் சூழ்நிலை மற்றும் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் கல்வித் துறையை பராமரிப்பதில் அவர்கள் மேற்கொண்ட முயற்சிகளுக்காக அனைத்து ஆசிரியர்கள் உட்பட கல்வி அதிகாரிகளையும் குழு பாராட்டியது.

தற்போதைய கோவிட் நிலைமை மற்றும் பொருளாதார நெருக்கடி சூழ்நிலையில் பல்கலைக்கழக அமைப்பில் உள்ள பிரச்சினைகள் குறித்தும் இங்கு விவாதிக்கப்பட்டது. எரிபொருள் மற்றும் எரிவாயு தட்டுப்பாடு போன்ற சிரமங்களை எதிர்கொள்வதால் பிரயோக ரீதியான பரீட்சைகளுக்கு மாத்திரம் மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு அழைக்கப்படுவதுடன், ஏனைய விரிவுரைகள் ஒன்லைன் ஊடாக நடத்தப்படுவதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

உலக வங்கியின் நிதியுதவியில் நடைமுறைப்படுத்தப்படும் 100 மில்லியன் டொலர் திட்டத்தை தற்போது நிலவும் நெருக்கடியின் மத்தியில் நல்ல முறையில் பயன்படுத்துமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு, அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு பரிந்துரைத்தது.

இக்கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான தயாசிறி ஜயசேகர, லசந்த அழகியவன்ன, மொஹமட் முஸம்மில், திஸ்ஸ அத்தநாயக்க, சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே, சிவஞானம் ஸ்ரீதரன், ஹரினி அமரசூரிய, உப்புல் கலப்பதி ஆகியோர் கலந்துகொண்டனர். (அ)

# நாட்டு மக்களின் கஷ்டங்கள் புரியாத ஜனாதிபதி, பிரதமர்

## சாடுகின்றார் சஜித் பிரேமதாஸ



கொழும்பு, ஜூன் 19

**மக்களின் கஷ்ட நஷ்டங்களைப் புரிந்துகொள்ளாத இந்த ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் ஒன்றாக இணைந்து ஆட்சி அமைக்க முடியாது எனவும், அவர்கள் மக்களுடன் விளையாடிக் கொண்டே இருக்கின்றனர் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

நாட்டில் உணவு மற்றும் குடிபானங்கள் தயாரித்தல் மற்றும் விநியோகம் செய்தல் சார்ந்து தொடர்புடைய துறையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இலங்கை உணவு பதப்படுத்துபவர்கள் சங்கத்தின் பிரதிநிதிகளுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று முன் தினம் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது. இதன் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தலைவர்களால் உருவாக்கப்பட்ட ஓர் அவலத்தையே இன்று நாடு முகம் கொடுக்க நேரிட்டுள்ளது. விஞ்ஞான பூர்வமற்ற முடிவுகளால் ஏற்பட்ட விளைவுகளின் அவலத்தை இன்று முழு நாடும் அனுபவித்து வருகின்றது.

இல்லாமைகளையும் இயலாமைகளையும் பற்றியே ஜனாதிபதியும் பிரதமரும் நாட்டுக்குக் கூறுகின்றனர். அரசு இயலாமையை அறிவிப்பதையே செய்து கொண்டிருக்கின்றது.

இந்த அபாயம் குறித்து தொடர்ச்சியாக நான் உட்பட எதிர்க்கட்சி கூறிய எதனையும் அரசு செவிசாய்க்கவில்லை.

இந்த அரசு ஆட்சிக்கு வந்தவுடன் பணக்கார குபேரர்களுக்கு வரிச்சலுகை வழங்கிய தன் விளைவுகளை நாடு எதிர்கொள்கின்றது.

நமது நாடு தரவரிசைகளில் பின்னடைவுகளைச் சந்திக்கும் போது இது ஒரு சர்வதேச சதி என்றே அரசு கூறியது.

இன்று மக்கள் வரிசைகளில் நின்று மரணிக்கும் நிலைக்கு நாடு வந்து விட்டது.

இல்லை, இயலாது மற்றும் பார்க்கலாம் எனச் சொல்லுவதற்கு அரசொன்று தேவையில்லை.

நிலையற்ற தீர்வுகளால் நாடு முன்னேறாது. மக்கள் ஆணையின் மூலம் கிடைக்கப்பெறும் தீர்வே ஒரே தீர்வு - என்றார். (அ)

# பிள்ளைகள் சுமையென்றால் பொலிஸிடம் ஒப்படைக்கவும்

## அவர்களை கொல்ல வேண்டாம்

கொழும்பு, ஜூன். 19

பிள்ளைகளை வளர்க்க முடியாத நெருக்கடி நிலைமை ஏற்பட்டால் அவர்களைகொன்று விட வேண்டாம் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

பிள்ளைகளை வளர்ப்பதில் சிரமங்கள் ஏற்பட்டால் அருகாமையில் உள்ள பொலிஸ் நிலையத்தின் சிறுவர் மற்றும் மகளிர் பிரிவில் பிள்ளைகளை ஒப்படைக்குமாறு கோரியுள்ளார்.

இவ்வாறு ஒப்படைத்தால் பெற்றோருக்கு பொலிஸார் உதவுவர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

களனி பிரதேசத்தில் தாய் ஒருவர் ஐந்து வயதான பிள்ளையை களனி ஆற்றில் வீசி வீட்டு தாமும் பாய்ந்து தற்கொலை செய்து கொள்ள முயற்சித்திருந்தார். அயலவர்கள் குறித்த பெண்ணை காப்பாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# நெருக்கடியால் மூடப்பட்டது பேராதனை பல்கலைக்கழகம்

கொழும்பு, ஜூன். 19

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை காரணமாக பேராதனை பல்கலைக்கழகம் நேற்று முதல் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளது என பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எம்.டி.லமவன்ச தெரிவித்துள்ளார்.

பரீட்சைகள் உட்பட பல்கலைக்கழகத்தின் அனைத்து கல்வி நடவடிக்கைகளும் உடனடியாக நிறுத்தி வைக்கப்படுகின்றன. அத்துடன் பல்கலைக்கழக விடுதிகளில் தங்கியுள்ள அனைத்து மாணவர்களும் விடுதிகளை விட்டு உடனடியாக வெளியேறுமாறும் துணைவேந்தர் அறிவித்துள்ளார்.

பரீட்சைகள் மற்றும் கல்வி நடவடிக்கைகள் குறித்து சம்பந்தப்பட்ட பீடங்கள் ஊடாக பின்னர் அறிவிக்கப்படும் எனவும் துணைவேந்தர் பேராசிரியர் எம்.டி.லமவன்ச வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# களனி ஆற்றினுள் தாய் வீசிய 5 வயது மகன் சடலமாக மீட்பு

கொழும்பு, ஜூன். 19

சிலாபம் - வென்னப்புவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வைக்கால் கடற்கரையில் கரையொதுங்கியிருந்த நிலையில் சிறுவன் ஒருவனின் சடலம் மீட்கப்பட்டுள்ளது எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த சடலம், வத்தளை - கதிரான பாலத்திலிருந்து பெண் ஒருவரால் களனி ஆற்றில் வீசப்பட்டது எனக் கூறப்படும் 5 வயது சிறுவனுடையதாக இருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

கடந்த 15ஆம் திகதி வத்தளை - ஹெந்தல - கதிரான பாலத்துக்கு அருகில் களனி ஆற்றில் தனது ஐந்து வயது மகனை வீசிவிட்டு, தனது உயிரையும் மாய்த்துக்கொள்ள முற்பட்ட தாய் பிரதேசவாசிகளால் பிடித்துப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இதையடுத்து, வத்தளை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட அவர் எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, ஆற்றில் வீசப்பட்ட சிறுவனைக் கண்டுபிடிக்கப் பொலிஸார் மற்றும் கடற்படை சுழியோடிகள் தேடுதல் நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர். (அ)

# எரிபொருள் நிலையம் அருகே அத்துருகிரியவில் கடும் மோதல்

## 6 பொலிஸார் காயம்; பெண் உட்பட 10 பேர் கைது

கொழும்பு, ஜூன். 19

கொழும்பு - அதுருகிரிய எல்.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகில் பொது மக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் நேற்றுமுன்தினம் இரவு மோதல் இடம்பெற்றது.

இதன்போது பொதுமக்கள் மீது பொலிஸார் கடும் தாக்குதல் நடத்தினர். பதிலுக்கு பொது மக்களும் பொலிஸாருக்கு எதிராக மோதலில் ஈடுபட்டனர்.

இதேவேளை, அதிருப்தியடைந்த மக்கள் எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு தீ வைக்க முயற்சித்ததாகவும், அவ்வாறானதொரு நிலைமை ஏற்படாத வகையில் பொலிஸார் தடுத்து நிறுத்தி மக்களை விரட்டியடிக்க முயன்றதாகவும் பொலிஸார் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

மோதலின்போது 6 பொலிஸார் காயமடைந்த நிலையில் ஹோமாகம ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய பெண் ஒருவர் உட்பட 10 பேரை அத்துருகிரிய பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இதற்கிடையே கொழும்பு - கொட்டாஞ்சேனை சிபெட்கோ எரிபொருள் நிரப்பு நிலையத்திலும் நேற்று முன் தினம் இரவு பதற்றமான சூழல் ஏற்பட்டதாகத் தெரியவருகிறது. (அ)

# அம்பாறையில் வெள்ளியிரவு மக்கள் மறியல் போராட்டம்

அம்பாறை, ஜூன். 19

எரிபொருள் விநியோகம் சீராக முன்னெடுக்கப்படாமை காரணமாக நாடு முழுவதும் மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டு வரும் நிலையில் நேற்று முன் தினம் இரவு அம்பாறையிலும் குழப்பமான நிலை ஏற்பட்டிருந்தது.

எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருள் விநியோகிக்கப்பட்டுள்ளது என்ற செய்தியறிந்து அங்கு சென்ற பொதுமக்களுக்கும் எரிபொருள் நிலைய ஊழியர்களுக்கும் இடையே ஏற்பட்ட முரண்பாடு காரணமாக வீதி மறியல் போராட்டமொன்று இடம்பெற்றது.

அம்பாறை மாவட்டம் பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மருதமுனை பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று முன் தின இரவு மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அங்கு ஒன்று கூடிய மக்களை கலைப்பதற்காக சம்பவ இடத்துக்கு இராணுவத்தினர், பொலிஸார் வரவழைக்கப்பட்டனர்.

மேற்குறித்த எரிபொருள் நிலைய உரிமையாளர் மற்றும் ஊழியர்களின் பொறுப்பற்ற செயற்பாட்டினால் கோபமடைந்த மக்களே இவ்வாறு வீதி மறியல் போராட்டத்தை மேற்கொண்டனர்.

இதனால் வீதி போக்குவரத்து பாதிக்கப்பட்டிருந்தது. கல்முனை, அம்பாறை பகுதியில் இருந்து கொழும்பு செல்லும் பொதுப்போக்குவரத்து பஸ்கள் திரும்பிச் சென்றன. (அ)

# எரிபொருளுக்கு வரிசையில் நின்ற தனியார் பஸ் திருட்டு

## 15 வயது மாணவர்கள் இருவர் கைது

கொழும்பு, ஜூன். 19

எரிபொருள் நிரப்புவதற்காக வரிசையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தனியார் பஸ் திருடப்பட்டுள்ளது.

திருட்டுச் சம்பவம் இடம்பெற்று 30 நிமிடங்களுக்குள் பஸ் மீட்கப்பட்டதுடன், பஸ்ஸைத் திருடிய குற்றச்சாட்டில் 15 வயதுடைய இரு பாடசாலை மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹோமாகம, கலவிலவத்தை எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பஸ்ஸே திருடப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் மத்தேகொட பிரதேசத்தில் வசிக்கும் 15 வயதுடைய பாடசாலை மாணவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

ஹோமாகம - புறக்கோட்டை வழித்தடத்தில் இயங்கும் தனியார் பஸ் ஒன்று கலவிலவத்தை எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்னால் வரிசையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

பஸ் திடீரென புறப்பட்டு செல்வதை அவதானித்த, வரிசையில் நின்ற மற்றொரு சாரதி சந்தேகமடைந்து, பஸ்ஸின் உரிமையாளரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு வினவியுள்ளார்.

எனினும், தான் பஸ்ஸை எடுத்து செல்லவில்லையென கூறிய அவர், உடனடியாக ஓட்டோவில் அங்கு வந்து, பஸ் சென்ற திசையில் தேடிச் சென்றுள்ளார்.

சம்பவம் தொடர்பில் ஹோமாகம பொலிஸாருக்கும், பஸ்ஸின் உரிமையாளரின் நண்பர்களுக்கும் அறிவிக்கப்பட்டதுடன், பொலிஸ் உத்தியோகத்தர்களும் தேடுதலில் ஈடுபட்டனர்.

இதேவேளை, பஸ் ஹோமாகமவில் அமைந்துள்ள பிறிதொரு இடத்தில் நிறுத்தப்பட்டிருந்த நிலையில், பஸ்ஸின் சாரதி வயது குறைந்தவர் என்பதை அங்கிருந்த ஒருவர் அவதானித்து அவரிடம் சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளதா எனக் கேட்டுள்ளார்.

அப்போது அவரிடம் சாரதி அனுமதிப்பத்திரம் இல்லை என்பது தெரியவந்ததையடுத்து பஸ்ஸின் உரிமையாளருக்கு வேறொருவர் மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டது.

அதன்படி, பஸ்ஸின் உரிமையாளர் பொலிஸாருடன் சம்பவ இடத்திற்கு வந்து பஸ்ஸை எடுத்துச் சென்றார்.

சந்தேகநபர்கள் இருவரையும் பொலிஸார் கைது செய்தனர். (அ)

ஈழநாடு
Eelanadu
19.06.2022 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், ஆனி 05

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# பரந்தளவிலான அரசியல் கூட்டுக்கான காலம்?

சிங்கள தேசியவாதம் பெருமளவு வீழ்ச்சியுற்றிருப்பதான சூழல் தெரிகின்றது. குறிப்பாக இனவெறுப்பு மற்றும் மதவாத - சிங்கள பௌத்த தேசியவாதம் வீழ்ச்சியை சந்தித்திருக்கின்றது. ராஜபக்ஷ முகாமினாலேயே, இது திட்டமிட்டு வளர்க்கப்பட்டது. பன்சலைகளில் பௌத்த போதனைகளின்போது, 10-15 நிமிடங்கள் இஸ்லாமிய தீவிரவாதம் தொடர்பில் வகுப்புக்கள் எடுக்கப்படுமளவுக்கு, மிகவும் திட்டமிட்ட வகையில் இனவெறுப்பு சிங்கள - பௌத்த தேசியவாதம் வளர்க்கப்பட்டது. கல்கண்டே தம்மானந்த தேரர், அண்மையில் இந்த தகவல்களை குறிப்பிட்டிருந்தார். ஜனாதிபதித் தேர்தலுக்கு பல மாதங்களுக்கு முன்பதாகவே இவ்வாறான செயற்பாடுகள் திட்டமிட்டு முன்னெடுக்கப்பட்டன. ஈஸ்டர் தற்கொலை குண்டுத்தாக்குதல்களை தொடர்ந்து, இந்த பிரசாரம் சாதாரண சிங்கள மக்கள் மத்தியில் பெருமளவிற்கு எடுபட்டது.

இவ்வாறானதொரு பின்புலத்தில்தான், கோட்டாபய ராஜபக்ஷ, ஜனாதிபதித் தேர்தலில், தனிச்சிங்கள வாக்குகளில் வெற்றி பெற முடிந்தது. ஆனால் பொருளாதார நெருக்கடியும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்டிருக்கும் அரசியல் நெருக்கடியும், ராஜபக்ஷ மொடல் சிங்கள - பௌத்த தேசியவாதத்தை கேள்விக்குள்ளாக்கியிருக்கின்றது. இந்த நிலையில் அந்த மாதிரியான கோசங்களுடன் அண்மைக்காலத்தில் எந்தவொரு சிங்கள அரசியல்வாதியும் தேர்தல்களில் வெற்றி பெறுவதற்கான வாய்ப்பில்லை. அதற்காக சிங்கள தேசியவாதம் இல்லாமல் போய்விடுமென்று கருதவேண்டியதில்லை. சூழ்நிலைக்கேற்ற வகையில், அது வேறுமாதிரியான தோற்றத்திற்கு தாவலாம். ஆனால் கடுமையான இன வெறுப்பை முன்வைத்து அடுத்த தேர்தல்களை எதிர்கொள்ளக் கூடிய நிலைமை இப்போதில்லை.

இந்த பின்னியில்தான், தற்போது, 2024 தேர்தலை முன்வைத்து, பரந்தளவிலான அரசியல் கூட்டணியொன்றை உருவாக்குவது தொடர்பில், தென்னிலங்கையில் உரையாடல்கள் இடம்பெற்றுவருகின்றன. இவ்வாறானதொரு சூழலில் தமிழ்த் தேசியம் பேசுகின்ற கட்சிகள் புதினம் பார்த்துக் கொண்டிருக்கின்றன. பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட காலத்திலிருந்து, தமிழ் தேசிய அரசியலென்பது வெறுமனே புதினம் பார்க்கும் - பார்த்த புதினத்தை, அவ்வப்போது பாராளுமன்றத்தில் உரையாற்றி தங்களுக்குள் மகிழ்ந்து கொள்ளும் நிலையிலேயே, தமிழ்த் தேசிய அரசியல் நகர்கின்றது. ஆக்கபூர்வமான எந்தவொரு உரையாடலும் தமிழ் சூழலில் இல்லை. தமிழ்த் தேசியக் கட்சிகள் என்போரின் ஆழ்ந்த அமைதி, எவர் வேண்டுமானாலும் தமிழ்த் தேசிய அரசியலை தீர்மானிக்கலாம் என்னும் நிலைமையை ஏற்படுத்தியிருக்கின்றது. ஆச்சிரமங்கள் நடத்துவோரெல்லாம் தமிழ்த் தேசிய வகுப்பெடுக்கும் நிலைமை உருவாகியிருக்கின்றது.

எனவே தென்னிலங்கையின் தரப்புக்கள் தேர்தலை இலக்கு வைத்து கூட்டணிகள் தொடர்பில் உரையாடுவது போன்று, தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒரு பரந்தளவிலான தேர்தல் வியூகமொன்றிற்கு தயாராக வேண்டும். கொள்கையடிப்படையில்தான் நாங்கள் ஒன்று கூடுவோமென்று, கதைகள் சொல்லும் காலம் முடிந்துவிட்டது. ஏனெனில் தமிழ் மக்களிடம், தேர்தல் அரசியல் மட்டும்தான் இருக்கின்றது. ஒரு மக்கள் இயக்கம் இருந்தால் இது பற்றி நாம் பேசவேண்டிய தேவையேற்பட்டிருக்காது. ஆனால் கடந்த 13 ஆண்டு கால அனுபவங்கள், அப்படியானதொரு இயக்கம் நமது சூழலில் உருவாகப் போவதில்லையென்பதை தெளிவாக உணர்த்தியிருக்கின்றது.

எனவே இன்றைய நிலையில், தமிழர்களின் அரசியல் பிரதிநித்துவப் பலத்தை பெருக்கிக் கொள்ளவேண்டும். பிரதிநிதித்துவ பலம்தான் மறுபுறும் தமிழர்களின் பேரம் பேசும் பலமாக இருக்கின்றது. தமிழர்களின் பிரதிநிதித்துவ பலம் சிதறுமாக இருந்தால், பேரம் பேசுவதற்கான பலமும் இல்லால் போகும். இதனை கருத்தில் கொண்டே தமிழ்க் கட்சிகளின் எதிர்காலத் தேர்தல் வியூகங்கள் அமைய வேண்டும். தமிழர் அரசியலில் எவரெல்லாம் புனித வாதங்கள் அல்லது 24 கரட் தேசியம் பேச முற்படுகின்றார்களே - அவர்களெல்லாம் அடிப்படையில் தமிழ் மக்களுக்கு எந்தவொரு நன்மையும் கிடைத்துவிடக் கூடாதென்பதற்காக செயற்படுபவர்களாவர். இதனை தமிழ் மக்களும் உணரவேண்டும். இப்போதே, பரந்தளவிலான தேர்தல் கூட்டு தொடர்பிலான உரையாடல்கள் ஆரம்பிக்கப்படவேண்டும். இறுதி நேரத்தில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு முயற்சியும் வெற்றியளிக்காது. இறுதி நேர முயற்சிகள் மேலும் பிளவுகளையே ஏற்படுத்தியிருக்கின்றது. இது தொடர்பிலும் போதியளவு அனுபவங்கள் தமிழ் சூழலில் உண்டு.

# 'தமிழ் ரைம்ஸ்' இராசநாயகம்: பத்திரிகைத் துறைக்கு ஓர் அணி!

மாலி



*நம்முடைய இந்த வரலாற்றுக் காலத்தில் மதிப்போடு போற்றப்படவேண்டிய உன்னதமான ஒரு பத்திரிகையாளராக திரு பெ. இராசநாயகம் நேற்றுமுன்தினம் மறைந்தார். மதிப் பார்ந்த, ஓர் ஆங்கில மொழி பத்திரிகையாளர் - பத்திரிகை ஆசிரியர் அவர்.*

*இலங்கையில் தமிழர்களின் அரசியல் உரிமைகளுக்கான முயற்சிகள் சாத்வீக முறைமைகளிலிருந்து தீவிரவாத நடவடிக்கைளிலும் ஆரம்பிக்கத் தொடங்கிய ஒரு முக்கியமான காலகட்டத்தில், அந்த மக்களின் உரிமைகளை வெல்ல ஒரு வெளிநாட்டு துணையாகும் எண்ணத்தில் லண்டனில் உதயமான 'தமிழ் ரைம்ஸ்' ஆங்கில மாத சஞ்சிகை, உலகளாவிய ரீதியில் பரவலான வாசகர் வட்டத்தைக் கொண்டிருந்தது. ஆரோக்கியமான கருத்துக்களுக்கும் கருத்துப் பரிமாறல்களுக்கும் அது களம் அமைத்தது.*

*அப்போது, பின்னர் ஏற்பட்ட மிகுந்த நெருக்கடிகளுடனான காலத்தில் தமிழர் சார்ந்த செய்தித் துறை, ஒன்றில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு முழு ஆதரவாக அல்லது முழு எதிர்ப்பாக இயங்கும் துர்ப்பாக்கிய நிலையில் சிக்கியது. நடுநிலை என்பது துரோகம் என்று ஆக்கப்பட்ட நிதர்சனத்தில், 'தமிழ் ரைம்ஸ்' பெரும் சவால்களை எதிர்கொள்ளநேர்ந்தது.*

*1981இல் தொடங்கப்பட்ட இச் சஞ்சிகை தொடர்ந்து இருபத்தைந்து ஆண்டுகள், 2006 வரை வெளிவந்தது. ஆரம்பத்தில், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான ஒரு நிலைப்பாட்டையே தமிழ் ரைம்ஸ் சஞ்சிகையும் வெளிப்படையாகவே காண்பிக்க தலைப்பட்டபோது, இலங்கையில் அரசின் செய்தி தணிக்கைகளும் தீவிரமாயிருந்தன. இக்கட்டத்தில், லண்டனிலிருந்து வெளியாகும் சஞ்சிகையின் ஒரு தார்மீக பொறுப்பையும் கடமையையும், காத்திரமான பங்களிப்பையும் உணர்ந்ததில், சஞ்சிகையின் ஸ்தாபகர்களில் ஒருவரான திரு என். எஸ். கந்தையா பதிப்பாளராக பொறுப்பேற்க, திரு இராசநாயகம் ஆசிரிய பொறுப்பை ஏற்றார். 'நீங்கள் சொல்வதை நான் மறுக்கலாம். ஆனால், அதைச் சொல்வதற்கான உங்களின் உரிமையை என் மரணம்வரையிலும் பாதுகாப்பேன்' - என்ற பிரேஞ்சு எழுத்தாளரும் தத்துவவாதியுமான வொல்ரையரின் (Vbltaire) தத்துவ வாசக இலச்சினையுடன் திரு இராசநாயகம் தன்னை அச்சஞ்சிகையில் அர்ப்பணித்தார். தன்னுடைய அர்ப்பணிப்பான பணியில் தொடர்வதற்கு பல சவால்களையும் அவர் எதிர்கொண்டார்.*

*தெளிவும், நேர்மையும், துணிச்சலும், மொழி ஆளுமையும் மிகுந்த அவரின் ஆசிரிய தலையங்கங்கள், அதில் வெளியான செய்திக் கோவைகள், கட்டுரைகள், விவாதங்கள் இந்தக் காலப் பகுதியின் மிகப் பெறுமதி வாய்ந்த சாட்சிய ஆவணங்கள்.*

*2006இல், பதிப்பாளரான திரு என். எஸ். கந்தையாவின் மரணத்தையடுத்து, தமிழ் ரைம்ஸ் வெளிவராதுபோனாலும், தர்மத்தில் சாய்ந்துவிடாத பெருமையில் அது நிலைக்கிறது. ஆதங்கங்களில் மனது அங்கலாய்த்தாலும், அந்தப் பெருமையில் திரு இராசநாயகம் பிற்காலங்களில் ஓர் அமைதியைக்கண்டார். இருபத்தைந்து ஆண்டுகள் வெளிவந்த தமிழ் ரைம்ஸ் ஆசிரிய தலையங்கங்களை இரண்டு பகுதிகளைக்கொண்ட நூல் தொகுப்பாக வெளிக்கொணர்ந்து, தன்னுடைய பத்திரிகைப் பணிக்கு அவர் முத்தாய்ப்பிட்டார்.*

*இங்கிலாந்துக்கு வெளியே இலங்கை, இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், அவுஸ்திரேலியா, ஹொங்கொங் மற்றும் பல ஆபிரிக்க நாடுகளிலுமாக, தமிழ் ரைம்ஸ் செல்வாக்கைப் பெற்றபோது, 'சிறிலங்கன் ரைம்ஸ்' என்ற இலவச பத்திரிகையை வெளியிட்டு அதனை முறியடிக்க இலங்கை அரசு நிர்ப்பந்தத்துடன் அப்போது முயற்சித்தது.*

*இளமையிலேயே இடதுசாரிக் கொள்கைகளுடன் உந்துதல்கொண்ட வழக்கறிஞரான திரு இராசநாயகம், வாசுதேவ நாணயக்கார, சந்திரிகா குமாரதுங்க போன்ற பலருடனும் நெருக்கமான நட்பைக்கொண்டவர். பத்திரிகைத்துறை அவர் மூச்சாக இருந்தாலும், அவரின் ஜீவனோபாயம் சட்டத்துறையாகவே இருந்தது.*

*1983 கலவரத்தையடுத்து லண்டனில் ஆரம்பிக்கப்பட்ட 'ஸ்கொட்' தர்ம நிறுவனத்தின் செயலாளராகவிருந்த திரு இராசநாயகம் அதன் மனித உரிமைகள் உபகுழுவின் செயலாளராகவுமிருந்து, இலங்கை அரசின் மனித உரிமை மீறல் நடவடிக்கைகளுக்கு எதிராக ஜெனிவாவில் தீவிரமாக பலகாலம் செயல்பட்டவர்.*

*எதிலும் ஒரு செய்நேர்த்தி அவருடையது. தன்னுடைய கருத்துக்களில் உறுதியாக - ஆனால், எல்லோருடனும் அன்பு, பண்புடன் பழகுபவர். தமிழ் மக்களின் 'விடிவை' விசுவாசமாக விழைந்தவர். அந்த விடிவைக் காண உழைத்தவர்.*

*சுன்னாகத்தை பிறப்பிடமாகக்கொண்ட திரு இராசநாயகம், ஸ்கந்தவரோதய கல்லூரி பழைய மாணவர். இளமையிலேயே மறைந்துவிட்ட எழுத்தாளரான பெரி. சண்முகநாதனின் சகோதரர்.*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



பகிர்வு -34

# துறைசார் அறம் ..... பேணப்பட வேண்டியதே!

கணபதி சர்வானந்தா

கெவின் காட்டர் தென்னாப்பிரிக்காவின் ஜோகன்னஸ் பேர்க்கில் பிறந்த ஒரு ஊடகர், படப்பிடிப்பாளர். 1994 மே 23 அன்று பெரும் கை தட்டல்களுக்கு மத்தியில், கொலம்பியப் பல்கலைக்கழகத்தின் பிரமாண்டமான அரங்கத்தில் அவர் புலிட்சர் விருதைப் பெற்றுக் கொண்டார். அந்த விருது புகைப்படத் துறையில் நோபல் விருதுக்கு இணையானது. சூடானில் அவர் எடுத்த அந்தக் குழந்தை தொடர்பான புகைப்படம் 1993 மார்ச் 26 அன்று தி நியூ யோர்க் ரைம்ஸ் என்ற பத்திரிகையில் பிரசுரமாகி அவருக்கு பெரும் புகழைத் தேடிக் கொடுத்தது. அந்தச் செய்திப் படத்துக்காகவே அந்த விருது.

அன்று சூடானில் நிலவிய வறுமையை ஒரு படத்தினூடாகச் செய்தியாக வெளிப்படுத்திய கெவின் காட்டர் 27 யூலை 1994 அன்று அவரது 33 வயதில் பார்க்மோர் என்ற இடத்தில் தற்கொலை செய்து கொண்டார். தற்கொலைக்கான காரணத்தைப் பின்வருமாறு அவர் எழுதி வைத்திருந்தார்.

நான் உண்மையிலேயே வருந்துகிறேன்.வாழ்க்கையின் வலி மகிழ்ச்சியை மீறுகிறது, எவருக்கும் மகிழ்ச்சி இல்லை... மனச்சோர்வு... தொலைபேசி இல்லாமல்... வாடகைக்கு பணம் ... குழந்தையை ஆதரவோடு வளர்க்கப் பணம் ... கடன்களைச் செலுத்தப் பணம் ... பணம் !!! ... கொலைகள், பிணங்கள், கோபம் மற்றும் வலிகள்... பட்டினியால் வாடும் அல்லது காயமடைந்த குழந்தைகள் பற்றிய நினைவுகள் என்னைத் துரத்துகின்றன. தூண்டுகின்றன. மகிழ்ச்சியான பைத்தியக்காரர்கள்.... பெரும்பாலும் பொலீஸ், கொலையாளி மரணதண்டனை... அதனை நிறைவேற்றுபவர்கள் ... எண்ணிப்பார்க்கிறேன். என்னால் மகிழ்சியாக இருக்க முடியவில்லை.

எனக்கு மகிழ்சியாக இருக்கும் அந்த அதிர்ஷ்டம் இருந்தால்... அது கென் உடன் தான் சாத்தியமாகும் என்ற முடிவில் அவருடன் சேரச் சென்றுள்ளேன்... கெவின் கார்ட்டர்.

மேற் குறிப்பிட்ட பதிவில் கென் என்று அவர் குறிப்பிட்டது அவருக்கு முன்னர் இயற்கை எய்திய அவர் நண்பர் பெயர்.

இதுவரை கெவின் காட்டர் பற்றிப் பலர் பலவாறு எழுதியிருந்தாலும் அறம் என்ற விடயத்தில் அவர் இன்னும் முழுமையாக ஆராயப்பட வேண்டியவர். தன்னறம், நிறுவன அறம், தொழில்சார் அறம் என்று பல கோணங்களில் அவர் வாழ்க்கை ஆராயப்படுமாயின் அதுவே ஒரு பாடப்புத்தகமாகக் கூட அமைய வாய்ப்புண்டு என்பது எனது கருத்து.

அவரது வாழ்க்கை வரலாற்றை ஒரு முறை படித்தால் தெரிந்து கொள்வோம் அவர் நேர்மை பற்றி. அது மட்டுமல்லாது அவர் கொண்ட அறம் பற்றி. அவர் தொடர்பில் அதிகம் பேச வாய்ப்புண்டு என்பது எனது எண்ணம்.

தென்ஆபிரிக்காவில் ஜோகனஸ் பேர்க் என்ற இடத்தில் பிறந்தவர். நடுத்தர வர்க்க, வெள்ளையர்கள் மட்டுமே வசிக்கும் பகுதி அது. அவர் குழந்தையாக இருந்தபோது பார்த்த காட்சிகள் அவர் மனதை உறுத் திக்கொண்டே இருந்தது. அவர் வாழ்ந்த பகுதிக்குள் அவ்வப்போது பொலிஸார் வருவதும் அங்கு சட்டவிரோதமாகப் பதுங்கி வாழ்கின்ற கறுப்பின மக்களை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்தித் தண்டிப்பதுமாக... பல காட்சிகள், அவர் குழந்தையாக இருந்தபோது பார்த்தவை.

அந்த அநியாயங்களைப் பற்றி அங்கு எவரும் கேள்ளி கேட்டதாக அவர் நினைவில் இல்லை.ஒரு கத்தோலிக்க, குடும்பமான தனது குடும்பமும் அது பற்றிக் கண்டு கொள்ளாது மௌனம் சாதித்து வந்தது தனக்கு வருத்தமளித்ததாக அவர் பின்னாளில் குறிப்பிட்டிருக்கிறார்.தான் கண்ட நிறவெறிக்கு எதிராகப் போராடுவது பற்றிய சிந்தனைகளை அவர் அகலித்துக் கொண்டார்.

தனது உயர்நிலைக் கல்விக்குப் பிறகு, படிப்பை விட்டுவிட்டு ஒரு மருந்தாளராகப் பணியாற்ற அவர் இராணுவத்தில் சேர்ந்து கொண்டார். பின்னர் அங்கிருந்து தப்பித்துக் கொள்ளவேண்டி விமானப்படையில் இணைந்து கொண்டார். அங்கு அவர் நான்கு ஆண்டுகள் பணியாற்றினார். 1980 ஆம் ஆண்டில், ஒரு நாள் அங்குள்ள உணவுச் சாலை மண்டபத்தில் கறுப்பு இனப் பணியாளர் அவமதிக்கப்பட்டதை அவர் கண்டார். அவரைப் பாதுகாத்தார். அதன் விளைவாக அவர் மற்றப் படைவீரர்களால் மோசமாகத் தாக்கப்பட்டார். அதனால் அவர் அங்கிருந்து வெளியேறினார், “டேவிட்” என்ற ரேடியோ டிஸ்க் ஜொக்கியாகப் புதிய வாழ்க்கையைத் தொடங்க முயன்றார். அவர் எதிர்பார்த்ததை விட அந்த வேலை மிகவும் கடினமாக இருந்தது. பின்னர் தான் முன்பு விட்டுச் சென்ற இராணுவ சேவையில் காணப்பட்ட மீதிச் சேவையை வழங்க முடிவு செய்தார். 1983 இல் பிரிட்டோரியாவில் சேர்ச் ஸ்ட்ரீட் குண்டுவெடிப்பைப் பார்த்த பின்பு தான் ஒரு செய்திப் புகைப்படக்காரராக, பத்திரிகையாளராக மாற வேண்டும் என்று முடிவு செய்தார்.

அவர் இறுதியாகப் பணிபுரிந்த அந்த ஊடகத்துறை தான் அவரைப் பலவாறாகச் சிந்திக்கச் செய்திருக்கிறது. அவர் தனது ஊடகப் பணியின்போதும், ஊடகப் பணியாளராகப் பயணித்தபோதும் தான் கண்டவைகளுக்கூடாக அறத்தைத் தேடியிருக்கலாம். உடகத் துறையின் உச்சத்தைத் தொட வேண்டும் என்ற வெறியினால் தான் மனித நேயச் சிந்தனையையும் அது சார் அறத்தையும் மறந்து போனதாக அவர் எண்ணி வருத்தப்பட்டதன் விளைவே அவர் மரணக் குறிப்பாக இருக்குமோ? என்று கூட எண்ணத் தோன்றுகிறது.

என்னைப் பொறுத்தவரை ஊடகப் படப்பிடிப்பாளர் கெவின் காட்டர் வாழ்ந்த 33 வருட வரலாற்றுப் பதிவுகளினூடாக ஒரு மனிதன் கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள் பலவுண்டு. எமது செயற்பாடுகள் அறம் சார்ந்தவையாக இருக்கு வேண்டும். அறமும் வாழ்வோடு சமமாகப் பயணிக்க வேண்டும். அறத்துனூடாகச் செயற்பாடுகளைப் பார்ப்பதும், செயற்பாடுகளுக்கூடாக அறத்தைத் தேடுவதும் இன்றியமையாதவை என்பது எனது கருத்து.நேர்மை, நீதி என்பற்றோடு தமது வாழ்க்கை நகர வேண்டும் என்று விரும்புபவர்கள் அறத்தை விட்டு விட்டுப் பயணிப்பதென்பது கடினம். அறம் தவறின்... அது நின்று கொல்லும்.

## இந்தவார ராசிபலன் 19.06.2022 - 25.06.2022



ஜூன் 19 ஞாயிற்றுக்கிழமை
சுபகிருது வருடம் - ஆனி 05

**நல்ல நேரம்: 7.30 - 9.00 ராகு காலம் : 04.30 - 06.00 திதி : சஷ்டி**




சங்கடங்களில் இருந்து விடுபட வழி பிறக்கும். நீங்கள் நினைத்ததை சாதித்து முடிப்பீர்கள். அரசு வழியிலான எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பண நடமாட்டம் அதிகரிக்கும். செலவுகளை சந்திக்க வேண்டியதாக இருக்கும்.உங்களுடைய எண்ணங்கள் நிறைவேறும். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும். ஆன்மீகத்தில் நாட்டம் அதிகரிக்கும். நீண்ட நாள் எண்ணம் ஒன்று நிறைவேறும்.




உங்களுடைய எண்ணங்கள் நிறைவேறும் வாரம். உங்களுடைய முயற்சிக்கேற்ற பலன்களை காண்பீர்கள். இதுவரை இருந்து வந்த பிரச்சினைகளை இல்லாமல் செய்வீர்கள். மற்றவர்கள் ஆச்சரியப்படும் வகையில் உங்களுடைய செல்வாக்கு உயரும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். நீங்கள் சந்தித்து வந்த சங்கடங்கள் இல்லாமல் போகும். எதிரிகள் இருந்த இடம் தெரியாமல் மறைவார்கள். திருமண முயற்சிகள் நிறைவேறும்.




உங்கள் செயல்களில் பதட்டம் அதிகரிக்கும். பிரச்சினைகள் உங்களைத் தேடி வரும் என்பதால் கவனமுடன் செயல்படுங்கள். உங்கள் செயல்களில் தடுமாற்றம் உண்டாவதுடன் சில பிரச்சினைகளையும் எதிர்கொள்வீர்கள். எதிர்பார்த்தவற்றை அடைவதற்காக கடுமையாக போராடி சாதிப்பீர்கள்.உங்கள் செயல்களில் கவனமும் எச்சரிக்கையும் தேவைப்படும். ஒவ்வொரு செயல்களிலும் யோசித்து செயல்பட்டால்தான் நன்மைகளைக் காண முடியும்.




முயற்சிகள் சாதகமாகும். மனதில் குழப்பமும் அதிகரிக்கும். உங்கள் செயல்கள் வெற்றியாகும். எதிர்பார்த்த வரவுகள் வந்து உங்கள் நிலையை உயர்த்தும்.நினைத்த செயல்களில் வெற்றியுடன் மகிழ்ச்சியாக செல்லும். அலைச்சல்களும் பிரச்சினைகளும் அதிகரிக்கும்.தடைகளைத் தாண்டி வெற்றி பெறுவீர்கள். அவசர முடிவுகள் எதுவும் வேண்டாம். சுய ஆற்றலால் பொன் பொருள் சேர்க்கை உண்டாகும்.




உங்களுடைய முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். எதிர்பார்த்த வரவுகள் வந்து சேர்ந்து மகிழ்ச்சியான நிலையில் இருப்பீர்கள். எல்லாவற்றிலும் கவனமும் எச்சரிக்கையும் தேவைப்படும். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும். உங்களுக்கு யோகமான வாரம். தைரியத்துடன் செயல்பட்டு நீங்கள் நினைத்ததை சாதிப்பீர்கள். நிதானத்தைக் கடைப்பிடிப்பதும் நன்மையை உண்டாக்கும்.




உங்களை அலட்சியம் செய்தவர்கள் உங்கள் தயவை எதிர்பார்த்து வருவார்கள். வீட்டில் சுப நிகழ்ச்சிகளுக்கு வாய்ப்புண்டாகும். யோகமான வாரமாகும். அரசு வழியிலும் நன்மைகள் ஏற்படும். வீட்டில் திருமணப் பேச்சு எழும். பண வரவும் சரளமாகும். உங்களுடைய குறைகள் தீரும் வாரம். மற்றவர்கள் மதிப்பிற்கு நீங்கள் ஆளாவீர்கள். குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள் விலகும். உங்களுடைய எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.




செயல்களில் சங்கடங்கள் இருக்கும். உங்கள் முயற்சிகளையும் தள்ளிப்போடுவீர்கள். பொருளாதார நிலை உயரும். கடன்களை அடைத்து நிம்மதி அடைவீர்கள்.உங்களையும் அறியாமல் அன்பு, பாசம், காதல் என்றவற்றில் சிக்குவீர்கள். அதனால் உங்களுடைய கவனம் சிதறும். உங்களுடைய முயற்சிகள் இழுபறியாகவே இருக்கும். எண்ணங்கள் நிறைவேறாமல் பொகும். துணிச்சலுடன் செயல்பட ஆரம்பிப்பீர்கள்.




துணிச்சலுடன் செயல்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள். அதன்பிறகு கவனமும் நிதானமும் தேவைப்படும். சில வேலைகள் இழுபறியாகவே இருக்கும்.மற்றவர்களுடைய விமர்சனத்திற்கு மதிப்பளிக்க மாட்டீர்கள். உங்கள் வழியில் சென்று வெற்றி பெறுவீர்கள். உங்களுடைய செல்வாக்கு உயரும். பண வரவும் ஆதாயங்களும் உண்டாகும்.வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறும்.




கவனமுடன் செயல்படுவதால் இழப்புகளைத் தவிர்க்கலாம். உழைப்பு அதிகரித்தாலும் அதற்கேற்ற நன்மைகள் கிடைக்காமல் போகும். ஒரு சிலருக்கு இட மாற்றம் ஊர் மாற்றம் ஏற்படும். யோசிக்காமல் சில செயல்களை செய்து அதனால் வருந்துவீர்கள். பெரிய முயற்சிகள் வெற்றியாகும். அதன்பிறகு ஒவ்வொரு செயலையும் யோசித்து செய்ய வேண்டியதாய் இருக்கும். மனைவி வழி உறவுகளால் ஆதாயம் காண்பீர்கள்.




செலவுகள் கட்டுப்படும். உங்கள் மனம் மகிழும்படி சம்பவங்கள் நடந்தேறும். சனி, ஒரு சிலர் வெளியூர் பயணம் மேற்கொள்வீர்கள். உங்கள் முயற்சிகளில் ஆதாயம் காண்பீர்கள்.துணிச்சலாக செயல்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள். அரசு வழியிலான உங்கள் எதிர்பார்ப்பு நிறைவேறும்.குடும்பத்தினர் உங்களுடைய சொல்லுக்கு மதிப்பளிப்பார்கள்.உங்களுடைய விருப்பங்கள் நிறைவேறும்.





செலவுகள் பல வழிகளிலும் ஏற்படும். விருப்பங்கள் நிறைவேறும். பிள்ளைகளின் நிலைமை உங்களுக்கு சங்கடத்தை ஏற்படுத்தும். தொழிலில் இருந்த தடைகள் விலகி பண வரவு தாராளமாகும். பொன் பொருள் வாங்கி மகிழ்வீர்கள். குடும்பத்தினரின் ஆதரவு ஒரு நேரம் இருப்பதுபோல் மறுநேரம் இல்லாமல் போகும். உங்களுடைய சுய முயற்சிகளால் உங்கள் நிலையில் மாற்றம் காண்பீர்கள். எதிர்காலம் குறித்த உங்களுடைய முயற்சிகளில் ஒன்று நிறைவேறும்.




எதிர்பார்த்த வரவுகள் வந்து சேரும். திடீர் செலவுகளால் நெருக்கடிகளை சந்திப்பீர்கள் அதன்பின் உங்கள் எதிர்பார்ப்புகள் நிறைவேறி மகிழ்வீர்கள். திருமண வயதினருக்கு வரன் தேடிவரும். ஒரு சிலர் வசிக்கும் இடத்தை மாற்றுவீர்கள். எண்ணங்கள் நிறைவேறும் வாரம் இது. புதிய முயற்சிகளை மேற்கொள்வீர்கள். பிள்ளைகளின் திருமணம், புதிய வீடு கட்டுதல் என்று உங்கள் சிந்தனை செல்லும். தம்பதிகளுக்குள் பிரச்சினைகள் தோன்றக்கூடும் என்பதால் பேச்சில் கவனம் தேவை. எதிர்பார்த்தவற்றில் வரவுகள் உண்டாகும்.

# அண்டை நாடுகளுடன் வலுவடையும் இந்திய நட்புறவு?

**சென்னை மடல்**
**-பகவான் சிங்-**



ஒவ்வொரு நாடும் பொருளாதார, சமூக மற்றும் அரசியல் ரீதியாகத் தனது பல்துறை வளர்ச்சிக்காக அண்டை நாடுகளுடன் நெருக்கமான நல்லுறவு கொண்டிருக்கவேண்டிய நிலையில், உலகெங்கிலும் விரோதமும் அவநம்பிக்கையும் பரவியிருப்பது குறித்த என் கவலையை அண்மையில் எனது 'ஈழநாடு' வாசகர்களுடன் நான் பகிர்ந்து கொண்டிருந்தேன். நீண்ட மற்றும் குறுகிய, நிலம் மற்றும் கடல் எல்லைகளைப் பகிர்ந்துகொள்ளும் நாடுகளுக்கிடையேயான இத்தகைய வலுவான நட்பு, சமீப ஆண்டுகளில் மிக அதிகமாகிவரும் பாதுகாப்புச் செலவுகளையும் பெருமளவில் குறைக்கும். இதனால், மிக முக்கியமான வளர்ச்சித் துறைகளான உள் கட்டமைப்பு, கல்வி, சுகாதாரம், சுற்றுச் சூழல், முதியோர் நலன் போன்றவற்றுக்குக் கூடுதல் நிதி ஒதுக்க முடியும்.

## புதிய குடியரசுத் தலைவர் வேட்பாளர் யார்?

ஓர் இந்தியனாக, அண்டை நாடுகளுக்குத் தன்னால் ஆன உதவிகளை வழங்கிவந்தும், இந்தியா அந்த நாடுகளுடனான நட்புறவை இழந்து வருவது, எனக்கு வேதனை அளித்தது. இந்த நிலைக்கு, முந்தைய ஆட்சிக் காலத்தின் அயலுறவுத் துறை அமைச்சர்களும் ராஜரீக அதிகாரிகளும் பொறுப்பாவார்கள். ஆனால், இப்போது, பல்வேறு சர்வதேச மன்றங்களிலும் இந்திய வெளியுறவு அமைச்சகமும் அதன் அமைச்சர் ஜெய்ஷங்கரும் அவரது மூத்த அதிகாரிகளும் துணிச்சலுடன் எடுத்து வரும் வலுவான நடவடிக்கைகளும் அளித்து வரும் அறிக்கைகளும் நிலைமையை விரைவாகவும் குறிப்பிடத்தக்க வகையிலும் மாற்றியமைத்து வருகின்றன. அதி முக்கியமான தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் என்ற பொறுப்பை வகிக்கும் அதிரடி நாயகன் அஜித்





தோவல், தனது இரட்டைத் தலைவர்களான பிரதமர் நரேந்திர மோடிக்கும் உள்துறை அமைச்சரான அமித் ஷாவுக்கும் கண்களும் காதுகளுமாக இருந்து செயலாற்றுவது குறிப்பிடத்தக்கது. இவரது செயல்பாட்டால் உந்தப்பட்ட சில அரசு முடிவுகள் எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் மற்றும் ஊடகப் பிரிவினரிடையே பெரும் சலசலப்பை ஏற்படுத்தியிருந்தாலும், உள்நாட்டு சமூக-அரசியல் நீரோட்டங்கள் மற்றும் வெளிநாட்டு விவகாரங்கள் குறித்து அவர் வழங்கும் தகவல்களும் ஆலோசனைகளும், உள்நாட்டிலும் வெளியுறவிலும் இந்தியாவின் பொது ஆரோக்கியத்திற்கு பெரிதும் உதவியுள்ளன.

மிக அண்மையில் வெடித்துள்ள சர்ச்சை, இந்திய ஆயுதப் படைகளுக்கான 'அக்னிபத்' ஆள்சேர்ப்புத் திட்டம் பற்றியது. இத்திட்டம் குறித்துச் சுருக்கமாக விவரிப்பதானால், இந்தத் திட்டத்தின்கீழ், இராணுவம் ஒவ்வோர் ஆண்டும் 50,000 இளைஞர்களைப் பணியமர்த்தி, அவர்களில் 25 விழுக்காட்டினரை மட்டும் மேலும் 15 ஆண்டு காலத்துக்குத் தக்கவைத்துக் கொண்டு, மீதமுள்ள 75வீதம் பேருக்கு நான்காண்டு காலத்திற்குப் பிறகு ஓய்வளிக்க வகை செய்யப்பட்டுள்ளது. நான்கு வருட ஒப்பந்த சேவைக்கு ஓய்வூதியம் மற்றும் பிற பலன்கள் எதுவும் இருக்காது, அதைத் தவிர, 'அக்னிவீர்' என்ற சான்றிதழுடன் ஓய்வு பெறும் போது வரியில்லா ஊதியத் தொகுப்பாக ரூ.11.7 லட்சம் பெற்று வீடு திரும்புவர். இராணுவ வீரர்களின் அதிக சம்பளம் மற்றும் ஓய்வூதியத்திற்கான செலவினங்களைக் குறைத்து, அந்தப் பணத்தைப் படைகளின் நவீனமயமாக்கலுக்குப் பயன்படுத்துவதே மோடி அரசின் பெரும் நோக்கமாகும். மேலும், இது இந்திய ராணுவத்தை இளமையாகவும், சிறப்பான உடல் தகுதி வாய்ந்ததாகவும் ஆக்கும். இது, அடுத்த ஆறு முதல் ஏழு ஆண்டுகளில் ஒரு வீரரின் சராசரி வயதை, தற்போதைய 32 ஆண்டுகளில் இருந்து 24-26 ஆண்டுகளாக குறைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தற்போதுள்ள முறையின்கீழ் பணியமர்த்தப்பட்ட வீரர்கள் சுமார் 20 ஆண்டுகள் ஆயுதப் படைகளுக்குச் சேவை செய்து 40 வயதிற்குள் ஓய்வூதியத்துடன் பணி ஓய்வு பெறுகின்றனர்.

பிஹார், மத்தியப்பிரதேசம், உத்தரப்பிரதேசம், ராஜஸ்தான், ஹரியாணா போன்ற வட மாநிலங்களிலும் தெலுங்கானாவிலும் வன்முறைப் போராட்டங்கள் வெடித்துள்ளன. தெலுங்கானா தலைநகர் சிக்கந்தரா பாத்தில் ரயில் பெட்டிக்குத் தீ வைத்த ஒரு கும்பலின் மீது ரயில்வே காவல் துறை நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஓர் இளைஞர் பலியாகியுள்ளார். பிஹாரில் ஒரு ரயில் பெட்டிக்குத் தீ வைக்கப்பட்டதில் அதில் இருந்த ஒருவர் உயிரிழந்துள்ளார். ஒடிஷாவில், இராணுவத்துக்கான உடல்தகுதித் தேர்வு மற்றும் மருத்துவத் தகுதித் தேர்வில் வெற்றி பெற்று, எழுத்துத் தேர்வுக்காகக் காத்திருக்கும் 23 வயது வாலிபர் ஒருவர் உட்பட, இருவர், இந்த அக்னிபத் திட்டத்தினால் மனமுடைந்து தற்கொலை செய்துகொண்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இத்திட்டம், தேசத்துக்கும் இராணுவத்தின் நலனுக்கும் உகந்தது என்ற புரிதல் இல்லாததாலேயே இளைஞர்கள் இதை எதிர்ப்பதாக இராணுவ மற்றும் கடற்படைத் தளபதிகள் கூறியிருக்கிறார்கள். எனினும், ஓய்வுபெற்ற சில இராணுவ அதிகாரிகள், இத்திட்டத்தைப் பகிரங்கமாக எதிர்த்துள் ளனர். 21-23 வயதில் ஓய்வு பெற்றுத் திரும்பும் ஓர் இளைஞருக்கு அடுத்த வேலை கிடைப்பது எளிதாக இருக்காது என்பது அவர்கள் வாதம். "இராணுவத்தால் நிராகரிக்கப்பட்டவர் என்று தான் அவர்களை வேலை வழங்கும் நிறுவனங் கள் மட்டுமன்றி, உறவினர்களும் பார்ப்பார்கள்" என்கிறார் ஓய்வு பெற்ற இராணுவ ஜெனரல் ஒருவர்.

மோடியையும் அவரது காவிக் கட்சியையும் தீவிரமாக எதிர்க்கும் சிலர், அக்னிபத் குறித்த தமது கடுமையான விமர்சனத்தில், பாஜக, தனது கட்சியின ருக்கு, வரிப்பணத்தில் ஆயுதப்பயிற்சி அளிக்க முற்படுவதாக

## மீண்டும் மோடி பிரதமராவதை தடுக்க குடியரசு வேட்பாளர் தேர்வில் எதிர்க்கட்சிகள்

வும் ஓய்வு பெற்றுத் திரும்பியவுடன் அவர்களை அரசியல் எதிரிகளையும் சிறுபான்மையினரையும் தாக்கக் கூடிய காவிப் படைகளாகப் பயன்படுத்தத் திட்ட மிட்டுள்ளதாகவும்கூடக் குற்றம் சாட்டுகிறார்கள். இதையெல்லாம் கேட்கவே அச்சமாக இருக்கிறதல்லவா?

இந்த வன்முறைப் போராட்டங்கள் சற்றும் தணியாத நிலையில், சனிக்கிழமையன்று, பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் ஓர் அறிவிப்பை வெளியிட்டுள்ளார். 16 பொதுத்துறைப் பாதுகாப்பு நிறுவனங்கள் உட்பட, கடலோரக் காவல்படை, பாதுகாப்பு சிவிலியன் பதவிகள் போன்ற துணை இராணுவப்படை வீரர் பணியமர்த்தலில் அக்னிவீரர்களுக்கு 10 சதவிகிதம் இட ஒதுக்கீடு வழங்கப்படும் என்று முப்படை உயர் அதிகாரிகள் கூட்டத்தில் அவர் முடிவெடுத்தார். படை வீரராக விரும்பும் இந்திய இளைஞர்களுக்கு, இந்த அக்னிபத் திட்டம் அவர்களுக்கும் நாட்டுக்கும் நலன் பயக்கும் என்று உணர்த்தவேண்டியது அவருக்கும் அவரது அதிகாரிகளுக்கும் முன்னிருக்கும் கடும் சவாலாகும்.

அக்னிபத் திட்டம் குறித்த ஒரு சுவாரஸ்யமான புரிதல் என் மனதில் எழுகிறது. அண்மையில், புதுதில்லி வந்திருந்த அமெரிக்க ஜெனரல் சார்ல்ஸ் ஏ ப்ளின், லடாக்கில் இந்திய எல்லைக்கு அருகில் சீனா ஒரு மாபெரும் படைக் குவிப்பையும் இராணுவ உள் கட்டமைப்பையும் அமைத்து வருவது 'ஓர் எச்சரிக்கையாகவும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகவும்' குறிப்பிட்டிருந்தார்.

எதிர்க்கட்சி அரசியல்வாதிகளுக்கு ஜெனரல் ப்ளின் வழங்கிய இந்த எச்சரிக்கை, மோடி அரசுக்கு எதிராகச் சுழற்றக் கிடைத்த சாட்டை ஆனது. சீனா உருவாக்கி வரும் இக்கட்டமைப்பு குறித்து இந்தியாவிற்குக் கூற அமெரிக்கா தேவைப்படுகிறதா என்ற விமர்சனத்தை அவர்கள் எழுப்பினர். இந்தியாவையே ஆளும் மோடி-ஷா-தோவல் என்ற மும்மூர்த்திகள், பல மாதங்களாகச் செயல்பட்டுவரும் இந்த சீனக் கட்டுமானம் குறித்து அறிந்திருக்கவில்லை என்பதை என்னால் நம்பமுடிய வில்லை. இந்தப் பின்னணியில், இந்திய இராணுவத்தின் தயார் நிலைக்கான ஒரு படியாக இந்த அக்னிபத் திட்டம் இருக்குமோ என்ற எண்ணம் எழுகிறது. வெறும் இரண்டாண்டு கடும் போர்ப்பயிற்சி பெற்று, இமய மலையில் சீன இராணுவத்தை எதிர்க்கும் திறனை இந்த இளைஞர்கள் எப்படிப் பெற முடியும் என்ற அச்சு றுத்தும் கேள்வியும் எழுகிறது. ஈழப் போரின் இறுதிக் கட்டத்தில், சில நாட்கள் மட்டுமே ஆயுதப் பயிற்சி பெற்ற இளம் சிறார், சிறுமிகள், விடுதலைப் புலிகளால் தங்கள் குடும்பங்களை விட்டுப் பிரிக்கப் பட்டுப் போர் முனையில் அழிந்த, மூச்சை அடைக்க வைக்கும் துயரத்தை என்னால் இன்னும் மறக்க முடியவில்லை.

இந்த நிலையில், இந்தியக் கடற்படைத் தளபதி அட்மிரல் ஆர் ஹரி குமார் இந்த அக்னிபத் திட்டம், 'இந்திய இராணுவத்தின் ஒரே மிகப்பெரிய மனித வள நிர்வாக மாற்றம்' என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த மாபெரும் போராட்டங்கள் குறித்த கவலைக் கிடையில் சிறிய கவன ஈர்ப்பு, எதிர்வரும் குடியரசுத் தலைவர் தேர்தலுக்கான எதிர்க்கட்சிகளின் தீவிரச் செயல்பாடுகளிலிருந்து கிடைத்தது. குடியரசுத் தலைவர் ராம் நாத் கோவிந்துக்கு அடுத்தபடி யாகப் பதவியேற்கவிருப்பது யார் என்று தீர்மானிக்கும் 16ஆவது குடியரசுத் தலைவர் தேர்தல் ஜூலை 18 அன்று நடைபெறுகிறது. புதிய குடியரசுத் தலைவர், ஜூலை 25 அன்று பதவியேற்பார்.

சோனியா- ராஹுல்-பிரியங்காவின் காங்கிரஸ் கட்சி சிதிலமடைந்துள்ள நிலையில், குடியரசுத் தலைவர் தேர்தலில் பாஜக வேட்பாளரை எதிர்த்துப் போட்டியிடக் கூடிய வேட்பாளரை நிறுத்த எதிர்க்கட்சிகளை ஒன்றிணைக்கும் பொறுப்பை, மேற்கு வங்க முதல்வரும் திரிணமுல் காங்கிரஸ் கட்சித் தலைவருமான மம்தா பானர்ஜி ஏற்றுள்ளார். ஜூன் 15, புதனன்று, தில்லியில் அவர் கூட்டிய கூட்டத்தில் 17 எதிர்க்கட்சிகள் பங்கேற்றன. மஹாராஷ்ட்ராவின் முன்னாள் முதல்வரும் முன்னாள் மத்திய அமைச்சரு மான ஷரத் பவார், எதிர்க்கட்சிகளின் குடியரசுத் தலைவர் வேட்பாளராக ஏகமனதாகத் தேர்ந்தெடுக் கப்பட்டார். ஆனால், அதை அவர் நிராகரித்து விட்டார். ஜூன் 20 அன்று டில்லியில் அவர் கூட்ட வுள்ள எதிர்க்கட்சித் தலைவர்களின் இரண்டாம் கூட்டத்தில், ஏகமனதாகக் குடியரசுத் தலைவர் வேட்பாளரை இந்த எதிர்க்கட்சிகள் தேர்ந்தெடுக்கவுள்ளனர். 2024 பாராளுமன்றத் தேர்தலில் மீண்டும் நரேந்திர மோடி பிரதமராவதைத் தடுக்க ஒரு மாபெரும் கூட்டணி அமைப்பதற்கான ஒருங்கிணைப்பு மேடையாக இந்தக் குடியரசுத் தலைவர் தேர்தலை எதிர்க்கட்சிகள் பார்க்கின்றன.

தனது தரப்பிலிருந்து ஒருமனதாக வேட்பாளரைத் தேர்ந்தெடுக்க, பாஜக-வும், தனது மாநில அமைப்புகள் மற்றும் கூட்டணிக் கட்சிகளை ஒருங்கிணைக்கும், உயர் மட்டக் குழு ஒன்றை உருவாக்கியுள்ளது. பாஜக-வின் கூட்டணியில் அஇஅதிமுக-வும் உள்ளது. எதிர்தரப்பில் உள்ள காங்கிரஸ் கட்சியைப்போல எம்ஜிஆர் - ஜெயலலிதா கட்சியான இதுவும் ஐ சி யூ-வில் மூச்சு திணறிக்கொண்டிருக்கிறது. கடந்த மே மாதம் நடந்த தேர்தலில் திமுக-வின் மு க ஸ்டாலினிடம் பதவியை இழந்த அதிமுக-வில் முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான கோஷ்டி, எதிர் கோஷ்டியின் தலைவரான ஓ பன்னீர்செல்வத்தைக் கட்சி ஒருங்கிணைப்பாளர் பதவியிலிருந்து அகற்ற முயலும் உட்கட்சிப் பூசல் வலுத்து வருகிறது. எடப்பாடி பழனிச்சாமியின் ஆதரவாளர்களின் 'ஒற்றைத் தலைமை' கோரிக்கை வலுத்து வருகிறது. இது குறித்து விவரமாக நமது அடுத்த சந்திப்பில் பேசுவேன்.

மீண்டும் சந்திப்போம்.

# வெளிநாட்டு உதவிகளைப் பெறுவதில் இலங்கை எதிர்நோக்கும் இடர்பாடுகள்

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் வரவினால் ஆறுதல் அடைந்திருப்பவர்கள் ராஜபக்சாக்கள் மாத்திரமே



♦ வீரகத்தி தனபாலசிங்கம்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதவியேற்று இன்றுடன் சரியாக ஒரு மாதமும் ஒரு கிழமையும் கடந்துவிட்டது. தன்னை ஒரு நெருக்கடிகால பிரதமர் என்று வர்ணிக்கும் அவர் இலங்கை மக்கள் மூன்று வேளை உணவு உண்பதை உறுதிசெய்வதே தனது முதல் பொறுப்பு என்று பதவியேற்ற அன்றே சொன்னார். பிறகு நாட்டின் பொருளாதாரம் எதிர்வரும் மாதங்களில் மேலும் மோசமடையும் ஆபத்து இருக்கிறது என்றும் மக்கள் இரு வேளை உணவுடன் சமாளிக்கவேண்டிய நிலை வரக்கூடும் என்றும் அபாயச்சங்கு ஊதினார். உக்ரெயின் போர் காரணமாக செப்ரெம்பரில் இருந்து உலகளாவிய ரீதியில் தோன்றக்கூடிய பாரிய உணவுத் தட்டுப்பாடு இலங்கையை பெரிதும் பாதிக்கும் என்றும் அந்த நிலைவரம் 2024 வரை நீடிக்கும் என்றும் கூறிய அவர் தினமும் பொருளாதார நிலைவரம் குறித்து அச்சம் தரும் தகவல்களையே வெளியிட்டுக்கொண்டிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

முன்னைய எந்தப் பிரதமரும் விக்கிரமசிங்கவைப் போன்று பொருளாதார நிலை குறித்து நாட்டு மக்களுக்கு தினமும் வகுப்பு எடுத்தில்லை. பாராளுமன்றத்திலும் நேர்காணல்களிலும் நாட்டு மக்களுக்கு தொலைக்காட்சி மூலம் ஆற்றுகின்ற உரைகளிலும் பொருளாதார நிலைவரம் குறித்து விளக்கமளிப்பதில் அவர் உலக சாதனையொன்றை படைக்கப்போகிறார் என்று கொழும்பு ஆங்கிலப்பத்திரிகையொன்று சில தினங்களுக்கு முன்னர் ஆசிரியதலையங்கத்தில் நையாண்டி செய்திருந்தது.

சுதந்திர இலங்கையின் வரலாற்றில் முன்னென்றும் கண்டிராத வகையிலான படுமோசமான பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் பிரதமராக அவர் பதவியேற்றபோது அவருக்கு சர்வதேச சமூகத்துடன் குறிப்பாக மேற்குலகுடன் இருக்கக்கூடிய நெருக்கமான உறவு காரணமாக நெருக்கடியில் ஒரு தணிவு ஏற்படுவதற்கு வாய்ப்பிருக்கும் என்று பலரும் நம்பினர். அவரால் மாத்திரமே நிலை வரத்தில் ஓரளவுக்கேனும் மாற்றத்தைக் கொண்டு வரமுடியும் என்று அரசியல் அவதானிகள் பரவலாக அபிப்பிராயம் வெளியிட்டனர். மக்களும் வானளாவ உயர்ந்து கொண்டு செல்லும் வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க ஏதாவது நிவாரணம் கிடைக்கும் என்று எதிர்பார்த்தார்கள்.

ஆனால், நிலைவரத்தில் எந்த மாற்றமும் இல்லை. மாறாக, பொருளாதார நெருக்கடி மேலும் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. வாழ்க்கைச் செலவு ஒரு கட்டுப்பாட்டுக்குள் இல்லை. மக்கள் சகல பொருட்களுக்கும் தினம் ஒரு விலை கொடுக்கவேண்டியிருக்கிறது. எரிபொருட்களை பெறுவதற்கு மக்கள் மைல் கணக் கில் இரவுபகலாக சுட்டெரிக்கும் வெயிலிலும் கொட்டும் மழையிலும் காத்துநிற்கிறார்கள். எரிபொருள் நிரப்பு நிலையங்கள் இப்போது மக்கள் கிளர்ச்சி செய்யும் இடங்களாக மாறிவிட்டன. இராணுவம் அங்கு குவிக்கப்பட்டுகிறது.



பல்வேறு வரிகளையும் சேவைகளின் கட்டணங்களையும் அதிகரித்து மக்களின் தோள்களில் பொருளாதார நெருக்கடியின் சுமையை ஏற்றிவிட்டு அரசாங்கம் தற்போதைக்கு நிலைவரத்தை மக்கள் பொறுமையுடன் சமாளிக்கவேண்டும் என்றும் அர்ப்பணிப்பைச் செய்யத் தயாராக இருக்கவேண்டும் என்றும் கேட்கிறது. எரிபொருட்களுடனும் அத்தியாவசிய பொருட்களுடனும் வருகின்ற கப்பல்களுக்கு செலுத்துவதற்கு டொலர்களைத் தேடுவதில் அரசாங்கம் தினமும் தலையைப் பிய்த்துக்கொள்கிறது. இதுவே தொடரப் போகின்ற நிலைமை என்றால் விக்கிரமசிங்க பிரதமராக வந்ததன் பயன்தான் என்ன என்று வீதிகளுக்கு இறங்கிய மக்கள் கேட்கிறார்கள்.

இன்றைய நெருக்கடி தன்னால் உருவாக்கப்பட்டதல்ல என்பதால் பிரதமர் பரபரப்பின்றி இருக்கிறார். வெளிநாட்டு ஊடகங்களுக்கு நேர்காணல்களை வழங்கும்போது மிகவும் சாவகாசமாக புன்சிரிப்புடன் அவர் விளக்கமளிக்கிறார். பொருளாதார அனர்த்தத்தில் சிக்கியிருக்கும் ஒரு நாட்டின் பிரதமரின் முகத்தில் காணப்படவேண்டிய வேதனையின் எந்தவொரு அடையாளத்தையும் அவர் முகத்தில் காணவில்லை. முன்னைய அரசாங்கம் எடுத்த தவறான முடிவுகளினால் தான் நெருக்கடி ஏற்பட்டது என்பதை கூறுகின்ற வேளையில் ராஜபக்சாக்களை நேரடியாக பெயர்சொல்லி விமர்சிப்பதை தவிர்க்கிறார். வெளிநாடுகளுடனான உறவுகளை முன்னைய அரசாங்கம் சீர்கெடச்செய்துவிட்டதால் உதவிகளைப் பெறுவதற்கு மீண்டும் நட்புறவைக் கட்டி வளர்க்கவேண்டியிருக்கிறது என்று கூறுவதன் மூலம் சர்வதேச சமூகத்திடம் இருந்து உதவிகளைப் பெறுவதில் உள்ள சிக்கல்களை வெளிப்படையாகவே அவர் ஒத்துக்கொள்கிறார். இவ்வாறான விளக்கங்கள் ஊடாக இன்றைய நெருக்கடிக்கும் தனக்கும் எந்த தொடர்புமில்லை என்று காட்டிக்கொண்டு மக்கள் பொறுமையாக இருந்து தான் எடுக்கின்ற நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பைத் தர வேண்டும் என்று விக்கிரமசிங்க எதிர்பார்க்கிறார். நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்க தன்னால் முடியாவிட்டால் பதவியை விட்டு விலகிச் சென்று விடத் தயங்கப் போவதில்லை என்று கூட பதவியேற்ற தொடக்கத்தில் ஒரு தடவை அவர் கூறினார் என்பதும் கவனிக்கத்தக்கது.

பொருளாதார நெருக்கடியில் ஒரு தணிவை ஏற்படுத்துவதற்காக தொடர்ந்தும் வெளிநாடுகளிடமும் சர்வதேச நிதி நிறுவனங்களிடமும் கடனுதவிகளைப் பெறுவதிலேயே அரசாங்கம் நாட்டம் கொண்டிருக்கிறது. வேறு வழியில்லை. இது இலங்கையின் கடனை மேலும் அதிகரித்துக்கொண்டே செல்லப்போகிறது.

வெளிநாடுகளிடம் இருந்து பொருளாதார உதவிகளைப் பெறுவதில் இலங்கை இன்று எந்தளவுக்கு இடர்பாடுகளை எதிர்நோக்குகிறது என்பதற்கு மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய பாராளுமன்ற சபாநாயகருமான முஹமட் நஷீட் அண்மையில் வெளியிட்ட தகவல் சிறந்ததொரு உதாரணம்.

வெளிநாடுகளிடம் இருந்து இலங்கைக்கு உதவிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கான ஒருங்கிணைப்பாளராக நஷீட்டை பிரதமர் விக்கிரமசிங்க நியமித்திருந்தார். அவர் அண்மையில் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷா டி சில்வாவுடன் உரையாடிய வேளையில் இலங்கைக்கு உதவிசெய்யுமாறு சவூதி அரேபியாவின் முடிக்குரிய இளவரசர் முஹமட் பின் சல்மானிடம் கேட்டபோது பொருளாதார உதவிகளை பெறுவதற்கான உகந்த திட்டம் எதுவும் இலங்கையிடம் இல்லை என்று கூறி கைவிரித்துவிட்டார் என்று குறிப்பிட்டதாக சமூக ஊடகங்களில் தகவல் வெளியாகியிருந்தது. மேலும் ஐக்கிய அரபு இராச்சியத்தின் ஆட்சியாளரிடம் உதவி கேட்டபோது இலங்கை விற்பனை செய்வதற்கு தயாராக வைத்திருக்கும் சொத்துக்களின் பட்டியலைத் தருமாறு அவர் கேட்டதாக நஷீட் கூறியதாக ஹர்ஷா சமூக ஊடகங்களில் பதிவிட்டார்.

இது சர்ச்சையை ஏற்படுத்தியபோது நஷீட் தான் அவ்வாறு ஹர்ஷாவிடம் கூறவில்லை என்று மறுத்தார். ஊடக செய்திகள் தவறானவை என்று கூறிய அவர் பல நாடுகள் இலங்கைக்கு உதவி செய்யத்தயாராயிருக்கின்றன. உதவிகள் வந்துசேரும் என்றும் குறிப்பிட்டார். ஆனால் சவூதி இளவரசரோ அல்லது ஐக்கிய அரபு இராச்சிய ஆட்சியாளரோ தன்னிடம் அவ்வாறு கூறவில்லை என்பதை நஷீட் வெளிப்படையாக மறுக்கவில்லை. அதேவேளை, ஹர்ஷா தான் கூறியவற்றில் இருந்து பின்வாங்கவேயில்லை. தனது நிலைப்பாட்டில் அவர் உறுதியாகவே நிற்கிறார். நஷீட்டிடம் இருந்து அதற்கு இதுவரை பதில் இல்லை.

கொழும்பில் உள்ள ஜப்பானிய தூதுவரும் இலங்கை மீது தாங்கள் நம்பிக்கை இழந்துவிட்டதாக தன்னிடம் கூறியதாக ஹர்ஷா ஊடகங்களுக்கு தெரிவித்தார். இலங்கையில் ஒரு சர்வகட்சி அரசாங்கம் பதவியேற்குமானால் அல்லது கடன் உடன்படிக்கையில் அரசாங்கமும் எதிர்க் கட்சியும் கைச்சாத்திடுமானால் குறுகிய கால கடனுதவியைச்செய்வது குறித்து பரிசீலிக்கமுடியும் என்று ஜப்பானிய தூதுவர் கூறியதாகவும் ஹர்ஷா சொன்னார். இந்த தகவல்கள் குறித்து இது வரையில் எந்த தரப்பிடம் இருந்தும் மறுதலிப்பு இல்லை.

இதனிடையே, எதிர்காலத்தில் இலங்கை கூட்டுவதற்கு முயற்சிக்கும் உதவிவழங்கும் நாடுகள் மகாநாட்டில் சீனாவையும் உள்ளடக்குவதற்கு அவர்களுடன் விரைவில் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கப்போவதாக விக்கிரமசிங்க இந்தியாவின் வியோன் (WION) செய்தி அலைவரிசைக்கு வழங்கிய நேர்காணலில் கடந்த வாரம் கூறியிருந்தார். “முக்கிய உதவியைப் பெறுவதற்கு சீனாவுடன் பேச்சுவார்த்தை நடத்தப்போகிறோம். ஓரளவுக்கு சீனா எமக்கு உதவிக்கொண்டிருக்கிறது. ஆனால், தற்சமயம் இந்தியாவுடன் சேர்ந்து நாம் பணியாற்றிக்கொண்டிருப்பதால், சீனாவிடமிருந்து வரவேண்டிய முக்கிய உதவி வரவில்லை” என்றும் பிரதமர் சொன்னார்.

இலங்கைக்கு உதவுவதில் இந்தியாவுடன் சேர்ந்து பணியாற்ற சீனா தயாராயிருப்பதாக சீன வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் அண்மையில் பெய்ஜிங்கில் கூறியிருந்தார். அதேவேளை கொழும்பில் உள்ள அமெரிக்க தூதுவரும் சீனத தூதுவரும் கடந்தவாரம் சந்தித்து இலங்கைக்கு உதவுவதில் இரு நாடுகளும் ஒத்துழைத்துச் செயற்படுவதற்கான வாய்ப்புகள் குறித்து ஆராய்ந்தார்கள். இலங்கைக்கு உதவுவதில் இந்தியாவுடனும் அமெரிக்காவுடனும் ஒத்துழைத்துச் செயற்படுவதில் சீனா காட்டுகின்ற நாட்டத்தை அவ்விரு நாடுகளும் பொருளாதார நெருக்கடியில் இருந்து தற்காலிகமாக விடுபட இலங்கைக்கு செய்கின்ற அவசர உதவிகளின் பின்புலத்திலேயே நோக்கவேண்டும். இந்தியா போன்று பெருமளவு அவசர உதவியை செய்ய சீனா தயாராயில்லை. அதேவேளை தனது செல்வாக்கு வலயத்தில் இருந்து கொழும்பு விலகிச்சென்று விடாதிருப்பதையும் உறுதி செய்யவேண்டிய அவசியம் பெய்ஜிங்கிற்கு இருக்கிறது. எது எவ்வாறிருந்தாலும், இந்தியாவின் அவ சரகால உதவிகள் கொழும்பை புதுடில்லிக்கு நெருக்கமாகக் கொண்டுசென்று விட்டன என்பதில் சந்தேகமில்லை. அதிலிருந்து இலங்கை தற்போதைக்கு விடுபடமுடியாது.

அதேவேளை, சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாக பணிப்பாளர் கிறிஸ்ராலினா ஜோர்ஜீவாவுடன் சில தினங்களுக்கு முன்னர் நிதியமைச்சர் என்ற வகையில் பேசிய பிரதமர் விக்கிரமசிங்க குறைந்தபட்சம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதமளவிலாவது அவசர மீட்பு உதவியை இலங்கை பெறுவதற்கு வசதியாக அலுவலர்கள் மட்ட பேச்சுவார்த்தைகளை துரிதப்படுத்துமாறு கேட்டுக்கொண்டார்.

(09 ஆம் பக்கம் பார்க்க...)



# இலங்கை நெருக்கடி:

## சர்வதேச நாணய நிதியத்திடம் முன்பே சென்றிருக்க வேண்டும்

### - மத்திய வங்கி ஆளுநர் பேட்டி



இலங்கை முன்கூட்டியே சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாடியிருந்தால், தற்போது ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடியை தடுத்திருக்கலாம் என, அந்நாட்டின் மத்திய வங்கி ஆளுநர் பி. நந்தலால் வீரசிங்கே தெரிவித்துள்ளார்.

வெளியிலிருந்து உதவி கேட்க தாமதம் செய்தது தவறு என, பிபிசி நியூஸ்நைட் நிகழ்ச்சியில் பேசிய அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியம் உட்பட சர்வதேச சமூகத்திடமிருந்து 5 பில்லியன் டாலர்கள் உதவி இந்த ஆண்டு இலங்கைக்குத் தேவை.

மேலும், கடந்த மாதம் வரலாற்றில் முதல் முறையாக தான் கட்ட வேண்டிய வெளிநாட்டுக் கடனை இலங்கை கட்டத் தவறியது.

“சர்வதேச நாணய நிதியத்திடம் செல்லும் முடிவை முன்கூட்டியே எடுத்திருந்தால், கடனை திருப்பி செலுத்துவதற்கான நடைமுறைகளை ஓராண்டுக்கு முன்பே தொடங்கியிருந்தால், நாட்டில் இத்தகைய துன்பங்கள் நேராமல் இந்த சூழ்நிலையை சமாளித்திருக்கலாம்” என நந்தலால் வீரசிங்கே தெரிவித்தார்.

கடும் எரிபொருள் பற்றாக்குறை, உணவுப்பொருட்களின் விலை உயர்வு, மருந்துகள் பற்றாக்குறை உள்ளிட்டவற்றை சந்தித்து வரும் இலங்கையின் பொருளாதாரத்தை சீர்படுத்தும் முயற்சியில் அவர் ஈடுபட்டுள்ள நிலையில், இத்தகைய கருத்துகளை தெரிவித்துள்ளார்.

ஐநா உலக உணவு திட்டத்தின் சமீபத்திய கணக்கெடுப்பின்படி, மூன்றில் இரண்டு பங்கு இலங்கை குடும்பங்கள், எடுத்துக்கொள்ளும் உணவின் அளவை குறைத்துக்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது தெரியவந்துள்ளது.

பிரிட்டனிடமிருந்து 1948ஆம் ஆண்டில் இலங்கை சுதந்திரம் அடைந்ததில் இருந்து இதுவரை காணாத மோசமான பொருளாதார நெருக்கடியை இலங்கை சந்தித்து வருவதாக வீரசிங்கே தெரிவித்தார்.

வரும் திங்கள்கிழமை (ஜூன் 20) சர்வதேச நாணய நிதியத்தின் குழுவினர், இலங்கைக்கு செல்லவுள்ளனர். அவர்களுடன் நடைபெறும் சந்திப்புகளில் முக்கிய பங்கேற்பாளராக வீரசிங்கே இடம்பெற உள்ளார்.

ஆனால், இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக இருந்த அஜித் நிவார்ட் கப்ரால் ராஜினாமா செய்த நிலையில், அப்பதவியில் நியமிக்கப்பட்ட வீரசிங்கே, முழு பதவிக்காலமான ஆறு ஆண்டுகளுக்கு இம்மாத இறுதியில் நியமிக்கப்படுவாரா என்பதில் உறுதியற்ற சூழல் நிலவுகிறது.

“இப்பதவியில் தொடர்வதற்கான எனது விருப்பத்தை நான் வெளிப்படுத்தியுள்ளேன்,” என்றார் வீரசிங்கே.

“நான் இப்பதவியை ஏற்றுக்கொண்டபோது, இரு மாதங்கள் மட்டுமே பணியாற்றிவிட்டு திரும்பிச் சென்றுவிடுவேன் என்ற எதிர்பார்ப்பு எனக்கு இருந்ததாக நான் நினைக்கவில்லை. அதுதான் நிலைமை எனில், நான் வந்திருக்க மாட்டேன். இந்த சூழல் என்பது இரு மாதங்களில் சரிசெய்யப்படக்கூடிய ஒன்று அல்ல. நிலைமை சரியாவதற்கு முன் முதலில் நிலைமை மோசமாகும்” என அவர் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் பேச்சுவார்த்தைகளில் சிக்கலாக இருப்பது, சீனாவிடமிருந்து கணிசமான கடனை வாங்கியதாகும், அது இலங்கையின் மொத்தக் கடனில் 15% என்று வீரசிங்கே தெரிவித்தார்.

கடன் வழங்கிய மற்ற அமைப்புகளுக்கு அதனை திருப்பி செலுத்தும் தகுதி குறிப்பிட்ட நாட்டுக்கு உள்ளது என்று உறுதிப்படுத்தினால்தான், அந்நாட்டுக்கு சர்வதேச நாணய நிதியம் உதவி செய்யும் என்பது அந்நிதியத்தின் கொள்கையாக உள்ளது.



“இலங்கையின் நல்ல நண்பன் என்ற முறையில் சீனா உதவும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்,” என வீரசிங்கே தெரிவித்தார்.

இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் பணியாளர்கள், வீரசிங்கே அதே பொறுப்பில் நீடிக்க வலியுறுத்தி அந்நாட்டின் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவுக்கு கடிதம் ஒன்றை எழுதியிருந்தனர்.

“இலங்கை மத்திய வங்கி ஆளுநர் பொறுப்பிலிருந்து அவரை நீக்க நினைப்பது, தேசப்பற்று அல்லாத, முற்றிலும் உள்நோக்கம் கொண்டதாக நாங்கள் கருதுகிறோம்,” என அவர்கள் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

வரும் ஆண்டில் வளர்ந்துவரும் 12க்கும் மேற்பட்ட நாடுகள் கடனை திருப்பி செலுத்த முடியாத அபாயத்தில் இருப்பதாக, உலக வங்கி எச்சரித்துள்ளது.

மாலத்தீவு, ருவாண்டா, எத்தியோப்பியா, செனெகல் உள்ளிட்ட நாடுகளும் நிதி நெருக்கடி விளிம்பில் உள்ளதாக நிபுணர்கள் கூறுகின்றனர்.

எகிப்து, கானா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளும் கடுமையாக பாதிக்கப்படக்கூடிய நாடுகளாக கருதப்படுகின்றன.



# வெளிநாட்டு உதவிகளைப் பெறுவதில்...

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஆனால், நாணய நிதியத்தின் உதவிக்கு இவ்வருட இறுதிவரை இலங்கை காத்திருக்கவேண்டும் என்று கூறப்படுகிறது. அலுவலர்கள் மட்ட பேச்சுவார்த்தைகள் நடைபெறுகின்ற போதிலும் கடனுதவிக்கு நாணய நிதியத்தின் நாணய சபையின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும் என்று நிதித்துறை விவகாரங்களில் நிபுணத்துவம் கொண்டவரான ஹர்ஷா டி சில்வா கூறுகிறார். இவ்வாறாக அவசரமாக தேவைப்படுகின்ற உதவிகளைப் பெறுவதில் இலங்கை பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றது.

இந்தியா இறுதியாக வழங்கிய தொடர்கடனுதவி (credit line) யின் கீழான இறுதி எரிபொருள் கப்பல் தற்போது கொழும்பு துறைமுகத்துக்கு வந்திருக்கிறது. இதற்கு பிறகு என்ன செய்வது? மீண்டும் இந்தியாவிடம் கடனுதவி பெறுவதற்கு இலங்கை நாட்டம் காட்டியிருக்கிறது. ஆனால் இந்தியாவினால் எவ்வளவு காலத்துக்கு இவ்வாறு கடனுதவியை தொடர்ந்து செய்துகொண்டிருக்க இயலும் என்ற கேள்வி எழுகிறது. ரஷ்யாவிடமிருந்து எரிபொருட்களைப் பெறுவதற்கு இலங்கை நிர்ப்பந்திக்கப்படக்கூடும் என்று பிரதமர் கூறுகிறார்.

கட்டுப்பாட்டை மீறிச்சென்று கொண்டிருக்கும் பொருளாதார நெருக்கடியினால் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டிருக்கும் 17 இலட்சம் மக்களுக்கு அடுத்த நான்கு மாதங்களுக்கு உயிர்காக்கும் உதவிகளை வழங்குவதற்காக 4கோடி 72 இலட்சம் டொலர்களை திரட்ட இலங்கையில் உள்ள ஐக்கிய நாடுகள் குழுவும் அரசாங்க சார்பற்ற தொண்டர் நிறுவனங்களும் “ கூட்டு மனிதாபிமானத் தேவைகள் மற்றும் முன்னுரிமைகள் திட்டத்தின்” கீழ் அழைப்பு விடுத்திருக்கின்றன. இலங்கைக்கு உணவு உதவிக்காக ஐ.நா. வேண்டுகோள் விடுப்பது இதுவே முதற்தடவையாகும்.

“தற்போதைய பொருளாதார நெருக்கடி உள்நாட்டுப் போரின் முடிவுக்கு பின்னரான அமைதிக் காலகட்ட பயன்கள் உட்பட பல பயன்களை மறுதலையாக்கும் அச்சுறுத்தலை தோற்றுவிக்கிறது. பலரைப் பொறுத்தவரை அடிப்படை மனித உரிமைகள் அனுபவிப்பும் ஆபத்துக்குள்ளாகி இறுதியில் சமூகக் கூட்டிணைவு மீது தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். விரைந்து செயற்படாவிட்டால் எமது கண் முன்னாலேயே இலங்கை பாரிய மனிதாபிமான நெருக்கடிக்குள் மூழ்கப்போகிறது” என்று கொழும்பில் உள்ள ஐ.நா. பிரதிநிதி ஹன்னா சிங்கர் ஹம்டி அபாய அறிவிப்பு செய்திருக்கிறார். அதன் அர்த்தம் நாடு பெரும் அராஜகத்தில் மூழ்கப்போகிறது என்பதேயாகும். அரசாங்க அலுவலகங்களும் பாடசாலைகளும் ஒழுங்காக இயங்கமுடியாத நிலை தோன்றிவிட்டது. அத்தியாவசியமான சேவைகளைத் தவிர மற்றைய அரசாங்க அலுவலர்கள் இரு வாரங்களுக்கு வீடுகளில் இருந்து பணியாற்றுமாறும் மாணவர்கள் பாடசாலைகளுக்கு வராமல் வீடுகளில் இருந்து இணையவழியில் கல்வி கற்குமாறும் கேட்கப்பட்டிருக்கிறார்கள்.

பிரதமர் விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரை, வேறு எந்த அரசியல்வாதியும் பிரதமர் பதவியை பொறுப்பேற்று சவால்களைச் சந்திக்க தயாரில்லாத நிலையில் பிரதமராக தான் பதவியேற்க முன்வந்ததை வெளிநாட்டு ஊடகங்களுக்கு கூறுவதில் பெருமையடைகிறார். வியோன் அலைவரிசையின் செய்தியாளர் பிரதமரிடம் “இன்றைய சவாலுக்கு முகங்கொடுக்கக்கூடிய தகைமை உங்களிடம் தான் இருக்கிறது” என்று கூறியபோது “என்னைவிடவும் கூடுதல் தகைமையடையவர்கள் இருக்கலாம்.ஆனால் எவரும் சவாலை ஏற்பதற்கு முன்வரவில்லையே. நான் அதை எதிர்கொள்ள முன்வந்தேன். யாராவது ஒருவர் அவ்வாறு செய்து நாட்டை நெருக்கடியில் இருந்து மீட்கவேண்டுமே” என்று அவர் பதில் சொன்னார்.

விக்கிரமசிங்கவுக்கு கால அவகாசத்தைக்கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் எதிரணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரிடம் தோன்ற ஆரம்பித்திருப்பதையும் காணக்கூடியதாக இருக்கிறது. அவரின் அழைப்பையேற்று பலர் கடந்தவாரம் பொருளாதார நெருக்கடி குறித்த கலந்துரையாடலில் பங்கேற்றார்கள்.மற்றவர்கள் ஏற்க முன்வராத சவாலுக்கு முகங்கொடுக்க முன்வந்தவர் என்ற படிமம் தான் விக்கிரமசிங்கவின் பெரிய பலமாக இன்று இருக்கிறது.

இதேவேளை, பிரதமரின் வருகையை அடுத்து கடந்த ஒரு மாதத்துக்கும் கூடுதலான காலகட்டத்தில் காணக்கூடியதாக இருக்கும் குறிப்பிடத்தக்க ஒரு “மாற்றம்“ என்னவென்றால் ராஜபக்சாக்கள் மிகவும் ஆறுதலடைந்திருக்கிறார்கள். தங்களது எதிர்கால அரசியல் குறித்து சிந்தித்து வியூகங்களை வகுக்க அவர்கள் ஆரம்பித்திருக்கிறார்கள்.

மக்கள் கொந்தளிப்பின் உச்சக்கட்டத்தில் அரசியலமைப்புக்கான 20 திருத்தத்தை இல்லாமல் செய்து 19வது திருத்தத்தை மீண்டும் கொண்டுவருவதாகவும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதற்கு முன்னெடுக்கப்படக்கூடிய எந்தவொரு முயற்சியையும் ஆதரிக்கத் தயாராக இருப்பதாகவும் கூறிய ஜனாதிபதி கோதாபய ராஜபக்ச இப்போது தனது பதவிக்காலத்தின் எஞ்சிய இரு வருடங்களுக்கும் முழுமையான அதிகாரங்களுடன் தொடர்ந்து பதவியில் இருக்கப்போவதாக அறிவித்திருக்கிறார்.

ஒன்றில் ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்படவேண்டும் அல்லது பாராளுமன்றம் ஆட்சிமுறையில் இருந்து விலக்கிவைக்கப்படவேண்டும் என்றும் அண்மைய புளூம்பேர்க் நேர்காணலில் அவர் கூறியதைக் கண்டோம். 21வது திருத்த வரைவு மீதான செயன்முறைகள் படிப்படியாக சோர்வடைந்து போயிருக்கின்றன. பாராளுமன்ற கட்சித்தலைவர்களுடன் மீண்டும் ஆராயவேண்டியிருக்கிறது என்றும் அமைச்சரவையில் ஆராய்ந்து இறுதி முடிவெடுக்கப்படும் என்றும் கூறி பிரதமரும் அந்த திருத்தம் குறித்து பெரிதாக இப்போது அக்கறை காட்டுவதாக இல்லை.

அவர் ராஜபக்சாக்களை காப்பாற்றுவதற்குத் தான் அரசாங்கத்தை பொறுப்பேற்றாரோ இல்லையோ..... அவரின் வருகைக்குப் பிறகு வேறு எவரும் அல்ல ராஜபக்சாக்களே ஆறுதலாக இருக்கிறார்கள் என்பது மாத்திரம் உண்மை.

ஈழநாடு



# 1987 யூனில் வான் வழியாக மனிதநேயம்! 2022 யூனில் கடல் வழியாக மனிதாபிமானம்!

## ஏதாவது புரிகிறதா?

**பனங்காட்டான்**

இலங்கையின் இன்றைய மோசமான அரசியல் போக்கையும் எதிர்பாராத நகர்வுகளையும் போன்று வேறு எந்த நாட்டிலாவது இடம்பெறுகிறதா என்று கேட்டால், தயக்கமின்றி இல்லையென்று பதில் கூறலாம்.

அரசியல் அறிவற்ற, இராணுவ செயற்பாடுகள் மட்டுமே தெரிந்தவர் ஜனாதிபதியாக உள்ளார். பொதுஜன பெரமுன வேட்பாளராக இவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டிருந்தாலும், எந்தவொரு அரசியல் கட்சியிலும் இது வரை கோட்டாபய உறுப்பினரல்லர்.

இலங்கையின் எழுபத்தைந்து வருட அரசியல் வரலாற்றில் இவ்வாறான ஒருவர் அதன் தலைவரானது இதுவே முதன் முறை - அதுவும் நிறைவேற்று அதிகாரங்களுடன்.

இதற்கு மாறாக நாற்பத்தைந்து வருடகால அரசியலில் நீந்திச் சுழியோடி, ராணுவ நடவடிக்கைகளுக்குட்பட்ட அரசாங்கங்களில் பிரதமராகவும் அமைச்சராகவும் அனுபவம் பெற்றவர் இப்போது பிரதமராகியுள்ளார். இதிலுள்ள முக்கியம் என்னவெனில், ரணில் விக்கிரமசிங்க கடந்த தேர்தலில் முழுமையாகத் தோல்வியடைந்த கட்சியின் தலைவர். அத்துடன் இவரும் தோல்வி கண்டவர். இறுதியில் தேசியப்பட்டியலூடாக எம்.பியாகி இன்று பிரதமராகியுள்ளார்.

கோட்டா - ரணில் ஷ சம்பந்தத்தை;, பதிவுத் திருமணமாகப் பார்க்க முடியாது. மோதிரம் மாற்றிய திருமணமும் இல்லை. மேற்குலக வாழ்வு முறையிலுள்ள ஷகூடி வாழுவோம்; (Living together) மட்டுமே. எப்போதும் பிரிந்து செல்லும் உரிமை இருவருக்கும் உண்டு. இதில் யார் முந்துவார் என்பது தான் தற்போது பலரிடமும் உள்ள கேள்வி.

கோட்டாவும் ரணிலும் நெருக்கடியான சந்தர்ப்பத்தை தங்கள் எதிர்காலத்துக்காக நன்றாகப் பயன்படுத்துகிறார்கள். உதாரணத்துக்கு முக்கியமான ஒன்றைக் குறிப்பிடலாம்.

கோட்டா வீட்டுக்குச் செல்ல வேண்டும் என்று தொடரும் போராட்டத்தை மெதுமெதுவாக மழுங்கடிக்க ரணில் தேவைப்படுகிறார். பௌத்த மகாசங்கங்கள் கேட்ட சர்வகட்சி அரசாங்கம் இதுதான் என்று காட்டுவதற்கு சில மாற்றுக் கட்சி எம்.பிக்கள் அமைச்சர்களாக்கப்பட்டுள்ளனர். நிமால் சிறிபால டி சில்வா, மகிந்த அமரவீர, ஹரின் பெர்னான்டோ, மனுஷ நாணயக்கார ஆகியோர் பெயர் குறிப்பிடப்பட வேண்டியவர்கள். கோட்டாவுடன் முன்னர் முரண்பட்டு அமைச்சர் பதவி இழந்த விஜேதாச ராஜபக்ச, அலி சப்றியின் இடத்துக்கு நீதி அமைச்சராகியுள்ளார். சஜித் அணியிலிருந்த சம்பிக்க ரணவக்க சுயாதீன எம்.பியாகியுள்ளார்.

இந்த அதிரடிகள் கோட்டாவுக்குக் கிடைத்த வெற்றியாக நோக்கப்படுகிறது. தனது இரத்த உறவுகளை அகற்றிவிட்டு மாற்றான் தோட்டத்து மல்லிகைகளை முற்றத்தில் நிறுத்தியதால் கோட்டா கோ கம சற்று ஓய்வெடுக்கிறது. இது இடைக்கால ஓய்வு மட்டும்தான்.

ரணிலைப் பொறுத்தளவில், தம்மை அரசியலில் பூச்சியமாக்கிய சஜித் பிரேமதாசவை அரசியல் அரங்கிலிருந்து அடித்து வீழ்த்தி, வீட்டுக்கு அனுப்ப வேண்டுமென்பதே மூலத்திட்டம். அப்படிச் செய்வதன் மூலம் சஜித்துடன் அள்ளுப்பட்டுச் சென்ற முன்னாள் ஐக்கிய தேசிய கட்சியினரை மீண்டும் தம் பக்கம் இழுக்கலாம் என்பது இலக்கு.




இதனை ரணில் கச்சிதமாகச் செய்கிறார். இன்றைய அரசியல் சதுரங்கத்தில் இறுதியில் வெல்லப் போவது கோட்டாவா ரணிலா என்பதை பூவா தலையா போட்டுப் பார்க்க முடியாது. இரண்டில் ஒரு ஷதலை; தடுமாறும் போதுதான் அதனைக் கண்டுகொள்ள முடியும்.

மேற்குலகின் செல்லப்பிள்ளையான ரணிலின் முகத்தை முன்னால் நிறுத்தி சர்வதேசத்திலிருந்து பெற வேண்டியவைகளைப் பெற்று, ஒருவாறு தட்டுப்பாடுகளை நிவர்த்தி செய்யும்வரை அட்டமத்துச் சனி ரணிலை அண்டாது.

ரணிலை விரும்பும் இந்தியா எரிபொருளை அள்ளி அள்ளிக் கொடுக்கிறது. முன்னைய கடன் திட்டத்திலான கடைசி எரிபொருள் கப்பல் கொழும்பு சென்றுள்ளது.

மேலும் எரிபொருளை இந்தியாவிலிருந்து பெற ஐம்பது கோடி ரூபாவை கடனாகக் கொடுக்க (ரணிலை நம்பி) மோடி அரசு இணங்கியுள்ளது. உக்ரைன் யுத்தம் காரணமாக மேற்குலகால் ஓரங்கட்டப் படும் ரஸ்யாவிடமிருந்து பெறப்படும் எரிபொருளின் ஒரு பகுதிதான் இந்தியாவால் இலங்கைக்கு வழங்கப்படுகிறது என்பது எவருக்கும் தெரியாததல்ல. இதனை அமெரிக் காவோ பிரித்தானியாவோ தெரிந்தது போலக் காட்டிக் கொள்ளாது இருப்பதும் ஒருவகை அரசியல்தான்.

ரணிலின் நெருங்கிய தொடர்பிலுள்ள சர்வதேச நாணய வங்கி கடன் கொடுக்க இணங்கியுள்ளது. வழமையான நிபந்தனைகளை அது முன் வைக்க கோட்டாவும் அதற்குச் சம்மதித்ததால், அரசாங்க ஊழியரின் வேலை கிழமைக்கு நான்கு நாட்களாகிவிட்டது. வெள்ளிக்கிழமை வீட்டுத் தோட்டமாம். பாடசாலைகளுக்கும் வெள்ளியன்று விசேட விடுமுறை.

பேருந்து - ரயில் சேவைகள் திடுதிப்பென நிறுத்தப்படுகின்றன. கோதுமை மா இன்மையால் வெதுப்பகங்கள் மூடப்படுகின்றன. எரிபொருள் இல்லை, எரிவாயு இல்லை. விவசாயத்துக்கு உரம் இல்லை. அரிசி - காய்கறிகளின் விலை விண்நோக்கி எகிறுகிறது. அடுத்த மூன்று வருடங்களுக்கு மின்வெட்டு தொடருமென அபாய அறிவிப்பு. எரிபொருள் இன்மையால் மீன்பிடியும் முடக்கம். எது இருக்கிறது என்று கேட்டால் அதுவும் இல்லையென்பதே பதிலாகிறது.

அரசாங்க ஊழியர்களை வேலையிலிருந்து நிறுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதால் அவர்கள் ஐந்து வருடம் வெளிநாடுகளுக்குச் சென்று பணியாற்ற சம்பளமற்ற லீவு வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டது. இதற்காக கடவுச்சீட்டுக்கு விண்ணப்பித்தால் வாரக்கணக்கில் காத்திருக்கும் நிலை.

> 1987 யூன் மாதத்தில் மனிதநேயம் என்ற பெயரில் இந்தியா வான் வழியாக தமிழர் தாயகத்தில் உணவுப் பொட்டலங்களை வீசியது. 35 ஆண்டுகளின் பின்னர் அதே யூன் மாதத்தில் மனிதாபிமானம் என்ற பெயரில் முழு இலங்கைக்கும் கடல் வழியாக உணவுப் பொருட்களை இந்தியா அனுப்புகிறது. ஏதாவது புரிகிறதா?



முப்பதாண்டு உள்நாட்டு யுத்த வேளையில் அரச பயங்கரவாதத்தால் பல்லாயிரம் தமிழர் நாட்டைவிட்டு வெளியேறினர். இன்று, அரச இயந்திர ஊழலாலும் தங்கள் எதிர்கால வாழ்வின் நம்பிக்கையின்மையாலும் கோட்டாவின் அறுபத்தொன்பது லட்சம் மக்களில் பலரும் நாட்டை விட்டு ஓட ஆரம்பித்துள்ளனர்.

சரியான தருணம் பார்த்திருந்த அமெரிக்கா உதவிக்கரம் நீட்டுகிறது. இதுவும் ரணிலின் முகத்துக்காக என்பதை சொல்லித்தான் தெரிய வேண்டுமென்பதில்லை.

கோட்டாபய - மகிந்த நிர்வாகத்தில் அமெரிக்காவின் எம்.சி.சி. உடன்படிக்கை நிராகரிக்கப்பட்டது. கிடைத்திருக்க வேண்டிய நானூறு மில்லியன் நன்கொடையை இலங்கை இழந்ததாக அமெரிக்கா அறிவித்தது.

இலங்கையில் நாற்பத்தொன்பது லட்சம் மக்களுக்கு உணவுத்தேவை உள்ளதென கொழும்பிலுள்ள ஐ.நாவின் வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர் அறிவிப்பு விடுக்க, மறுபுறத்தில் அமெரிக்கா இலங்கைக்கு ஆறு மில்லியன் டாலரை வழங்க முன்வந்திருப்பதாக கொழும்பிலுள்ள அமெரிக்க தூதுவர் யூலி சங் அறிவிக்கிறார். இது, நிச்சயம் ரணிலின் மவுசை மேலெழுப்பும்.

இந்தச் செயற்பாடுகளுடன் ஒத்ததாக இந்தியாவின் நகர்வுகளை கூர்ந்து பார்க்க வேண்டும். பிரதமர் மோடியின் நெருங்கிய நண்பரும் கோடீஸ்வர வணிகப் பிரமுகருமான அதானியிடம் (இருவரும் குஜராத் மாநிலக்காரர்கள்) மன்னார் காற்றாலை மின் உற்பத்தித் திட்டம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பிரதமர் மோடி நேரடியாக கோட்டாபயவிடம் இதனைக் கேட்டதாகவும், இந்த விருப்பத்தை கோட்டாபய தம்மிடம் தெரிவித்ததாகவும், அதன் அடிப்படையிலேயே அதானிக்கு இது வழங்கப்பட்டதாகவும் இலங்கை மின்சார சபைத் தலைவர் பெர்னான்டோ கோப் குழுவின் முன்னால் வாக்குமூலமளித்தார். மறுகணமே இதனை மறுத்து தமது ருவிட்டரில் கோட்டாபய பதிவிட்டார். இறுதியில் மின்சார சபைத் தலைவர் பதவியிழந்தார்.

ஒரு ஜனாதிபதி ருவிட்டர் மூலம் பதிலளிக்கும் தரத்துக்கு இறங்கியுள்ளதை என்னென்று சொல்வது. இந்த இருவரில் யார் பொய்யர்? மின்சார சபைத் தலைவர் பொய் சொல்லவில்லையென்றால் அவரைப் பதவி விலகுமாறு ஏன் கூற வேண்டும்? உண்மையைச் சொன்னதால்தான் அவரின் ராஜினாமா ஜனாதிபதியால் ஏற்கப்பட்டுள்ளது என்பது அம்பலமாகியுள்ளது.

மோடியின் பாரதிய ஜனதாக் கட்சியின் தலைமைத் தளமான ஆர்.எஸ்.எஸ் இன் முக்கிய நிர்வாகி ராம் மாதவ் சில நாட்களுக்கு முன்னர் ரகசியமாக கொழும்பு சென்று ரணிலைச் சந்தித்து பேசியுள்ளார். மன்னார் காற்றாலையைப் பொறுப்பேற்றுள்ள அதானி தமது சொந்த உலங்கு வானூர்தியில் மன்னாருக்கு மேலாகப் பறந்து சென்று நகரை அளந்துள்ளார்.

இலங்கையில் என்ன நடைபெறுகிறது? இவைகளை உற்று நோக்கும்போது 1987 மீண்டும் ஞாபகம் வருகிறது.

1987 யூன் மாதம் நான்காம் திகதி தமிழர் தாயகத்தைக் காப்பாற்றும் (?) நோக்கில் இந்தியாவின் பத்து விமானங்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டில் புகுந்து உணவுப் பொட்டலங்களை வீசின. அரிசி, வெட்டுப்பாண் துண்டுகள், சிறு போத்தலில் எண்ணெய், பூசணிக்காய் என்பவை இந்தப் பொட்டலத்துக்குள் இருந்தன. இது புதிய பாதை ஒன்றுக்கான ஆரம்பம்.

இன்று முப்பத்தைந்து ஆண்டுகளின் பின்னர், அதே யூன் மாதத்தில், கப்பல் வழியாக முழு இலங்கைக்குமென இந்தியா நிவாரணமாக உணவுப் பொருட்களை அனுப்பி வைக்கிறது. குட்டித் தீவின் அனைத்துப் பகுதிகளிலும் இவை விநியோகிக்கப்படுகின்றன.

1987ல் தமிழர் தாயகத்தை இலக்கு வைத்து உணவு விநியோகம். 2022ல் முழு இலங்கையையும் நோக்கி உணவு விநியோகம். ஏதாவது புரிகிறதா?

# எமனாகும் வீதிகள்....? தவிர்ப்பது எப்படி....?



இலங்கையில் சராசரியாக ஒவ்வோர் ஆண்டும் வீதி விபத்துக்கள் மூவாயிரம் பேரை பலி எடுக்கின்றன. 8 ஆயிரம் பேரை படுகாயங்களுக்கு அல்லது அங்கவீர்களாக உருவாக்குகின்றன என்று உலக வங்கியின் அறிக்கை கூறுகிறது. நாட்டில், அண்மை ஆண்டுகளில் தோராயமாக 33 ஆயிரம் தொடக்கம் 44 ஆயிரம் வரையான விபத்துக்கள் ஏற்படுகின்றன என்று போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேபோன்று, புகையிரத விபத்துக்களால் ஆண்டுக்கு 400 - 600 வரையான மரணங்கள் பதிவாகின்றன. வாகனங்களின் அதிகரிப்பு - வீதித் தரங்கள் - வீதிகளில் குறுக்கிடும் மிருகங்கள் என்பனவும் வீதி விபத்துக்களுக்கு காரணம் என்று ஒருபக்கம் சுட்டப்பட்டாலும் இந்த விபத்துக்களுக்கு முதன்மை காரணம் ஒன்றே ஒன்றுதான் அது மனிதத் தவறு. நாம் விடும் தவறுகளே வீதிகளில் எமக்கு எமனாகின்றது அல்லது எங்களை முடமாக்கி ஓர் ஓரத்தில் முடக்கி விடுகின்றது.

வீதி விபத்துக்கள் என்பவை தவிர்க்க முடியாதவை அல்ல, நாம் வீதியில் பயணிக்கும் முன்னர் - வாகனத்தை செலுத்தும்போது சில விநாடிகள் நிதானித்தலே போதும் எம்மை விபத்துக்களில் இருந்து காத்துவிடலாம். தினமும் விபத்துக்களால் பாதிக்கப்பட்டு, உயிரிழப்புகள் - படுகாயங்கள் - அங்கவீனர்களை கண்டவர்கள் - காண்பவர்கள் மருத்துவர்கள். விபத்துக்களை சந்தித்தவர்கள் படும் வலிகள் - வேதனைகள் - ரணங்கள் - இயலாமைகளை கண்டு அவர்களின் உயிர்களை காக்கப் போராடும் மருத்துவர்கள் - இந்த மருத்துவ நெருக்கடி காலத்தில் விபத்துக்களை தவிர்ப்பதன் அவசியத்தை மக்களுக்கு விழிப்புணர் வூட்ட கருத்துரைக்கின்றனர்.

அறிக்கையிடல்
REPORTING
என். குகராஜ்

## விபத்தால் வாழ்நாள் முழுவதும் பாதிப்பை எதிர்கொள்ளாதீர்கள்



**என். கோபிசங்கர்,** என்பு முறிவு சத்திர சிகிச்சை நிபுணர், யாழ். போதனா மருத்துவமனை.

நாடளாவிய ரீதியில் நாங்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் பல இருக்கின்றன. இந்தப் பிரச்னைகள் மத்தியிலும் இன்றும் வீதி பாதுகாப்பை சரியாகக் கடைபிடிக்காமையால் ஏற்படுகின்ற வீதி விபத்துக்கள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன.

கொரோனா பிரச்னையைப் பற்றி கூறுகின்றோம். நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி தொடர்பில் பேசுகின்றோம். அசாதாரண நிலை தொடர்பில் பேசுகின்றோம். எனினும், வீதியில் ஏற்படுகின்ற விபத்துக்கள் குறைந்தபாடாக இல்லை - அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. ஏன் இந்த விபத்துக்கள் ஏற்படுகின்றன என்ற கேள்விக்கு விடை தேடும்போது பல்வேறு காரணிகள் அமைகின்றன.

இது தொடர்பில், மக்களுக்கு விழிப்புணர்வு இருந்தும் அதற்குரிய தெளிவு இருந்தும் அவர்கள் அதைத் தவிர்ப்பதற்கு அல்லது தங்களை பாதுகாத்துக் கொள்வதற்கு முன் வரவில்லை. கடந்த சில வாரங்களில், புகையிரத கடவையில் விபத்துக்கள் அதிகளவில் இடம்பெறுகின்றன.

புகையிரதக் கடவையில் ஏற்படும் விபத்துக்கள் தொடர்பில், மக்களுடைய குற்றச்சாட்டு என்னவென்றால் அங்கே புகையிரதக் கடவை இல்லை, மின்சாரம் இல்லை, சமிக்ஞை வேலை செய்யவில்லை என்பதே. ஒவ்வொருவருமே புகையிரதக் கடவையை கடக்கும்போது ரயில் வரும் என நினைக்க வேண்டும். அது மின்சாரம் இருக்கிறதா இல்லையா என்பதல்ல, புகையிரதம் வரக்கூடிய நேரத்தை அவதானித்து - உற்றுக் கேட்டு ஒரு நிமிடம் வாகனத்தை நிறுத்தி இரு பக்கமும் பார்த்த பின்னரே புகையிரத கடவையைக் கடக்க வேண்டும்.

நீங்கள் சாரதி அனுமதிப் பத்திரத்தை எடுக்கும்போது சரியான முறையில் எடுத்திருந்தால் இது சம்பந்தமான பூரண அறிவு உங்களுக்கு இருக்கும். குறிப்பாக, பாதசாரி கடவைகளிலும் யாருமே இல்லாத சமயம்கூட எமது வாகனத்தை ஓரளவு வேகத்தைக் குறைத்து மெதுவாக கொண்டு வந்து நிறுத்தித்தான் மீண்டும் பயணிக்க வேண்டும். இதனை யாருமே செய்வதில்லை வீதியைக் கடப்பதற்கு முன்னாலும் பின்னாலும் செல்கின்றார்கள்.

ஒரு விபத்து சம்பவித்தால், உடனே நான் பிழை விடவில்லை பின்னால் வந்தவர் இடித்து விட்டார் என முரண் படுவார்கள். 15 வருடம் - 20 வருடம் வாகனம் செலுத்துகின்றோம் என்று, அது பிழையான விடயம் மற்றவருக்கு ஒரு பிழையான உதார ணத்தை எடுத்துக் கொடுக்கும், அவ்வாறான விடயங்களை நிறுத்த வேண்டும்.

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை ஏற்றிச் செல்லும் போது, தமக்கு மாத்திரம் தலைக்கவசத்தை அணிந்து பிள்ளைகளுக்கு தலைக்கவசம் அணியாது செல்கின்றார்கள். பாடசாலைக்காக இருக்கலாம் தனியார் வகுப்புக்காக இருக்கலாம் தமது பிள்ளைகளுக்கு ஒரு பிழையான முன்னுதாரணத்தை ஏற்படுத்துகிறார்கள். அதாவது அப்பா மாத்திரம் தலைக்கவசம் போட்டால் போதும், நான் தலைக்கவசம் போடத் தேவையில்லை என்று, அந்த பிள்ளைக்கு ஒரு பிழையான வழிகாட்டலை ஏற்படுத்துகிறீர்கள். அத்துடன், பிள்ளைகளுக்கு பிழையான முன்னுதாரணம் தேடுகின்றீர்கள். இது, எதிர்கால சமூகத்துக்கு ஒரு பிழையான வழி காட்டலாக அமையும். எனவே, பெற்றோர்கள் சிறுவயதிலிருந்தே தமது பிள்ளைகளுக்கு வீதி ஒழுங்குகள் தொடர்பில் அறிவூட்ட வேண்டும். முதலில் தங்களுடைய பிள்ளைகளை மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் செல்லும்போது கட்டாயமாக தலைக் கவசங்களை அணிந்து செல்ல வேண்டும்.

நான் இன்று காலையில் நோயாளிகளை பார்த்துவிட்டு வருகின்றேன் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் வீதி விபத்தால் படுகாயமடைந்திருக்கின்றார்கள். ஒரு வயது முதிர்ந்த தாய் உட்பட, அந்த வயது முதிர்ந்த தாய் எந்த பிழையும் விடவில்லை. ஆனால், பின்னால் வந்த வாகனம் முட்டி மோதி அந்த வயது முதிர்ந்த தாய் என்று அதி தீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வாகனம் வீதியில் பயணிக்கும்போது - அதாவது சிறிய வீதியிலிருந்து, பெரிய வீதிக்கு வரும்போது கட்டாயமாக நிறுத்தி ஒரு நிமிடம் அவதானித்துத்தான் பிரதான வீதிக்கு வர வேண்டும். ஆனால், அவ்வாறு இங்கே இடம் பெறுவதில்லை. அதன் காரணமாகப் பல உயிரிழப்புக்கள் மற்றும் பல காயங்களுடன் வைத்தியசாலையில் பேர்க்கப்படுகின்றார்கள். அத்துடன் பலர் நிரந்தர நோயாளிகளாக உள்ளாகின்றார்கள். இது தவிர்க்கப்பட வேண்டும்.

நான் வீதி விபத்து தொடர்பில் கதைக்கும் போது, மருத்துவர் ஏன் வீதி விபத்து பற்றி கதைக்கிறார் என கேள்வி எழுப்பலாம்.

ஒரு சமுதாய பொறுப்பை உணர்ந்து மற்றவர்களுக்குப் பாதுகாப்பாக இருப்பதோடு, இந்த வீதி விபத்துகள் நடக்காமல் தடுப்பது. எங்கள் அனைவரிதும் கடமை என்பதை உணர வேண்டும். மற்றவர்களுக்கு விட்டுக் கொடுங்கள். நான்தான் என்று சொல்லாதீர்கள். மற்றவர்கள் பிழைவிட்டால், நீங்கள் சரியாக செல்லுங்கள்.

வேகமாக சென்று வீதி விபத்தில் அகப்பட்டால் அது தங்கள் குடும்பத்தையும் தங்களை சார்ந்தோரையும் கடுமையாக பாதிக்கும். அத்துடன், அவசர வேலையாக இருந்தாலும் கட்டாயமாக தலைக்கவசம் அணிந்து செல்ல வேண்டும். பொலிஸாருக்காக தலைக் கவசம் அணியாதீர்கள். வீதி ஒழுங்குகளை கடைப்பிடியுங்கள். வீதி விபத்துக்களை சரியாகப் பாதுகாக்க வேண்டியது அனைவரின் கடமையாகும்.

வீதி விபத்துக்களில் பாதிக்கப்பட்டவர் வாழ்நாள் பூராகவும் காயம்மாறாத அளவுக்கு அவர்களின் எலும்பு மற்றும் தசைநார்கள் பாதிக்கப்படுகின்றன. எனவே, ஒரு விபத்தில் இவ்வாறு பாதிக்கப்படுவதில் இருந்து நீங்களாகவே தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

## யாழ்ப்பாணத்தில் அதிக விபத்துகள் ஏன்?



**சி. யமுனாநந்தா,** பிரதிப் பணிப்பாளர், யாழ். போதனா மருத்துவமனை.

யாழ்ப்பாண மாவட்டத்தில் வீதி விபத்துக்கள் தொடர்பில் கவனம் செலுத்துவோமாக இருந்தால், யாழ். போதனா மருத்துவமனையில் கடந்த 2020ஆம் ஆண்டு 2 ஆயிரத்து 560 பேர் விபத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்றுள்ளார்கள். 2021ஆம் ஆண்டு ஆயிரத்து 600 பேர் விபத்துகளால் காயமடைந்து சிகிச்சை பெற்றுள்ளனர். 2022 ஆம் ஆண்டு முதல் காலாண்டில் மட்டும் 600 பேர் விபத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்றுள்ளனர்.

இந்த விபத்துக்கள் குறித்து நாம் கவனிக்க வேண்டியது என்னவென்றால்,

2021ஆம் ஆண்டு நாடு பூராகவும் கொரோனா தொற்று பரவலால் சமூக முடக்கம் அதிகளவில் காணப்பட்டது. இதனால், யாழ்ப்பாணத்தில் விபத்துக்கள் குறைவாக இருந்தன. 2020ஆம் ஆண்டளவில் ஏற்பட்ட விபத்துக்கள்போல் இந்த வருடமும் அதிகளவில் ஏற்பட்டுள்ளன. 2020ஆம் ஆண்டு 46 பேர் வீதிவிபத்துகளால் உயிரிழந்தனர். 2021ஆம் ஆண்டு 26 பேரும், இந்த ஆண்டின் முதல் காலாண்டில் மட்டும் 23 பேர் விபத்துக்களால் மரணமாகினர். வீதி விபத்துக்கள் தொடர்பில் பொதுமக்கள் மத்தியில் விசேட விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியுள்ளது.

இதேபோல், புகையிரதத்துடன் மோதுண்டு உயிரிழக்கும் சந்தர்ப்பங்கள் யாழ். குடாநாட்டில் நடந்துள்ளன. வருடம் ஐந்து பேர் சராசரியாக புகையிரத விபத்துக்களில் உயிரிழக்கின்றனர். குறிப்பாக, சாவகச்சேரி, அரியாலை பகுதிகளில் இந்த விபத்துக்கள் அதிகம் நிகழ்ந்துள்ளன. விபத்து நடந்த இடங்களை அவதானிக்கும்போது புகையிரதப் பாதை உயரமான இடமாக உள்ளதால் வாகனத்தின் அக்ஸிலோற்றர் (Accelerator) அமத்திக்கொண்டே கடவையைக் கடக்க முடியும். அடுத்தது, அந்த இடங்கள் பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைகளாகவும் காணப்படுகின்றன.

பாதைக்கு அருகில் தொலைதூரத்தில் புகையிரதம் வருவதை அவதானிக்க தடையாக கட்டடங்கள் வீடுகள் காணப்படுகின்றன. இதனால், தொடர்ச்சியாக அதேஇடங்களில் இறப்புக்கள் கடந்த வருடம் மற்றும் இந்த வருடங்களில் சந்தித்துள்ளோம். இது தவிர்க்கப்பட வேண்டும். இந்தப் பிரதேசங்களில் சில சமூக நிறுவனங்கள் மூலம் பாதுகாப்பு கடவையிடுவது அவசியமாகும். இது கட்டாயமாக செய்யப்பட வேண்டும்.

தற்போது இறப்புகளை பார்க்கும்போது மதிய நேரம் வருகின்ற கடுகதி ரயில் சேவையால்தான் அதிகளவில் விபத்துக்கள் ஏற்படுகின்றன. இந்த புகையிரதமானது மிகவும் வேகமாக வருவதுடன் சத்தமும் இருப்பதில்லை. இதேசமயம் குளிரூட்டப்பட்ட வாகனங்களில் கதவு யன்னல்கள் மூடப்பட்டு இருக்கும் போது புகையிரத சத்தத்தை அவர்களால் அவதானிக்க முடிவதில்லை. அடுத்ததாக மதிய நேரத்தில் இந்த விபத்துக்கள் நடக்கின்றன.

புகையிரதக் கடவைகளில் காவலாளிகளை நியமிப்பதன் மூலமும், மின்சாரம் தடைப்பட்டிருக்கும் சமயத்திலும் சரி, ஏனைய நேரங்களிலும் சரி பொதுமக்கள் அவதானமாக இருப்பதன் மூலமும் இந்த விபத்துக்களைத் தவிர்க்க முடியும்.

(18 ஆம் பக்கம் பார்க்க...)



## ஷிவானியின் ஈர்ப்பு

சின்னத்திரை மூலம் பிரபலமானவர் ஷிவானி. திரைப்படங்களுக்கான வாய்ப்பைப் பெறுவதற்காக கவர்ச்சிப் படங்களை அடிக்கடி தனது சமூகவலைத்தளத்தில் பரவ விடுகிறார்.

அண்மையில் அவர் பதிவிட்ட படங்கள் தான் கடந்த வாரம் சமூகவலைத்தளங்களிலும் பிரபலமாகி வருகின்றன.

## ரஜினி படத்தின் பெயர்!




நடிகர் ரஜினிகாந்த் நடிக்கும் அவரின் 169ஆவது படத்துக்கு “ஜெயிலர்”என பெயரிட்டு, போஸ்ரரை வெளியிடப்பட்டுள்ளது.

“அண்ணாத்த” படத்துக்கு பின் ரஜினியின் 169 ஆவது படத்தை நெல்சன் திலீப் குமார் இயக்குகிறார். தற்போது இந்த படத்துக்கான திரைக்கதை பணிகள் விறுவிறுப்பாக நடந்து வருகின்றன.

ஐஸ்வர்யா ராய், பிரியங்கா மோகன், சிவராஜ் குமார் நடிப்பதாக தகவல்கள் வருகின்றன. அனிருத் இசையமைக்கிறார். இந்நிலையில் இந்த படத்தின் கதை ஜெயில் தொடர்புடையது என்பதால் ஜெயிலர் எனப் பெயரிடப்பட்டுள்ளது. போஸ்ரரி நீண்ட கத்தி ஒன்றும், அதில் ரத்தம் படிந்தும் காணப்படுகிறது.

## இளையராஜாவின் பாராட்டு!

இயக்குநர் வெற்றிமாறனின் வேண்டுகோளுக்காக ‘விடுதலை’ படத்தில் ஒரு பாடலைப் பாடிக் கொடுத்திருக்கிறார் தனுஷ்.

முதன்முறையாக இளையராஜாவின் இசையில் பாட்டுப் பாடி அவரிடம் பாராட்டும் வாங்கியிருக்கிறார் தனுஷ்.

## சமந்தாவின் சம்பளம்?



தமிழ் திரையுலகில் மட்டுமல்ல தென்னிந்திய திரையுலகிலும் இப்போது முன்னணி நடிகை சமந்தாதான்.

அவர் கதை கேட்டு சம்மதம் தெரிவித் துள்ள படங்களின் எண்ணிக்கையே பத்தைத் தாண்டியுள்ளது.

இந்நிலையில், அவரின் சம்பளம் மூன்றிலிருந்து ஐந்து கோடிக்கு இந்திய ரூபாய்க்கு உயர்ந்திருக்கிறது அம்மணியின் சம்பளம்.

## அட்லியுடன் சேரும் விஜய்



விஜயின் அடுத்த படத்தை இயக்கப்போவது லோகேஷ் கனகராஜ் எனக் கிட்டத்தட்ட உறுதியாகியிருக்கும் நிலையில், அட்லியும் தொடர்ந்து பேசிவருகிறார். ஷாருக் கான் படத்துக்கான படப்பிடிப்பு இடைவெளியில் விஜயிடம் ஒரு கதை சொல்லி சம்மதம் வாங்கி வைத்திருக்கிறார் அட்லி.

## சரியாத மதிப்பு!



தமிழில் விஜயுடன் நடித்த பீஸ்ட் படத்துக்குப் பிறகு, தெலுங்கில் பூஜா ஹெக்டே நாயகியாக நடித்து வெளியான ராதே ஷ்யாம், ஆச்சார்யா போன்ற படங்களும் எதிர்பார்த்த வெற்றியைக் கொடுக்கவில்லை.

இதனால், பூஜாவின் மதிப்பு சரிந்துள்ளது. எனினும், அவர் விஜய் தேவரகொண்டாவுடன் ஜன கன மன என்ற படத்தில் பூஜா ஹெக்டே ஒப்பந்தமாகியுள்ளார். இதேபோல, கே. ஜி. எவ். இரு பாகங்களிலும் நடித்து வெளியான நடிகர் யஷ் நடிக்கும் ஒரு படத்திலும் ஒப்பந்தமாகியுள்ளார் பூஜா.





## திரைப்படம் - 02

**இயக்கம் - ஜி. எஸ். விக்னேஷ்**
**இசை - விஷால் சந்திரசேகர்**
**நடிப்பு - நயன்தாரா, ரித்விக், பரத் நீலகண்டன்**

இரண்டு மணி நேரம் நீட்டிக்கப்பட்ட ஒரு குறும்படமாகவே இந்த “O2“ படம் தெரிகிறது. மிகக் குறைவான கதாபாத்திரங்கள், ஒரே ஒரு பேருந்தில் நடக்கும் கதை என ஒரு குறுகிய வட்டத்திற்குள்ளேயே கதை சுற்றி வருகிறது. அடுத்து என்ன நடக்கும் என்ற ஒரு பரபரப்பு திரைக்கதையில் இல்லாமல் போனது படத்தின் சுவாரசியத்தை வெகுவாகக் குறைத்துவிட்டது.

அறிமுக இயக்குநர் விக்னேஷ்“க்கு அவரின் முதல் படத்திலேயே தமிழ் சினிமாவின் முன்னணி கதாநாயகியாக நயன்தாரா கிடைத்திருந்தும், அதற்கான முக்கியத்துவத்தை படத்தில் கொடுக்கத் தவறிவிட்டார். கதையாக ஒரு தாய்மையின் போராட்டத்தைக் காட்டக்கூடிய கதை. ஆனால், திரைக்கதை அமைத்து காட்சிகளாக மாற்றுவதில் அந்த தாய்மையின் போராட்ட உணர்வைக் கடத்தத் தவறிவிட்டார்.

கணவனை இழந்த இளம் விதவை நயன்தாரா. அவருடைய ஒரே மகன் ரித்விக்குக்கு சுவாசக் கோளாறு இருக்கிறது. எப்போதும் ஒட்சிசன் சிலிண்டர் மூலம்தான் அவன் சுவாசிக்க முடியும். அதற்கான சத்திர சிகிச்சை செய்து கொள்வதற்காக கோயம்புத்தூரிலிருந்து கொச்சிக்கு பேருந்து மூலம் செல்கிறார். கடும் மழைக்கு இடையில் நிலச்சரிவில் அந்தப் பேருந்து சிக்கிக் கொள்கிறது. பேருந்தில் இருப்பவர்களுக்கு சுவாசிக்க ஒட்சிசன் தேவைப்படுகிறது. அதனால், நயன்தாராவின் மகன் ரித்விக்கின் ஒட்சிசன் சிலிண்டரைக் கைப்பற்றி சுவாசிக்க முயற்சிக்கின்றனர். தன் மகனைக் காப்பாற்ற நயன்தாரா என்ன முயற்சி எடுக்கிறார் என்பதுதான் படத்தின் மீதிக் கதை.




கதாநாயகிகளுக்கு முக்கியத்துவம் தரும் கதாபாத்திரங்களைத் தேர்வு செய்வதில் நயன்தாரா எப்போதுமே கவனமாக இருப்பார். இந்தப் படத்தின் கதையையும், கதாபாத்திரத்தையும் கேட்டதுமே தனக்கான வாய்ப்பு அதிகம் இருக்கும் என்று எதிர்பார்த்திருப்பார். ஆனால், அவரின் எதிர்பார்ப்பை இயக்குநர் பூர்த்தி செய்யாமல் விட்டுவிட்டார் என்று படத்தைப் பார்க்கும்போது தோன்றுகிறது. தன் மகனின் ஒட்சிசன் சிலிண்டரைக் கைப்பற்றத் துடிப்பவர்களை எதிர்த்து ஓரிரு முறை போராடுவதுடன் அவரின் போராட்டம் முடிவுக்கு வந்துவிடுகிறது. அந்தக் கதாபாத்திரம் மீது பெரிதாக எந்தவோர் அனுதாபமும் வரவில்லை என்பதே உண்மை.

பேருந்தில் பயணிக்கும் சக பயணிகளாக சில கதாபாத்திரங்கள். ஒரு பொலிஸ் கண்காணிப்பாளர், ஓர் அரசியல்வாதி, காதலியுடன் ஓடிப் போகத் திட்டமிட்டு பயணிக்கும் ஒரு காதலன், அவரின் காதலி, அந்தக் காதலியின் அப்பா, சிறையிலிருந்து விடுதலையாகி அம்மாவைப் பார்க்கப் போகும் ஒருவர், பேருந்தின் ஓட்டுநர் ஆகியோர் மற்ற கதாபாத்திரங்கள். இவர்களில் பொலிஸ் கண்காணிப்பாளராக நடித்திருக்கும் பரத் நீலகண்டனுக்கு மட்டுமே அதிக முக்கியத்துவம். பேருந்தில் போதைப் பொருளை எடுத்துச் சென்று கேரளாவில் சேர்க்க நினைக்கும் போது சிக்கிக் கொள்கிறார். எப்படியாவது தப்பிக்க வேண்டும் என கொஞ்ச நேரம் ரவுடி பொலிஸாக மாறிவிடுகிறார். மற்ற கதாபாத்திரங்களுக்கு தேவையான அளவு காட்சிகளைக் கொடுத்திருக்கிறார் இயக்குநர்.

நயன்தாராவின் மகனாக யூ ரியூப் புகழ் ரித்விக். அந்த சிறுவன் மீது அனுதாபம் ஏற்படும் ஒரு கதாபாத்திரம். முதல் படம் என்று சொல்ல முடியாதபடி நடித்திருக்கிறார் ரித்விக்.

ஒரே ஒரு பேருந்தில் பயணிக்கும் கதை. பேருந்தை செட்டாக அமைத்துத் தான் படமாக்கியிருப்பார்கள். அந்த செட்டை வடிவமைத்த கலை இயக்குநர், அதற்குள்ளேயே பல கோணங்களில் காட்சியமைத்த ஒளிப்பதிவாளர் பாராட்டுக்குரியவர்கள்.

இதற்கு முன்பு நயன்தாரா நடித்து வெளிவந்த “அறம்“ படத்தில் ஒரு ஆழ்துளைக் கிணற்றுக்குள் குழந்தை விழுந்ததை மையமாக வைத்து படம் வந்தது. இந்தப் படத்தைப் பார்க்கும் போது ஏனோ அந்தப் படம் ஞாபகம் வந்து போகிறது. அந்தப் படத்தில் ஆழ்துளைக் குழாய்க்குள் விழுந்த குழந்தையைக் காப்பாற்ற வெளியில் மாவட்ட ஆட்சியராக நயன்தாரா நடத்தும் போராட்டம் உணர்வுபூர்வமாக சொல்லப்பட்டிருக்கும். இந்தப் படத்தில் பேருந்தில் சிக்கியவர்களைக் காப்பாற்ற தேசிய பேரிடர் குழு போராடுவதை திரைக்கதையாக அமைத்திருக்கலாமோ என்று யோசிக்க வைக்கிறது. அந்தக் குழுவின் மீட்புப் பணிகளை போகிற போக்கில் காட்டிவிட்டுச் செல்கிறார்கள். பேருந்தில் சிக்கிய குடும்பத்து உறவினர்களில் ஒரே ஒருவர் மட்டுமே அந்த இடத்துக்கு வருகிறார். இப்படி நிறைய கேள்விகள் எழுகின்றன.




# நம்பிக்கை நட்சத்திரங்கள்!

2023ஆம் ஆண்டு ஒருநாள் உலகக் கிண்ணம் இலங்கை அணிக்கு பலத்த சவாலாக இருக்கப் போகிறது. கடந்த 20ஆண்டுகளில் நேரடியாக ஒருநாள் உலகக் கிண்ணத் தொடரில் பங்கேற்ற இலங்கை அணி முதன் முறையாக தகுதிச் சுற்றில் ஆடியே பிரதான சுற்றுக்கு தகுதி பெற வேண்டும் என்ற நிலையிலுள்ளது.

இலங்கை அணிக்கு பங்களாதேஷுடனும், நியூசிலாந்துடனுமாக இரு தொடர்கள் மீத மிருக்கின்றன. இந்த இரு தொடர்களிலும் வென் றாலும்கூட இலங்கை தகுதிச் சுற்றை தவிர்ப்பது கடினம் என்ற நிலையே உள்ளது. இதனிடையே தற்போது அவுஸ்திரேலியாவுக்கு எதிராக ஒரு நாள் தொடரில் தாய் மண்ணில் மோதுகிறது. இது இரு தரப்பு தொடர் என்பதால்

ஆனால், இது சிறந்த பயிற்சியாக இருக்கும் என்பது உறுதி. இந்நிலையில், இந்தத் தொடரிலும் இலங்கை வெற்றிக்காகக் கடு மையாகப் போராடி வருகிறது. இரு போட்டிகள் முடிவ டைந்த நிலையில், தலா ஒரு வெற்றியைப் பெற்றுள்ளன. இந்தத் தொடரில் மட்டுமல்ல, உலகக் கிண்ணத்தில் மீண் டும் பிரகாசிக்க நம்பிக்கை நட்சத்திரங்களாக சில வீரர் கள் உருவாகியுள்ளனர்.

### தசூன் சானக

இலங்கை அணியின் தலைவரான தசூன் சானக, இன்றைய ரசிகர்களின் நம்பிக்கை நட்சத்திரமாக உள்ளார். இவர் அவுஸ்தி ரேலிய அணிக்கு எதிராக ஆடிய இருபது - 20 போட்டியில் தனது அதிரடி மூலம் சிறந்த இனிங்ஸ் ஒன்றை உருவாக்கியிருந்தார். அத்துடன் சிறந்த பினிஷராகவும் உச்ச வரம்பைப் பெற்றுள்ளார். ஆனால், இவர் குறிப்பிட்டு சொல்லக் கூடியளவில் சீரான ஆட்டத்தை பிரதிபலித்த தில்லை.

ஒருநாள் போட்டிகளில் அவரின் சராசரி 27.16 , ஓட்ட விகிதம் 95.46 ஆகும். அவர் இப்போது சிறந்த போர்மில் உள்ளார். புள்ளிவிவரங்களை உயர்த்த சரியான வாய்ப்புக் கிடைக்கவில்லை. சிறந்த களத்தடுப்பையும் வெளிப்படுத்தி வருகிறார்.

### அசலங்க

ஆஸிக்கு எதிரான இரு பது - 20 தொடரில் அச லங்க நிலையான ஆட் டத்தை வெளிப்படுத்தி யிருந்தார். இந்தப் போட் டிகளில் அவர் 38, 39, 26 ஓட்டங்களை எடுத்திருந் தார். குறுகிய கால கிரிக கெட் வாழ்வில் ஒருநாள் போட்டிகளில் சிறப்பாக செயல்பட்டுள்ளார்.

ஐந்தாவது இடத்தில் களமிறங்கும் அவரின் சரா சரி 42. அவரின் கடைசி 6 போடடிகளில் 52, 23, 71, 47, 77, 72 ஓட்டங்கள். இனிங்ஸின் தொடக்கத்தில் பௌண்ட்ரியை இலகு வாக்குவதில் அவரின் பங்களிப்பு சிறப்பானது.

### மஹீஷ் தீக்ஷன

18 இ-20 ஓர் ஐ. பி. எல். தொடர் மூலம் பிரபல மானவர் மஹீஸ் தீக்ஷன.

4 ஒருநாள் போட்டிகளில் மட்டுமே விளை யாடியுள்ளார். பவர் பிளேயில் ஆதிக்கம் செலுத் தும் அவர் தொடர்ந்து விக்கெட்களை வீழ்த் துகி றார். அவருக்கு எதிராக பெரிய ஷொட்களை ஆட துடுப்பாட்ட வீரர்கள் தயங்குகிறார்கள். அவரது பந்து வீச்சு நீளமாக இருப்பதால் அமை தியாக ஆனால், ஒருநாள் போட்டிகளில் அவரின் விகிதம் 377 ஆகும்.

### வனிந்து ஹசரங்க

வனிந்து ஹசரங்க ஏற்கனவே இலங்கை ரசிகர்களால் மட்டுமல்ல, அனைத்து கிரிக்கெட் ரசிகர்களாலும் கொண்டாடப்படுகிறவர். ஐ. பி. எல். தொடரிலும் தன்னை நிரூபித்தவர். அதிக விலைக்கு ஏலம் போன வீரர்களுள் ஒருவராக இடம்பிடித்திருப்பது அவரின் திறமைக்கு சான்று. ஆஸிக்கு எதிரான இறுதி முதல் ஒருநாள் போட்டி யில் 4 விக்கெட்களை கைப்பற்றி தன்னை நிரூபித் துள்ளார்.

இந்த வீரர்களின் எழுச்சி இலங்கை அணியை உலகக் கிண்ணத்தில் போராடுவதற்கான ஒரு நம்பிக்கையை எழச் செய்துள்ளது.

# உயிர்த்திருப்பு...!

**செவ்வாய்க்கிழமை இரவு.**
**நாட்டிங்ஹாம் மைதானம்.**

அரங்கம் சூழ்ந்த ரசிகர் கூட்டம் ஆர்ப்பரிக்க ஓர் அசாத்திய டெஸ்ட் துரத்தலை நிகழ்த்தியிருக்கிறது இங் கிலாந்து கிரிக்கெட் அணி. அன்று மாலைதான் இந்தியாவில் ஐ.பி.எல் தொடருக்கான ஒளிபரப்பு உரிமம் ஒரு பெருந்தொகைக்கு விற்கப்பட்டது. கிரிக்கெட் உலகின் இந்த இரு வேறு முக்கிய சம்பவங்களும் ஒரே தினத்தில் நடந்தேறியிக்கின்றன.

ஹஇது அடுத்த கட்டத்துக்கான பாய்ச்சல், இந்தப் பயணத்தில் நமக்கு முன்னிருப்பது என். எவ். எல். மட் டுமே என ஐ.பி.எல் குறித்தான பெரு மிதங்கள் இணையமெங்கும் வழிந்தோடிக் கொண்டிருக்க வியாபார விரிவாக் கத்தை தாண்டி இந்நிகழ்வு போற்றப் படுவதற்கான காரணம் ஏதும் தெளிவாக புலப்படவில்லை.

கிரிக்கெட் எனும் விளையாட்டை உயிர்ப்புடன் வைத்திருக்க, அதை அடுத்த தலைமுறைக்குக் கொண்டு சேர்க்க இந்த மாற்றங்கள் அவசியம்தானே என கேள்வி கள் பலவும் இதற்கான வாதங்களாக எழ லாம். சரிதான், ஆனால் கிரிக்கெட்டின் ஆன்மாவாக கருதப்படும் டெஸ்ட் வடி வத்தை உயிர்ப்புடன் வைத்திருப்பதும் இந்த விளையாட்டை சார்ந்திருப்போர் களின் தலையாய கடமையே. இந்த இருபது -20 யுகத்தில் டெஸ்ட் கிரிக் கெட்டையெல்லாம் யார் பார்ப்பது" என்ற வாதம்கூட இடையில் எழுந்தது. இதற்கு நேர் எதிராக டெஸ்ட் கிரிக் கெட் தன்னைத் தானே உயிர்ப்புடன் வைத்துக்கொண்டிருக்கிறது.

அதற்கு மற்ற இரு வடிவங்களைப் போல அத்தனை பெரிய வியாபார விரிவாக்கங்கள் அவசியப்படவும் இல்லை. ஹதனக்கு தேவையானவற் றைத் தானே நிகழ்த்திக்கொள்ளும் இந்த பிரபஞ்சம்" என்று கூறுவார்களே அதைப்போல. அண்மைய ஆண்டு களில் நடந்த பல போட்டிகளையும் இதற்கான சாட்சிகளென உறுதியாகக் கூறிவிடலாம்.

தன் திறமையின் மீதான முழு நம்பிக்கை, எதிராளியை மதித்து அவரின் பலத்தை அறியும் நேர்த்தி, அதை வீழ்த்த தீட்டப்படும் வியூகம் ஆகியற்றோடு இவை அனைத்தையும் ஒன்றிணைக்கும் வெற்றிக்கான போராட்ட குணம். எந்த ஒரு விளை யாட்டு வீரருக்குமான பொதுவான தன்மைகளாக அம்சங்களாக இவற்றை கூறலாம். ஆனால், இந்த தன்மைகளும் அம்சங்களும் ஒவ்வொரு விளையாட் டிற்கும் மாறுபடும். அதில் கிரிக்கெட் டுக்கு தனித்தன்மையான இடமுண்டு.

ஏனென்றால், கிரிக்கெட்டைப்போல விதிமுறைகளைத் தாண்டி பிற காரணி களால் வெற்றி தோல்வி தீர்மானிக்கப் படும் விளையாட்டு மிக மிகக் குறைவு.

ஆடுகளத்தின் தன்மை, காற்று வீசும் திசை அதன் ஈரப்பதம் ஏன் மைதானத் தில் அமைந்திருக்கும் ஒளிவிளக்குகளின் உயரம் வரை ஒவ்வொன்றும் தனிப் பட்ட வீரர் ஒருவருக்கு சவாலளித்துக் கொண்டேதான் இருக்கும். டெஸ்ட் கிரிக்கெட்டில் இது பல மடங்கு அதி கம். திறமைகளைத் தாண்டி இக்கார ணிகளே தனியொரு வீரரை எடை போடும் தராசு. முதல் நாளின் முதல்




செஷன் தொடங்கி நாட்கள் செல்ல செல்ல ஆட்டத்தோடு ஒன்றிணைவது மட்டுமல்லாமல் இவை அனைத்திற் கேற்ப தானும் மாறிக்கொண்டு இருந்தால்தான் வெற்றி வசப்படும். அதனால்தான் 4 மணி நேரம் மட்டுமே ஆடப்படும் இருபது - 20 போட் டிகளோ 8 மணி நேரம் வரை செல்லும் ஒருநாள் போட்டிகளோ 5 நாட்களுக்கு விளையாடப்படும் டெஸ்ட் கிரிக் கெட்டுக்கு எந்த வகையிலும் ஈடாவ தில்லை.

டெஸ்ட் கிரிக்கெட் கடினமானது. மற்ற இரு வடிவங்களில் வேண்டுமா னால் வீரர்கள் தங்களுக்கிருக்கும் சிறு சிறு பலவீனங்களை மூடி மறைத்து தப்பித்துக்கொள்ள வாய்ப்பிருக் கிறது.

ஆனால், டெஸ்ட் களம் உங்களுக்கு கொஞ்சமும் கருணை காட்டாது. இங்கு உங்கள் பலவீனங்கள் எப்படியும் அகப்பட்டு விடும். சரிசெய்யாவிடில், அதுவே கரியரின் முடிவாகவும் அமையக் கூடும். இத்தனை கடினமான டெஸ்ட் களத்தை பின் எப்படி சமாளித்துக் கடப்பது.

பொறுமை, போராட்ட குணம் என்று இதற்கான குணங்களை, வழி களை பட்டியலிட்டு கொண்டு போனாலும் இவை அனைத்தும்விட இலகுவாக ஒன்றை சொல்லவேண்டு மென்றால் 'Stick with your basics'. ஆனால், இலகுவான இந்த ஒன்று தான் இருப்பதிலேயே கடினமானது. இதைத் தொடர்ந்து கைக்குள் வைத்திருப்ப வர்கள் மகத்தான ஆட்டக்காரர்கள் ஆகிறார்கள். அவர்களால் மாபெரும் போராட்டங்கள் கரைசேருகின்றன.

சென்ற ஆண்டு நியூசிலாந்து அணிக்கு எதிராக 273 ஓட்டங்களை துரத்திய இங்கிலாந்து அணி சமநிலையானால் போதும் என 170 ஓட்டங்களோடு முடிந்துகொண்டது. ஆனால், இம்முறை 299 என்னும் ஓட்ட இலக்கை வெறும் ஐம்பதே ஓவர்களில் துரத்தியடித்து சாதித்திருக்கிறது அந்த அணி. உபயம்: பெயர்ஸ்ரோ மற்றும் ஸ்டோக்ஸ். இந்த வெற்றியை நிச்சயம் உச்சி முகர கண்டு கொண்டிருந்திருப் பாள் கிரிக்கெட் தாய். காரணம்....


இது போன்ற வெற்றிகள் வெறும் அணிகளுக்கானவை அல்ல, ஒட்டுமொத்த விளையாட்டுக்குமான வெற்றி இது! டெஸ்ட் கிரிக்கெட்...நீ எக்காலத்திற்கும் உயிர்த்து இரு !

# புகலிடத்தில் ஒரு கலைக்குடும்பத்தின் நடிக வினோதன் யோகராஜா!

புலம்பெயர் மடல்

• என்.கே.துரைசிங்கம்

இயல், இசை, நாடகம் என முத்தமிழ் கற்றவர்கள்தான் பெரும் கலைஞர்களாகி கலையுலகில் நிலைபெறுவார்கள். மற்றவர்கள் கேள்வி ஞானத்தால் கலையுலகில் உயரப் பறப்பார்கள். ஆனால் இத்துறையில் பெற்ற பட்டறிவு, அனுபவம் என்பவற்றின் ஊடகவும் பலர் தடம் பதித்து இருக்கிறார்கள். வடமராட்சி தேவரையாளி சமூகம் கல்வியோடு கலைகலாசார பண்பாட்டு விழுமியங்களில் பலரை உருவாக்கியிருக்கிறது. அவ்வாறான வழித்தோன்றலில் ஒருவர் நடிக வினோதன் தம்பிராஜா யோகராஜா. இவர் தனிமரமல்ல தோப்பாக புகலிட தேசத்திலிருந்து கொண்டு முழு நேர கலைஞனாக பரிணமித்து வருகிறார். இவரது பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் என கலைக்குடும்பம் ஆகி மக்களை மகிழ்வித்து வருகிறார்கள்.



நாடக நடிகராகத்தான் அவரை அடையாள படுத்துவார்கள் ஆனால் அவர் பாடகர்,பாடலாசிரியர், இசையமைப்பாளர், கதைவசன கர்த்தா, இயக்குனர், ஒப்பனையாளர் என பல பரிமாணங்களின் சொந்தக்காரன். அவரோடு பழகும் தருணம் உச்சரிக்கின்ற வார்த்தைகள் அத்தனையுமே கவிநயத்துடன், இலக்கிய மொழியுடன் வந்துவிழும். அதில் பொழிப்புரை இருக்கும். அர்த்தங்கள் பொதிந்து இருக்கும். கேட்டுக் கொண்டே இருக்கலாம்.

அவர் ஒரு தேர்ந்த நடிகரல்லவா? டென்மார்க்கில் வாழும் அவருடன், தொலைபேசியில் உரையாடும் போதே அவரது கனீரென்ற குரல் என்னை கட்டிப்போடுவதை அவதானித்து இருக்கிறேன். தாயகத்தில் மேடைகளில் அவரது நடிப்பை பார்த்து ரசித்திருக்கிறேன். பழக சந்தர்ப்பம் கிடைக்கவில்லை புலம் பெயர்ந்த பின்னர் பல தடவைகள் கண்டிருக்கிறேன். பத்திரிகையாளனாக அவருக்கு அறிமுகமானேன். அன்றுமுதல் நேர்காணலுக்கான சந்தர்ப்பத்துக்காக காத்திருந்தேன்.

பாரிஸ் ஈழநாடுவில் வெளியிடலாம் என எதிர்பார்த்தேன். அது நடக்கவில்லை. அண்மையில் அவர் பாரிஸ் வந்த போது சந்திக்கமுடிந்தது.

இன்று எழுபதுகளை கடந்து விட்டாலும் மார்க்கண்டனாகத்தான் இருக்கிறார். வயதுக்கேற்ப தோற்றத்தில் மாற்றம் ஏற்பட்டாலும் நடை உடை பாவனை பேச்சு என அனைத்துமே உற்சாகம் தருவனவாக இருந்தன. எப்படி உச்சத்தாயில் குரல் எடுத்து பாடுகிறீர்கள்? எப்பொழுதும் சுறுசுறுப்புடன் காணப்படுகிறீகள்? ஆச்சரியக்குறி போட்டு கேள்வியை எழுப்பினேன்.

“நடிப்பது பிடிக்கும். இன்றும் நடித்து கொண்டிருப்பதால் பாத்திரங்களுக்கு ஏற்ப உருமாற்றம் செய்வதுண்டு. அதுதான் உடல், உளத்திற்கு சுகமளிக்கிறது. புத்தகம் வாசிக்கிறேன் அவற்றிலிருந்து தேவையானதை பெறுகின்றேன். பாடல் வரிகள் எழுதுகிறேன், அத்துடன் பாடல்களை பாடுகிறேன்” என அழகான பாடல் பாடினார்.

நடிகமணி வி.வி.வைரமுத்து ஒப்பற்ற நடிகர். அவர் இந்த தம்பிராஜா யோகராஜாவின் நடிப்பை வியந்து பாராட்டியவர். நடிக வினோதன் என்று பட்டம் வழங்கி கௌரவித்தார். இவரது வாரிசுகளான வள்ளுவன், இளங்கோ, கலைமகள், திருமகள் என எல்லோரும் கலைநயமிக்கவர்கள் ஒருவர் நடனப் பள்ளி நடத்தி நடன தாரகைகளை உருவாக்குகின்றார். இன்னொருவர் பாடல்களை பாடிகுரல் வளத்தால் எல்லோரையும் தன் வசமாக்கிறார், மற்றவர் குறும்படம், திரைப்படம் என கொடிகட்டிப்பறக்கிறார். பேரப்பிள்ளைகள் நடனம், பாடல் என வலம் வருகிறார்கள். இவரது சகோ தரன் தியாகராசாவும் சிறந்த நடிகர் நாதஸ்வர வித்துவான். அவர் காலமாகிவிட்டார்.



இவர்கள் வாழும் நாட்டில் (டென்மார்க்) இவர்கள் இல்லாமல் மேடைநிகழ்வுகள் இல்லை.

1986 யாழ்ப்பாணத்தை விட்டு புறப்பட்ட போது “இவர் வெளிநாட்டுக்கு போய் என்ன பண்ணப்போறார் என பலர் பரிதாபமாக பேசினார்கள்.” நாடகம் நடிச்சென்றாலும் பிழைத்து கொள்வார்” என அவ ரது மாமனார் அந்த வாய்க ளுக்கு பூட்டு போட்டார்.

அந்த நாட்களில் ஏதிலியாக வந்தவர்களில் ஒருவராக டென் மார்க் நாட்டில் புகலிடம் கோரினார். ஆரம்ப நாட்கள் எல்லோரையும் போல சோதனை கள் நிறைந்தவை தான். நாட்கள் கடந்த பின்னர் டென்மார்க் அரச நாடக சபாவு டன் கிடத்த தொடர்பு அந்த சபாவின் நடிகராக தொழில் கலைஞராக உருவெ டுத்தார். டெனிஸ் மொழியில் பல நாடகங்களில் நடித்து புகழ்பெற்றார்.

டென்மார்க்கில் நடிப்பு உங்கள் வாழ்வாதார தொழிலாக கிடைத்த தருணத்தை பகிர்ந்து கொள்ளவும் என கேட்டதும், முகமெல்லாம் மகிழ்ச்சி பொங்க “எம்மீது நம்பிக்கை உள்ளவர்களின் வாக்கு பலிக்கும் என்பது உண்மை என்பதை உணர்வு பூர்வமாக உணர்ந்தேன் மாமா அன்று சொன்னது வெறும் வார்த்தைகள் அல்ல அது வேத வாக்கு” என உணர்ச்சி ததும்ப கூறினார்.

வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை, சமூக வலைத்தளங்களில் இவரின் நேர்காணல் காலத்துக்கு காலம் மக்களின் ரசனைக்கு தீனியாகின்றன. யாழ்ப்பாணத்து கலை சூழலில் கருவாகி, உருவாகி நாடு கடந்து தன் கலைப்பயணத்தை யோகராஜா தொடர்கிறார்.

தமிழ் நாடகங்கள் பலவற்றில் நடித்து தனது நடிப்பாற்றலை வெளிப்படுத்தியவர். தூய உள்ளம், கண்ணானவள், அலாவூதீன், பதவி மோகம், தெய்வமலர் போன்ற நாடகங்கள் அவருக்கு புகழைத்தேடி கொடுத்தன. அத்துடன் விருகளையும் பெற்றுக்கொடுத்தன. டென்மார்க் நாட்டில் டெனிஸ் மொழி நாடகங்களிலும் நடித்தவர் அவற்றிலே பல நாடகங்கள் டெனிஸ் மக்களிடம் ஆதரவையும் புகழையும் பெற்றுக்கொடுத்தன.

தற்பொழுது ஓய்வு நிலையிலிருந்தாலும் சந்தர்ப்பங்கள் கிடைக்கும் தருணங்களில் நடித்து கொண்டிருப்பதுடன் நாடகம், சினிமா, பாடல்கள், ஒப்பனைகள் சார்ந்த துறைகளிலும் ஆலோசனைகள் வழங்கிவருகிறார். தென்னிந்திய திரைப்பிரபலங்கள் மற்றும் நாடக நடிகர்களோடு நீண்ட கால நட்புடன் பயணித்தவர். குறிப்பாக நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களுடன் நெருங்கிப்பழகியவர். தமிழகம் செல்லும் போதெல்லாம் அவரை தரிசித்து வந்தவர்.



---



## வியுக்தியார் பதில்கள்

**சபா. குலநாதன், கோயில்குளம், வவுனியா.**

**கேள்வி:**

கச்சதீவை இந்தியா மீண்டும் எடுக்கவேண்டும் என்று இந்தியாவிலும், கச்சதீவை இந்தியாவுக்கு தாரைவார்க்கக்கூடாது என்று இலங்கையிலும் குரல் கொடுக்கின்றார்களே. என்ன நடக்கும் என்று நினைக்கின்றீர்கள்?

**வியுக்தியார்:**

கச்சதீவு தமிழகத்திற்கு சொந்தமானது என்றும், அதனை இலங்கைக்கு கொடுத்ததால் தான் தமது மீனவர்கள் கச்சதீவு வரைசென்று மீன்பிடிக்க முடியவில்லை என்றும் தமிழகம் நம்புகின்றது. ஆனால் தமது மீனவர்கள் கச்சதீவையும் தாண்டி பருத்தித்துறை கடல் வரை வருவதும், அப்போது கைதுசெய்யப்படுவதையும் தமிழகம் தெரிந்து வைத்திருக்கவில்லையோ தெரியவில்லை. கொடுத்ததை திரும்ப எடுக்கவேண்டும் என்று தமிழக அரசு கோருவது நடக்கும் என்று நான் நம்பவில்லை. முன்னர் ஜெயலலிதா ஆட்சியில் இருந்தபோதும் கச்சதீவை மீட்போம் என்று தொடர்ந்து கூறிவந்தார். ஒரு நாட்டுடன் செய்துகொண்ட ஒப்பந்தப்படி கொடுக்கப்பட்டதை மீண்டும் பெறமுடியாது. ஆனால் இந்திய மத்திய அரசில் ஆளும்கட்சியான பாரதீய ஜனதாக் கட்சியின் தமிழக தலைவர் அண்ணாமலை, கச்சதீவை இந்தியா நீண்டகால குத்தகைக்கு எடுக்க வேண்டும் என்று கோரியிருப்பது கவனத்திற்குரியது. இன்று நாடு இருக்கும் நெருக்கடி நிலையில், சில பில்லியன் டொலர்களைத் தருகிறோம் அதனை நீண்டகால குத்தகைக்கு தாருங்கள் என்று இந்தியா கேட்டால் என்ன நடக்கும் என்று தெரியவில்லை. அம்பாந்தோட்டை துறைமுகத்தையே குத்தகைக்கு கொடுத்தவர்கள் கச்சதீவை கொடுக்க யோசிப்பார்களா என்ன?

---

**அல்வின் ராஜேந்திரா,**
**முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.**

**கேள்வி:**

முஸ்லிம்களுக்கு எதிரானவராக தன்னைக் காட்டிக் கொண்ட கோட்டபாய ராஜபக்ச, தன்னை சிங்கள மக்களின தலைவர் என்றும் கூறிக்கொண்டார். பௌத்த மக்களின் வாக்குகளால் மாத்திரமே வெற்றி பெற்றவர் என்ற மமதையில் இருந்தார். இன்று முஸ்லிம் நாடுகளின் தூதுவர்களை அழைத்து உதவிக்கு கையேந்தி நிற்கிறாரே. அவர்கள் உதவுவார்கள் என்று நினைக்கின்றீர்களா?

**வியுக்தியார்:**

ஈழத்தில் தமிழர்களுக்கும் இந்தியாவுக்குமான உறவு இரண்டு வகையாகப் பார்க்கலாம். ராஜீவ் காந்தி கொலைக்கு முந்தைய உறவு. அதற்குப் பிந்திய உறவு என்று. நமக்கு அடிவிழுகின்றபொதெல்லாம் தமிழகத்திலுள்ள நமது உறவுகள் தமக்கு விழுந்தது போல உணர்ந்தார்கள். அவர்களின் அந்த உணர்ச்சி தான் இந்திய மத்திய அரசை தமிழர்களின் பிரச்னைக்கு தீர்வுகாண உதவுகின்ற நிலைமையை ஏற்படுத்தியது.

ஆயுதப்போராட்டத்தால் நமக்கு கிடைத்த ஒரேயொரு தீர்வு, இந்த மாகாணசபைதான். அந்த மாகாண சபையாவது கிடைக்க இந்தியாவின் குறிப்பாக தமிழகத்தின் உதவிதான் காரணம். ஆனால் இவையெல்லாம் ராஜீவ் கொலைக்கு முந்திய உதவிகள்.

அதற்குப்பின்னனர் என்ன நடந்தது என்பது உங்களுக்கே தெரியும். அதுபோலத்தான், கோட்டபாய முஸ்லிம்களுடன் பகைத்துக் கொண்டதும்.

**உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி**

**வியுக்தியார் பதில்கள்**
**ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
viyukthiyar@gmail.com



# பேசப்படாத மௌனம்...

சிறி ரஞ்சனி

'என்ர நெஞ்சில தலைவைச் சுப்படுத்திருந்த சுமி இன்னும் விசும்பிக்கொண்டிருந்தாள். ஒரு கையால அவளின்ர தலையக் கோதினபடியும், மற்றக் கையால அவளை அணைச்சபடியும் அவளருகில நான் படுத்திருந்தன். எனக்கும் அழுகைவந்தது. மனசு படபடத்தது. திரைச்சீலைகள் அங்குமிங்குமா ஆடிக் கொண்டிருந்துது.

"சொறி குட்டி, அம்மா அடிச்சிருக்கக்கூடாது, கத்தியிருக் கக்கூடாது.. சொறியடா கண்ணா, இனி அம்மா இப்பிடியெல்லாம் செய்யமாட்டன்.. அழாதையடா குஞ்சு.." மிகக் கனிவுடனும் குற்றவுணர்வுடனும் திரும்பவும் சொன்னன்.

"எனக்குச் சரியாய் தண்ணி விடாய்ச்சதம்மா. அதுதான் பைப்பைக் கண்டோனை.."

"ஓமடா, எனக்கு விளங்குது. ஆனா என்ன நடந்தாலும் எனக்கது தெரியோணும். அம்மாக்கு என் னத்தை எண்டாலும் சொல்லலாமெண்ட துணிவு உனக்கிருக்கோணும்."

சுமி தலையை ஆட்டினபடி என்னை இறுகக் கட்டிக்கொண்டாள்.

"ம்ம், ஓகே, புத்தகம் வாசிப்பமா குட்டி? பிள்ளையின்ரை சின்னக் காலாலை ஓடிப்போய் விருப்பமான ஒரு புத்தகத்தை எடுத்துக்கொண்டு வாடா."

றொபேட் மஞ்சின் 'லுக் அற் மீ' வாசித்து முடிந்ததும் பழையபடி அவள் கலகலப்பானாள். பிள்ளைகளின் சிறப்பே இதுதான். மனசுக்குக் கொஞ்சம் ஆறுதலாயி ருந்துது.

"குட் நைற் சுவீட்டி," அவளின்ர நெத்தியில முத்தமிட்ட நான் அவளை வடிவாய்ப் போத்தி விட்டு அந்த அறையைவிட்டு வெளியேறினன். ஒருக்களித்துப் படுத்திருந்தபடி புத்தகத்தில் மூழ்கிப்போயிருந்தார் மோகன். பக்கத்திலபோய் நானும் படுத்துக்கொண்டன். புத்தகத்தை மூடினவர் அதைப் பக்கத்திலிருந்த மேசையில வைச்சார். 'டான்ஸ் ஓஃப் அங்கர்' எண்ட அந்தத் தலையங்கம் என்னைப் பாத்து விழித்தது.

"அவளோடை நான் அப்பிடிச் சத்தம் போட்டி ருக்கக்கூடாது, என்ன? கவலையாயிருக்கப்பா'

"சும்மா, அவசரப்பட்டுக் கத்துறது, பிறகு கவலைப்படுகிறது, இதுதானே என்ரை யசோ."

"என்ரை அம்மாக்கு நான் எல்லாத்தையும் சொன்னதில்லை. அதைப்போலையில்லாம அவள் எல்லாத்தையும் என்னோடை பகிரோணும். இப்பவிருந்தே அவள் அதைப் பழகோணுமெண்டு நான் நினைக்கிறன் ..."

"சரியப்பா, சின்னப்பிள்ளைதானே, அதை அவள் மறந்திருக்கவும்கூடும். அதோடை அந்த ரீச்சர் பேசினது முழுசா அவளுக்கு விளங்கியிருந்தாத் தானே அது அவளைப் பாதிச்சிருந்திருக்கும், அம்மாக்குச் சொல்லோணுமெண்டு தோன்றியி ருக்கும்..."

மோகன் என்ரை தலைய ஆதரவாகத் தடவி, என்னை மென்மையா முத்தமிட்டார். பிறகு அவற்ரை மூச்சுக்காற்றுச் சூடு என்னில படுமளவுக்குக் கிட்டவா வந்து என்ர மார்பை ஆசையோடை வருடினார்.

அவற்ரை கையை அவசரமாக நான் விலத்தினன். "இண்டைக்கு வேண்டாம், மோகன், பிளீஸ்," சொன்ன நான் லைற்றை ஓவ் பண்ணினன்.

என்னை ஆரோ அமுக்குவது போலிருந்தது. என்ரை உடம்பு நடுங்கினது.

காற்றின் அசுர வேகத்தைத் தாங்கமாட்டாத மழை யன்னலிலை மோதிமோதி சர் சர் எண்டு ஓயாமல் சத்தம் எழுப்பிக்கொண்டிருந்துது.

அப்பா எண்ட அந்த உறவை அசிங்கப்படுத்தின என்ரை அப்பா தன்ரை ஆணுறுப்பைச் சாரத்துக்குள் ளாலை நீவினபடி எனக்குள் கோரத்தாண்டவமா டினார்.

ஹபுதிசா வீடு கட்டிக் குடிபுகுந்திருந்தம். என்ரை அறையை எப்பிடி அலங்கரிக்கிறது எண்டதில எனக்கு ஒரே பரபரப்பாக இருந்துது. கதிரையிலை ஏறிநிண்டுகொண்டு வகுப்பிலை நான் கீறியிருந்த வானவில் படமொண்டை பிரேம் ஒண்டுக்குள்ளை போட்டு சுவரிலை மாட்டிக்கொண்டிருந்தன்.

"சாமத்தியப்பட்டதோடை உன்ரை ரசனைகளும் அழகாயிட்டுது," அப்பா பின்னாலைவந்து நிண்டு கட்டிப்பிடிச்சுக் கன்னத்திலை கொஞ்சினார். அவற்ரை மீசை மயிர் என்ரை முகத்தில கரகரத்தது. கையிலை நான் வைச்சிருந்த படம் சடாரென்று நிலத்திலை விழுந்துடைஞ்சுது. 'என்ன சத்தமது', எண்டு கேட்ட அம்மான்ரை குரலைக் கேட்டதும், என்ர மார்பிலை சுண்டிப்போட்டு அவர் வெளி யிலை போனார். எனக்குக் குமட்டிக்கொண்டு வந்தது.

அண்டு ராத்திரி திடுக்கிட்டு முழிக்கிறன். என்ரை கட்டிலின்ரை விளிம்பிலை என்னையே பாத்தபடி ஒருருவம் இருக்குது. அம்மாவெண்டு அலறின என்ரை வாயைத் தன்ரை வாயாலை அவர் கௌவேக்கை தான் அது அப்பாவெண்டது எனக்குத் தெரிஞ்சுது. என்னாலை மூச்செடுக்கேலேல்லை. வேகமா அவ ரைத் தள்ளிப்போட்டு திமிறிக்கொண்டு எழும் பினன். எழும்பின என்னை அலாக்காகத் தூக்கித் திரும்பவும் கட்டில்லை போட்டார். என்ரை உடம் பெங்கும் மேய்ஞ்ச அவற்ரை கையைத் தடுக்கேலா மல் தவிச்சன்.

செத்துப்போனாலென்ன எண்ட நினைப்பெ ழுந்துது. அடுப்பெரிக்கேக்கை அதிலை என்னையும் எரிச்சாலென்ன எண்டு யோசிச்சன். மனம் ஊண்டிப் படிக்கேலேல்லை. நித்திரை கொள்ளுறதுக்கு பயமாயிருந்துது. கண்மூடாமல் அறைக் கதவையே வெறிச்சுப் பாத்துக்கொண்டிருக்கிறது என்ரை வழமையாச்சுது.

சத்தம் ஏதாவது கேட்டால், அது அப்பாவோ எண்ட அச்சத்தில என்ரை இதயம் பலமடங்கு துடிக்க ஆரம்பிச்சுது. வீட்டைவிட்டு ஓடியிட லாமா, அல்லது இயக்கங்கள் எதிலாவது சேரலாமா எண்டெல்லாம் விரக்தி பரவியது. ஆனா எதுக்கும் எனக்குத் துணிவு வரேல்லை. எனக்குள்ளேயே செத்து செத்துமடிஞ்சன்.

ஒருநாள் ரா அம்மா செத்தவீடொண்டுக்கு போட்டா. எனக்கு ஒரே திகிலா இருந்துது. அவர் ரீவி பாத்துக்கொண்டிருந்தார். நான் வாஷ் ரூமுக்குள்ளை நிண்டுகொண்டு என்ரை கையளைத் திரும்பத்திரும்பக் கழுவிக்கொண்டிருந்தன். அச்சம் என்னைத் திண்டுகொண்டேயிருந்துது.

சட்டென, "யசோ, யசோ" எண்டு பலத்ததொரு அலறல், மெதுவா வெளியிலை எட்டிப்பாக்கிறன். பதினெட்டடி தூரத்தில அவர் தன்ரை நெஞ்சைப் பொத்திக்கொண்டு கத்துறார். எனக்குள்ளை ஒரு குரூர மகிழ்ச்சி! அப்பிடியே செத்துப்போகட்டும், பேசாமலிருப்பமெண்டு மனம் சொன்னது.

இருந்தாலும் அவர் கேட்டதுக்காண்டி பக்கத்து வீட்டு மாமா வீட்டுக்கு ஓடினன். ஆஸ்பத்திரிக்குப் போறதுக்காக காரோடை மாமா வாறதுக்கிடை யிலை அவர் போட்டார். எனக்கு வந்த நிம்மதிக்கு அளவில்லை.

அடுத்த நாள் வானம் வெளிச்சிருந்துது.

அவர் அதிபரா இருந்த பள்ளிக் கூடப் பிள்ளையள் திரள்திரளா வந்திச்சினம். சிரேஷ்ட மாணவ தலைவர்களும் ஆசிரியர்களும் அவர் புகழ் பாடிச்சினம். எனக்கு ஒரு சொட்டுக் கண்ணீர்கூட வரேல்லை. அந்தப் புகழ்மாலைகள் என்னைச் சரியா அசௌகரியப்படுத்திச்சு. கண்ணீர்விட்டு அழுத அம்மாவைப் பாத்தபோது, அவ நடிக்கிறாவா எண்டு எனக்குக் குழப்பமாய் இருந்துது. நான் அதிர்ச்சியடைந் திருக்கிறன் எண்டு வந்தவை பேசிக் கொண்டினம்.

● ● ●

போராலை இடப்பெயந்து சாவகச்சேரிக்குப் போயிருந்தம். அங்கைதான் மோகனின்ர அறிமுகம் கிடைச்சுது. என்னைக் கலியாணம் கட்டுறதுக்கு அவர் ஆசைப்பட்டார். பொம்பிளை கேட்டு அவற்ரை தாய்தேப்பன் வீட்டை வந்திச்சினம். எனக்குக் கலியாணமே வேண்டா மெண்டு நான் பிடிவாதமா நிண் டன். அதாலை அம்மாக்கும் எனக் கும் ஒரே சச்சரவானது.

குடும்ப வாழ்க்கை வேண்டா மெண்ட முடிவை அம்மா வாழ்ந்த வாழ்க்கை எனக்குள்ளை ஆழமாவே விதைச்சிருந்துது. அம்மாவும் ரீச்சர்,அப்பாவும் ரீச்சர். ஆனா வீட்டு வேலையெல்லாம் அம்மாதான் செய்யோணும். சாப்பிட்ட கோப்பைகூட அவர் கழுவமாட்டார். போதாதுக்கு அம்மா செய்யிற அத்தனையிலும் பிழை பிடிச்சுக்கொண்டிருப்பர்.

"இடியட், என்னடி சமையல் சமைக்கிறாய், எத்தனை வருஷத்துக்கெண்டு இந்தக் குப்பையை நானும் சாப்பாட்டுக் கொண்டிருக்கிறது?"

சொதியில் போட்ட பிஞ்சு மிளகாய் அவியேல்லை எண்டு ஒரு நாள் அவர் போட்ட கூத்திலை மிரண்ட அம்மா அந்த இடத்தை விட்டு வேகமா வெளியேறப்பாத்தா. அதுக் கிடையிலை அவர் எறிஞ்ச அந்தச் சாப்பாட்டுக் கோப்பை அம்மான்ரை சொண்டை வெட்டின திலை அவவின்ரை சொண்டிலிருந்து ரத்தம்பீறிட் டுது. நெத்தியிலும் கொட்டைப் பாக்களவுக்கு வீக்கம்.

நாளங்களெல்லாம் கடும்பச்சை நிறத்தில புடைச்சிருந்துது. தோல் கடும்செந்நிறமா மாறியி ருந்தது. அவருக்கு மேலை ஏறிநிண்டு அவரை உழக்கோணும், தும்புத்தடியையெடுத்து அவருக்கு விளாசோணும் எண்டெல்லாம் எனக்கு ஆவேசம் வந்தது. காயத்துக்கு ஒத்தடம் குடுத்தபடி பள்ளிக் கூடத்துக்கு வெளிக்கிட்ட அம்மாவைப் பாக்க எனக்கு எரிச்சலாயும் கோவமாயும் இருந்துது.

இன்னொரு நாள் அவற்ரை வகுப்புப் பிள்ளையளின்ரை சோதினைப்பேப்பருகளை அவர் சொன்னநேரத்துக்குத் திருத்திக் குடுக்கேல்லை யெண்டு கத்தத்துடங்கினார்...

"இண்டைக்கு என்ரை பிள்ளையளின்ரை மார்க் சும் குடுக்கோணும். வீட்டு வேலையளோடை எத்தினையெண்டு ..."

அவ சொல்லிமுடிக்கேல்லை அவவின்ரை மேசைலகிடந்த அந்தப் சோதினைப்பேப்பரெல் லாத்தையும் கசக்கிச் சுழட்டியெறிஞ்சார். மேசேல கிடந்த ஒண்டுரண்டையும் குறுக்காய் கிழிச்சார். அழுதபடி அதுகளைப்பொறுக்கியெடுக்க வெளிக் கிட்ட அம்மான்ரை தலைமயிரைப் பிடிச்சிழுத்து அவவின்ர கன்னத்திலை அறைஞ்சார்.

நான் பேயறைஞ்சமாதிரி அதைப் பாத்துக் கொண்டிருந்தன்.

இப்பிடிப் பல.. அப்ப இதுக்கெல்லாம் என்ன செய்கிறதெண்டு எனக்குத் தெரியேல்லை. அது களைப் பத்திக் கதைக்கக்கூட அம்மா விரும்பேல்லை. அப்பாமார் மட்டுமில்லை, நம்பிப் பழகிற பல பேர் இப்பிடி இளம்பொம்பிளைகளின்ரை வாழ்க்கை யைச் சூறையாடுற கதையளை வாசிச்சறிஞ்சபோது ஆம்பிளையளிலை எனக்கு அருவருப்பும், வெறுப் பும், அச்சமும், ஆத்திரமும் வந்தது. அப்பான்ரை இந்த நடத்தையெல்லாம் அம்மாக்கும் தெரிஞ்சி ருக்கலாமெண்டதும் விளங்கினது.

● ● ●

"யசோ, நீங்க என்னைக் கலியாணம் செய்யோணுமெண்டு நான் எதிர்பாக்கேலாது, ஆனா ஏன் என்னை உங்களுக்குப் பிடிக்கேல்லை எண்டு கேட்கலாமோ? காரணம் தெரிஞ்சால் அது என்னைத் திருத்திக்கொள்ளறதுக்கு உதவும்," ஒரு நாள் அப்பிடி என்னை மோகன் கேட்டார்.

என்னைத் திருத்திக்கொள்ளறதுக்கு உதவு மெண்டு மோகன் சொன்னது என்ரை மனசைத் தொட்டது. ஒரு ஆம்பிளை இப்பிடியும் யோசிப் பானா எண்டு வியப்பு வந்தது.

(மிகுதி அடுத்த வாரம் வரும்)

# தாராள அனுமதி கொடுக்கும் பெற்றோர்கள்

**மருத்துவர். ப. வைத்திலிங்கம்**



நாம் இந்தக் கட்டுரையில் குழந்தைகள் எது கேட்டாலும் இல்லை என்று சொல்லாத, அல்லது சொல்லத் தயங்கும் பெற்றோர்களைப் பற்றி பார்ப்போம். குழந்தைகள் மீது மிக அதிகமாகச் செல்லம் கொடுத்து வளர்ப்பவர்கள் இவர்கள்.

உங்கள் வீட்டிற்கு வந்திருக்கும் விருந்தினர்களுடன் நீங்கள் பேசிக் கொண்டிருக்கும்போது, உங்கள் குழந்தை ஓடி வந்து ‘அப்பா! இப்போதே எனக்கு ஐஸ்கிரீம் வேண்டும்“ என்று கெஞ்சிக் கேட்பதாக வைத்துக் கொள்வோம். நீங்கள் என்ன செய்வீர்கள்? சொன்னவுடன் வாங்கிக் கொடுத்து விடுவீர்களா? அல்லது இப்போது வேண்டாம், பிறகு வாங்கித் தருகிறேன் என்று காரணங்களைச் சொல்லி சமாதானப்படுத்துவீர்களா?

குழந்தை கேட்கும் போது எப்படி சும்மா இருக்க முடியும்? உடனடியாக வாங்கிக் கொடுத்து விடுவேன் என்று சொன்னால், நீங்கள் இந்த தாராள அனுமதி கொடுக்கும் பெற்றோர்கள் வகையில் வருகிறீர்கள். நீங்கள் உங்கள் குழந்தை மீது வைத்திருக்கும் பாசமும் அக்கறையும் மிக அதிகம். அதனால் உங்கள் குழந்தைக்கு எந்த எல்லையையும் நிர்ணயித்து அவர்கள் மனம் வருந்துவதை விரும்பாதவர்கள்.

குழந்தைகள் வளரும் விதம் பற்றி ஆராயும் மனவியலாளர்கள் இப்படிக் குழந்தைகளின் விருப்பங்களை எல்லாம் உடன் அனுமதித்து நிறைவேற்றிக் கொடுத்துக் குழந்தைகளை வளர்க்கும் வகைக்கு PERMISSIVE PARENTING என்று சொல்லுகிறார்கள். இவ்வகையான பெற்றோர்களுக்கு குழந்தைகளிடம் இருந்து எதிர்பார்ப்புகள் எதுவும் இருக்காது. ஆனால் குழந்தைகளின் வளர்ச்சியில் பெற்றோர்களின் பங்களிப்பு அதிகமாக இருக்கும்.

குழந்தைகள் நல்ல பழக்க வழக்கங்களையும், பண்புகளையும் கற்றுக் கொள்ள வேண்டும். நன்றாகப் படித்து வாழ்வில் உயர வேண்டும் என்றெல்லாம் அதிகம் ஆசைப்பட மாட்டார்கள். அப்படியே ஆசை இருந்தாலும் மிகவும் குறைவுதான். ஆனால் வீட்டில் குழந்தைகள் மகிழ்ச்சியாக வளருவதற்கான சூழல் எப்போதும் இருக்கும்படி பார்த்துக் கொள்வார்கள். எல்லா நேரங்களிலும் உணர்வு பூர்வமான பாசம், அன்பு, அக்கறை நிறைய உண்டு. பாசமழை பொழிந்து கொண்டே இருப்பார்கள். வீட்டில் நடக்கும் அனைத்து நிகழ்வுகளும் குழந்தைகள் விருப்பப்படிதான் நடந்தேறும். குழந்தைகள் தான் இவர்களின் உயிர், உலகம் எல்லாம்.

### இவ்வகைப் பெற்றோர்களின் குணாதிசயங்கள்

இவர்கள் வீட்டில் குழந்தைகளுக்கு எந்தக் கட்டுப்பாடும் இருக்காது. அப்படியே இருந்தாலும் அனைத்து கட்டுப்பாடுகளும் பெயரளவில்தான் இருக்கும். கட்டுப்பாடுகளை மீறும் குழந்தைகளைக் கண்டிக்கவும் மாட்டார்கள். குழந்தை என்றால் அப்படித்தான் இருக்கும் என்று சொல்லி மேலும் கொஞ்சுவார்கள். குழந்தைகள் எது கேட்டாலும் உடன் கிடைக்கும். குழந்தைகள் கெஞ்சினால் கேட்கவே வேண்டாம், முதலில் குழந்தையைத் திருப்திப்படுத்திய பிறகுதான் அடுத்த வேலை பார்ப்பார்கள்.

குழந்தைகள் படிப்பிலோ அல்லது விளையாட்டிலோ சிறந்து விளங்கினால் பரிசு கொடுத்து பாராட்டி அவர்களை ஊக்கப்படுத்தலாம். ஆனால் இவர்கள் குழந்தைகள் எதுவும் சாதிக்காமல் இருந்தால் கூட அவ்வப்போது அவர்களைப் பரிசு மழையில் திக்குமுக்காட வைத்து விடுவார்கள். இம்மாதிரி சாதிக்காமல் கிடைக்கும் பரிசுகள் குழந்தைகளிடம் எந்த நல்ல பழக்கத்தையும் உண்டு பண்ணுவது இல்லை. மேலும் கொடுக்கும் பரிசுகளுக்கும் மரியாதை இல்லாமல் போய் விடுகிறது. கொடுத்த பரிசும் இரண்டாம் நாளே வீட்டின் ஒரு மூலையில் கேட்பாரற்றுக் கிடக்கும்.

குழந்தைகளைத் தங்களுக்குச் சமமாக நண்பர்கள் போல் பாவித்து வளர்ப்பதால், குழந்தைகள் எல்லைகளை மீறும் போது இவர்களால் கண்டிக்க முடியாமல் போய் விடுகிறது. தோளுக்கு மேல் வளர்ந்த பிறகுதான் தோழன். அதாவது பதின் பருவத்தில் நுழையும் போதுதான் குழந்தைகளைத் தோழர்கள் போல் பாவித்து வளர்க்கலாம். ஆனால் இவ்வகைப் பெற்றோர்கள் சிறு பிராயத்திலிருந்தே குழந்தைகளை தோழனாகக் கருதுவதால் கண் டிக்க முடிவதில்லை. நாளடை வில் குழந்தைகளுக்குச் சிறு சிறு பரிசுகளும், உறுதிமொழிகளும் கொடுத்துதான் அவர்களிடம் இருந்து எந்த வேலையையும் வாங்க முடியும். சில நேரங்களில் அவர்கள் பள்ளிக்கூடம் போவதற்கே தினம் பாக்கெட் மணியும், பலதரப்பட்ட உத்திரவாதங்களும் கொடுக்கும் நிலை வந்து விடுகிறது.

### குழந்தைகளுக்கு உண்டாகும் விளைவுகள்

ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா என்பார்கள். சிறுவயதிலேயே நல்ல பழக்க வழக்கங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து வளர்க்காததால் இம்மாதிரி குழந்தைகளின் மேனரிசங்கள் அவ்வளவாகப் பாராட்டும்படி இருக்காது. உடை உடுத்துதல், சாப்பிடும் முறை, கழிப்பறைப் பழக்கங்கள், புதியவருடன் பழகும் முறை முதலியன அவ்வளவாக செம்மையுற்று இருக்காது.

அனுமதி தாராளம் என்பதால் நிறைய கவர்ச்சியான விளம்பரங்களால் ஈர்க்கப்படும் குழந்தை துரித உணவுகள், சர்க்கரைச் சத்து அதிகம் உள்ள உணவுகள் போன்ற “ஜங்க் ஃபுட்”, வகைகளைச் சாப்பிட்டு உடல் பருமன் பிரச்சினையால் அவதிப்படலாம். மேலும் என்ன சாப்பிடுவது, எப்போது சாப்பிடுவது என்பதும் குழந்தையின் விருப்பப்படி தான் அமையும்.

வீட்டில் கண்டிப்பு இல்லை என்பதால் பள்ளியில் படிக்கும் காலங்களில் வீட்டுப்பாடங்கள் எல்லாம் முடிக்க மாட்டார்கள். படிப்பிலும் ஆர்வம் இல்லாததால் வகுப்பில் தர வரிசையிலும் பின் தங்குவார்கள். தற்போது எல்லாம் கைபேசி, தொலைக்காட்சி என இவர்களின் கவனங்கள் திரும்பி, திரை நேரம் அதிகமாகிக் கொண்டே இருப்பதால் குழந்தைகளின் உடல் பருமன் மேலும் அதிகரிக்கத்தான் வாய்ப்பாகி விடுகிறது. கண்டிப்பும் கட்டுப்பாடும் இல்லாமல் வளருவதால் விடலைப் பருவம் வந்தவுடன் மது, போதை போன்ற கெட்ட பழக்கங்கள் எட்டிப் பார்க்கத் தொடங்கி விடுகின்றன.



இம்மாதிரி வளரும் குழந்தைகளுக்கு எளிதில் மற்றவர்களுடன் பழகி அவர்களை நண்பர்கள் ஆக்கிக் கொள்ளும் திறமை அதிகம். தன்னம்பிக்கை அதிகம் என்பதால் நண்பர்கள் புடைசூழ தலைவன் ரேஞ்சுக்கு இருப்பார்கள். எப்போதும் நண்பர்களிடம் இருந்து வரும் பாராட்டுகள் மட்டுமே இவர்களுக்குப் பிடிக்கும். பாராட்டுகள் கிடைக்காமல் விமரிசனங்கள் கிடைக்கும் போது கோபத்தைக் கட்டுப்படுத்தத் தெரியாததால் சில நேரங்களில் ஆபத்தையும் வரவழைத்துக் கொள்வார்கள்.

### பெற்றோர்கள் எப்படி மாறலாம்?

இந்த வளர்ப்பு முறையில் குழந்தை வளர்க்கும் பெற்றோர்கள் கட்டாயம் குழந்தைகளுக்கான தெளிவான வரைமுறைகளையும் எல்லைகளையும் வகுத்துக் கொள்ள வேண்டும். குழந்தைகளின் விருப்பத்திற்கு எல்லாம் உடனடி அனுமதியும், நிறைவேற்றித் தரும் ஆர்வமும் தேவையில்லை.

பாச மிகுதியால் அவர்களை உடனடி சந்தோஷம் (INSTANT GRATIFICATION) என்ற போதைக்கு அடிமையாக்க வேண்டாம். குழந்தைகள் கேட்பதில் நியாயம் இருப்பின் செய்யுங்கள். இல்லை என்றால் கிடையாது என்று உறுதியாகச் சொல்லுங்கள். தேவைக்கும் ஆசைக்கும் உள்ள வித்தியாசத்தை அவர்களும் புரிந்து கொள்வார்கள்.

அடுத்து குழந்தைகளிடம் இருந்து எதையும் எதிர்பார்க்காமலேயே அவர்கள் போக்கில் விட்டு வளர்க்க முடியாது. நல்ல பழக்கங்கள், பண்புகள், நெறிமுறைகள் எல்லாம் தானாக வந்து விடாது. இன்றைய உலகில் சமூகமும், பள்ளிக்கூடமும் வெளி உலகமும் உங்கள் குழந்தைக்கு இதையெல்லாம் சொல்லித் தராது. குழந்தைகளிடம் ஒவ்வொரு செயலையும் பெற்றோர்கள்தான் விளக் கிச் சொல்ல வேண்டும். சொன்னதை செய்ய வேண்டும் என்றும் எதிர்பார்க்க வேண்டும். செய்யாவிட்டால் என்ன செய்வது என்று தீர்மானித்து செயல் படுத்த வேண்டும். குழந்தை என்றால் அப்படித்தான் இருக்கும் என்று சொல்லி பெற்றோர்களுக்கு இருக்கும் குழந்தை வளர்ப்பு என்னும் பொறுப்பைத் தட்டிக் கழிக்க முடியாது.

பொதுவாகவே இரண்டு வயது ஆனவுடன் பெற்றோர்கள் பாசத்தை எல்லாம் மனதுக்குள்ளேயே வைத்துக் கொண்டு, வெளியில் அக்கறையும் கண்டிப்பும் தெரியும்படியாக வளர்க்க வேண்டும். குழந்தைகள் செய்யும் செயலுக்கு அவர்களைப் பொறுப்பேற்கச் செய்ய வேண்டும். அப்போது தான் அடுத்த முறை செய்யும் செயல் சிறப்பாக அமையும். ஒவ்வொரு முறையும் நல்ல செயல் செய்யும் போது எல்லாம் மனம் திறந்து பாராட்டுங்கள். அதுவே குழந்தைகளுக்கு மிகுந்த உற்சாகத்தைக் கொடுக்கும்.

பரிசுகளை எல்லாம் குழந்தைகள் அதிகம் எதிர்பார்க்க மாட்டார்கள். பரிசு கொடுக்க வேண்டும் என்று நினைத்தால் ஒரு அரை மணி நேரம் தொலைக்காட்சிக்கு அனும திக்கலாம். அதற்கு மேலும் தொலைக்காட்சி வேண்டும் என்று குழந்தை அடம் பிடித்தால் நீங்கள் மீண்டும் ஒரு நல்ல பழக்கத்திற்கு குழந்தையிடம் உத்திரவாதம் கேளுங்கள். இப்படித் திரை நேரத்தையே பரிசாக மாற்றுங்கள். சுருக்கமாகச் சொல்ல வேண்டும் என்றால் நீங்கள் கொடுக்கும் பரிசும் பாராட்டும் குழந்தையை மாற்ற வேண்டும். ஆரம்பத்தில் இது பெற்றோர்களுக்கு சிரமமாக இருந்தாலும் நாளடைவில் குழந்தைகள் நல்லவைகளை எளிதில் கற்றுக் கொள்வார்கள். தாங்கள் வளரும் வீட்டுச் சூழலையும் பாதுகாப்பாக உணருவார்கள். பெற்றோர்களுக்கும் அளவில்லா மகிழ்ச்சி உண்டாகும்.

**(கட்டுரையாளர் குழந்தைகள் நல மருத்துவர்)**

# புலமைச் சிகரம் தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி


மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

1) C 2) E 3) F


24. மூன்று கால் மேசை ஒன்றைச் சுற்றி நாற்காலிகள் மூன்று உள்ளன. அங்கு காணப்படும் கால்களின் எண்ணிக்கை யாது?
1) 16 2) 15 3) 13

25. சத்தி, நிஷான், விஜய், அருண் ஆகிய நால்வரில் விஜயிலும் உயரம் குறைந்தோர் இருவர் மட்டுமே உள்ளனர். நிஷானிலும் உயரம் குறைந்தோர் ஒருவர் மட்டும் உள்ளார். சத்தி மாத்திரம் நிஷானிலும் உயரம் குறைந்தவர் ஆவார். நால்வரில் உயரம் கூடியவர் யார்?
1) விஜய் 2) நிஷான் 3) அருண்


26. ஒரு வரிசையில் கமலா முன்னாலிருந்து 7 ஆவதாகவும் விமலா பின்னாலிருந்து 4 ஆவதாகவும் உள்ளனர். அவர்கள் இருவருக்குமிடையில் இரண்டு பேர் உள்ளனர். அவ்வரிசையில் மொத்தம் எத்தனை பேர் உள்ளனர்?
1) 13 2) 14 3) 15

27. 
உருவில் உள்ள வடிவத்தைப் புள்ளிக்கோட்டின் வழியே வெட்டும்போது கிடைக்கும் முகத்தின் வடிவம்
1) சதுரம் 2) செவ்வகம் 3) அரியம்

28. மகனை விட அப்பா உயரம் கூடியவர் என்பது
1) எப்பொழுதும் உண்மையானது
2) சில சமயம் உண்மையானது
3) எப்பொழுதும் பொய்யானது

29.  இச் சிறிய முக்கோணத்தின் சுற்றளவு 9cm எனின்  இம்முக்கோணியின் சுற்றளவு யாது?
1) 12cm 2) 18cm 3) 36cm

30. படகு ஒன்றில் 30 பேர் பயணிக்கலாம் எனின் 100 பேர் பயணிப்பதற்கு எத்தனை படகுகள் தேவை?
1) 3 2) 2 3) 4


31. 

வெறுமையான கட்டத்துக்குப் பொருத்தமான எண் யாது?
1) 14 2) 10 3) 12

32. அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு விடையளிக்குக.


| பூக்கள் | பழங்கள் | D |
|---|---|---|
| A | மாம்பழம் | கத்தரி |
| மல்லிகை | அன்னாசி | வெண்டி |
| செவ்வந்தி | C | தக்காளி |

அட்டவணையில் ACD ஆகியவற்றுக்குப் பொருத்தமான விடைகள் முறையே
1) நித்திய கல்யாணி, பலாப்பழம், காய்கறிகள்
2) முருங்கை, காய்கறிகள், வெண்டி
3) கீரை, பருப்பு, சோயா

33. 


நித்திய கல்யாணிப் பூவைக் குறிக்கும் எழுத்து
1) அ 2) ஆ 3) இ

❖ 34, 35 ஆம் வினாக்களுக்கு தரப்பட்டுள்ள உருவைக் கொண்டு விடையளிக்குக.

34. 

பிள்ளை காலையில் தான் நிற்கும் இடத்திலிருந்து பாடசாலை நோக்கிச் செல்லும்போது எத்தனை தடவை தெற்கு பக்கமாகச் செல்ல வேண்டும்?
1) 2 தடவைகள் 2) 3 தடவைகள் 3) 4 தடவைகள்

35. இப் பிள்ளை காலையில் பாடசாலைக்குச் செல்லும்போது இவரது நிழல் எத்தனை தடவை முன்னால் விழுந்தது?
1) [illegible] தடவைகள் 2) 5 தடவைகள் 3) 4 தடவைகள்

36. 
இவ்வுருவில் $\frac{3}{8}$ நிறம் தீட்ட வேண்டும் எனின் மேலும் எத்தனை துண்டங்களுக்கு நிறம் தீட்ட வேண்டும்?
1) 2 2) 3 3) 4

## விடைகள்

| | | |
|---|---|---|
| 24. 2 | 28. 2 | 32. 1 |
| 25. 3 | 29. 2 | 33. 1 |
| 26. 1 | 30. 3 | 34. 2 |
| 27. 2 | 31. 1 | 35. 1 |

## கல்வி tv CHANNEL-1

**05.06.2022**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு வணிகப்பிரிவு |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் வினாத்தாள் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

## கல்வி tv CHANNEL - 2

**05.06.2022**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# 2 எரிவாயு கப்பல்களை உடனே அனுப்புங்கள்!

## ஓமானிடம் இலங்கை வேண்டுகோள்

கொழும்பு, ஜூன். 19

ஒரு இலட்சம் மெற்றிக் தொன் எரிவாயுவை இறக்குமதி செய்வதற்கான ஒப்பந்த நடவடிக்கை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நிறைவுறுத்தப்படும் என லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஓமான் நிறுவனத்துடன் எரிவாயுவை கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித்த பீரிஸ் தெரிவித்துள்ளார்.

குறித்த நிறுவனத்துடனான ஒப்பந்தம் தொடர்பான முதற்கட்ட கலந்துரையாடல்கள்இடம் பெற்றதாக அவர் குறிப்பிட்டார்.

அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைய எதிர்வரும் நான்கு மாதக் காலப்பகுதிக்கான ஒரு இலட்சம் மெற்றிக் தொன் எரிவாயுவை கொள்வனவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த ஒப்பந்த நடவடிக்கைக்கு மேலதிகமாக எதிர்வரும் நாட்களில் உடனடியாக இரண்டு எரிவாயு கப்பல்களை நாட்டுக்கு அனுப்புமாறு குறித்த நிறுவனத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாக லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித்த பீரிஸ் கூறினார்.

இதேவேளை, இந்திய கடன் வசதி திட்டத்தின் கீழ் நாட்டை வந்தடைந்த இறுதி கப்பலில் இருந்த 40, 000 மெற்றிக் தொன் டீசல் விரைவில் விநியோகிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், 41000 மெற்றிக் தொன் பெற்றோல் தாங்கிய கப்பலை நாட்டுக்கு கொண்டு வருவதற்கான நாணயக் கடிதம் திறக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# வைத்தியசாலைகளை மூடவேண்டிய நிலை!

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தகவல்

கொழும்பு, ஜூன். 19

எரிபொருள் வழங்குவதில் சுகாதார சேவைகளுக்கு முன்னுரிமை அளிப்பதாக அரசாங்கம் தெரிவித்த போதிலும் இது வரையில் நடவடிக்கை எடுக்கவில்லையென

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் ருக்ஷான் பெல்லான தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக வைத்தியர்கள் மற்றும் பணியாளர்கள் பற்றாக்குறையால் வைத்தியசாலைகளை மூட வேண்டிய நிலை உருவாகி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கறுப்புச் சந்தைக்காரர்கள் சார்பில் எரிபொருள் சேகரிப்புப் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ள எண்ணெய் கடத்தல்காரர்களால் நிலைமை மோசமாகியுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த எரிபொருள் கடத்தல்காரர்களுக்கு எதிராக பொலிஸாரும் இராணுவத்தினரும் மௌனம் சாதிப்பதால், எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்குச் செல்லும் வைத்தியர்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்கள் மிகவும் அநாதரவாகியுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர்,

எரிபொருள் மாபியா இன்று நல்ல வருமான ஆதாரமாக மாறியுள்ளது. கருப்பட்டி கடைகளுக்கு எரிபொருள் சேகரிக்கும் கொள்ளையர்கள் பெற்றோல் போத்தல் 650 ரூபாவுக்கும், டீசல் போத்தல் 550 ரூபாவுக்கும் விற்கின்றனர்.

அத்தியவசிய சேவைகளான சுகாதார சேவைகளை ஊக்குவிப்பதற்கு முன்னுரிமை வழங்கப்படுவதாக கூறப்பட்டாலும், இந்த கொள்ளையர்களால் இதுவரையில் அவ்வாறான தொன்று நடைபெறவில்லை- என்றார். (அ)

# நுரைச்சோலையில் மின்பிறப்பாக்கி பராமரிப்புக்காக 75 நாள்கள் நிறுத்தம்

கொழும்பு, ஜூன். 19

நுரைச்சோலை அனல்மின் நிலையத்தில் உள்ள மின்பிறப்பாக்கி இயந்திரம் ஒன்று நேற்று முன்தினம் இரவு முதல் செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

அவசர பராமரிப்பு பணிகள் காரணமாக மின்பிறப்பாக்கி தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக சபை கூறியுள்ளது.

இதன்படி, மின்பிறப்பாக்கியில் சுமார் 75 நாட்களுக்கு மின்சாரம் உற்பத்தி செய்யப்படாது. இதனால் தேசிய மின் வாரியத்தின் திறன் 45 சதவீதத்தில் இருந்து சுமார் 30 சதவீதமாக குறைவடையவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் நீர் மின்சாரம் மற்றும் அனல் மின் நிலையங்கள் மூலம் மின் உற்பத்தி நடவடிக்கைகளை அதிகரிக்க வேண்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

(அ)

# எமனாகும் வீதிகள்...?

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

தவிர, எமது பிரதேசத்தில் அதிகளவில் விபத்துக்களில் பாதிக்கப்படுபவர்களை அவதானித்தல் - மோட்டார் சைக்கிளை பயன்படுத்தும் இளம் வயதினரே அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர். குறிப்பாக 15 - 16 வயதினர் பெற்றோருக்கு தெரியாமல் மோட்டார் சைக்கிளை வீடுகளில் இருந்து எடுத்து ஓடுகிறார்கள். அத்துடன், 25 வயதுக்கு இடைப்பட்டவர்கள் மிகவும் வேகமாக ஓடுகின்றனர். இவ்வாறானவர்களே அதிகம் வீதி விபத்துக்களில் அகப்படுகின்றனர்.

அத்துடன், விபத்துக்களில் பாதசாரிகள் இறப்புகளை பார்க்கும் போது வயது முதிர்ந்தோரே அதிகம் இறக்கின்றனர். எனவே, வீதி விபத்து தொடர்பில் எமது சமூகத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் அதிகளவு வளைவான வீதிகளிலேயே விபத்துக்கள் அதிகம் நிகழ்கின்றன. குறிப்பாக, பருத்தித்துறை வீதியில் புத்தூர் - சிறுப்பிட்டி போன்ற இடங்களில் அதிகளவில் நிகழ்கின்றன. ஒவ்வொருவரும் தமது வேலைகளுக்காக மோட்டார் சைக்கிள்களில் பயணிக்க வேண்டிய தேவையுள்ளது. எனவே, வீதிகளில் பயணிக்கும்போது தமக்குரிய ஆபத்துக்களை தாங்களே பொறுப்பேற்று செயல்படவேண்டும்.

மதுபோதையில் வாகனம், உணவு கலப்பில் ஏற்படும் சிக்கல், உடல்நிலை சரியின்மை இதே போன்று நித்திரை பிரச்னை மற்றும் கவனக்குறைவும் வீதி விபத்துகளுக்கு காரணம்.

இதேபோன்று, பாதசாரிகள் வீதி ஒழுங்கை கடைப்பிடிக்காமல் செல்லல், சிறுவர்கள் - முதியவர்கள் இவ்வாறான விபத்துக்களால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். இரவு நேர மற்றும் நீண்டதூர பயணங்கள் செய்யும்போதும் விபத்துக்கள் ஏற்பட வாய்ப்புண்டு. இதே போல ஒரு குடும்பமாக - கூட்டமாக வாகனத்தில் செல்லும் போதும் அதிகளவானவர்கள் விபத்துக்களில் சிக்குகின்றனர்.

எனவே, தேவையற்ற மருத்துவ விரயங்களை குறைக்க விபத்துக்களில் இருந்து நம்மை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். விபத்துக்களில் பாதிக்கப்படுவோருக்கு மூளைக் கலங்கள் பாதிக்கப்படும். உடல் அங்கவீனமாகும் நீண்ட நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சையில் இருக்க நேரிடும். எனவே விபத்துக்கள் வரும் முன் தவிர்ப்பதே நல்லது.

கூடுதலான விபத்துக்கள் வேகத்தாலேயே ஏற்படுகின்றன. எனவே, வேகமாகப் பயணிப்பதை தவிர்க்கலாம். சனநடமாட்டம் அதிகம் உள்ள பகுதிகளில் 30 கி. மீற்றருக்கு மேல் செல்லாதுவிட்டால் விபத்துக்களை தவிர்க்கலாம். இந்த நடைமுறைகளை கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும். நாம் வேகமாக செல்லும்போது நாய் குறுக்கே வந்தால் வேகத்தை எம்மால் கட்டுப்படுத்த முடியாது. நாய் குறுக்கே போனதாலேயே விபத்து ஏற்பட்டதாக நாயைக் குறைகூற முடியாது. நாம் நிதானமாக - மெதுவாக பயணிப்பது விபத்துக்களை தவிர்க்கும்.


# வீட்டுத் தோட்டம் செய்வோம்

வளம் கொழிக்கும் பூமி என
வரலாற்றின் அத்தனை பக்கங்களிலும்
பெயர் பொறித்த நம் தாய்நாடு.
இன்று அடிப்படைத் தேவைகளுக்காகவும்
உணவுக்காகவும் கை ஏந்த ஆரம்பித்திருக்கிறது.
மூன்று வேளை உணவு இருவேளையாகவும்
ஒரு நேரமாகவும் சுருங்கியிருக்கிறது.
பஞ்சமும் பட்டினியும் கண்முன்னே
நிழலாடுகின்றன...!



போதும்...! ஏந்திய கைகள்
சற்றே உயரட்டும்

நாம் வாழப்போதுமான வளத்தை தன்னுள் வைத்திருக்கிறது நமது தாய்மண்!
வீட்டுக்கொரு தோட்டம் செய்வோம்
நமது பசியை நாமே போக்க...
எமது கைகளை சற்றே உயர்த்துவோம்!
பெரிதோ சிறிதோ... அவரவர் வீட்டுத் தேவைக்கு
போதுமான காய்கறிகளை நம் வீட்டிலேயே உற்பத்தி செய்வோம்...!
திட்டமிடலும் உழைப்புமே
நம்மையும் நம் நாட்டையும் காக்கும்!

DAN TELEVISION
www.dantv.tv
ஈழநாடு Eelanadu

## ஐ.நா. மனித...

நீதிக்கான பொறுப்புக்கூறலில் இருந்து தப்பித்துக்கொள்ள இயலாது எனவும் சுட்டிக்காட்டி தன் கடந்த காலத்து தீர்மானத்தையே மீளவும் ஆணித்தரமாக வலியுறுத்தி இருந்தார் என்பது யாவரும் அறிந்ததே.

அனைத்துலக குமூகம் தமிழினப்படுகொலைக்கான நீதியைப் பெற்றுத்தர முன்வரும் நிலையில், பூகோள அரசியல் நலன் கருதி அமெரிக்கா, பிரான்ஸ், பிரித்தானியா,, ஜேர்மனி, இந்தியா போன்ற நாடுகள் இலங்கை அரசாங்கத்துடன் பேரம் பேசியும் அரசியலில் மாற்றங்களை ஏற்படுத்தியும் தமிழினப் படுகொலைக்கான நீதியைத் தாமதப்படுத்தும் வேலைகளில் ஈடுபட்டுள்ளன. மேற்குறிப்பிட்ட நாடுகள் தமிழினப் படுகொலைக்கான நீதி விசாரணையை தாமதப்படுத்துவதற்காக, தமிழ்ப் பிரதிநிதிகளென தம்மை அடையாளப்படுத்திக் கொள்பவர்களைப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றன.

இச் சூழ்நிலையைப் பயன்படுத்தி இலங்கை பேரினவாத அரசானது, 50 ஆவது கூட்டத் தொடரிலும் நீதி விசாரணையை நீர்த்துப்போகச் செய்து, வழமை போல் கால அவகாசத்தை பெற்றுக்கொள்ளும் விதமாக பல கபட நாடகங்களை ஆடி வருகின்றது.

ஆனாலும் தமிழ் மக்களுடைய இடைவிடாத தொடர் போராட்டங்கள், ஐ.நா சபையினுள் தமிழ் மக்களின் பிரச்னைகளைத் தொடர்ந்தும் பேசு பொருளாக வைத்திருக்கின்றன.

இந்நிலையில் நாம் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளை எமக்கான நீதிக்காக ஊக்குவிக்கும் வகையில் விரைவுபடுத்த வேண்டியவர்களாக உள்ளோம்.

எம்மிடத்தில் இருக்கும் இன்னும் சில சொற்பமான கால அவகாசத்தைச் சரிவர பயன்படுத்தும் நோக்கில், நடந்து கொண்டிருக்கும் 50 ஆவது கூட்டத் தொடரை (13/06/2022-08/07/2022) இலக்காக வைத்து, நாம் வாழும் நாடுகளில் உள்ள வெளி நாட்டு அமைச்சுகள், அரசியல் மையங்கள், தூதரகங்களின் முன்றல் ஆகிய இடங்களில் அறவழிப் போராட்டங்கள், கவனவீர்ப்பு நிகழ்வுகள், எழுச்சி பேரணிகள்,கண்காட்சிகள், உணவுத் தவிர்ப்புப் போராட்டங்கள், கருத்தரங்குகள், ஈருருளிப்பயணங்கள் அல்லது நடைபயணம் என பரந்துபட்ட தொடர் போராட்டங்களை நடத்தி, நாம் மேலும் எமது வேணவாக்களை ஐயம் திரிபின்றி இடித்துரைக்க வேண்டும்.

2009 ஆம் ஆண்டு இலங்கை பேரினவாத அரசினால் திட்டமிட்டு நடத்தப்பட்ட தமிழினப் படுகொலையின் சாட்சிகள் மற்றும் ஆதாரங்களை காலதாமதமின்றி சமர்ப்பித்து அனைத்துலக நீதி விசாரணை ஊக்குவிக்குமாறும் வலியுறுத்தவேண்டும்.

2011 ஐக்கிய நாடுகள் அவையின் நிபுணர்குழு விசாரணை மற்றும் 2014ஆம் ஆண்டு மனித உரிமைகள் ஆணையகத்தின் புலன் விசாரணை போன்றவற்றில் தமிழ் மக்களின் சாட்சிகளே தமிழீழத்தில் சிங்களப் பேரினவாத அரசினால் நடத்தப்பட்டது போர்க்குற்றம், மனித நேயத்திற்கு எதிரான குற்றம், தமிழினப் படுகொலை , சர்வதேச சட்டவிதி மீறல் போன்றவற்றை உறுதி செய்தன. ஆனாலும் ஐக்கிய நாடுகள் அவையானது தமிழினப் படுகொலை தொடர்பான சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கும் பொருட்டும் மேலும் சாட்சிகளை வேண்டியுள்ளார்கள். அந்த வகையில் 74 ஆண்டு காலமாக தமிழினப்படுகொலை நடாத்திய சிறீலங்கா அரசினை அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தக்கூடிய தீர்மானங்கள் நிறைவேற்றப்படுவதற்கு ஆயத்தம் செய்யும் வகையில், தமிழினப் படுகொலைச் சாட்சியங்களைச் சேகரித்து ஐக்கிய நாடுகள் அவையின் மனித உரிமைகள் ஆணையகத்திற்கு மேலும் கொடுத்துக் கொண்டு இருக்கின்றோம்.

உலக நாடுகள், ஐக்கிய நாடுகள் அவையின் மனித உரிமைகள் ஆலோசனை அவையில் உறுப்புரிமை வகிக்கின்ற நாடுகள், அவர்களது பூகோள நலனில் மாத்திரம் தங்கியிராது, தமிழ் மக்களுக்கான நீதியை வழங்க வலியுறுத்தும் வகையில் வாழிட நாடுகளில் தொடர்ந்து போராட்டங்களை நடத்தி வருகின்றோம்.

ஐ.நா. மனித உரிமைகள் சவையின் 50ஆவது கூட்டத்தொடருக்கு பலம் சேர்க்கும் பொருட்டு நாளை திங்கட் கிழமை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் முன்றலில் ஈகைப்பேரொளி முருகதாசன் திடலில் பிற்பகல் இரண்டு மணி தொடக்கம் ஐந்து மணிவரை நடைபெறவுள்ள கவனயீர்ப்பு போராட்டத்திற்கு கூடுதலான மக்களைக் கலந்து கொள்ள எல்லோரும் ஒத்துழைப்போம்-என்றுள்ளது. (அ)

## 65 வீத...

எரிபொருள் நிரப்பும் நிலையங்களை மூடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

சில எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு ஒரே ஒரு வகை எரிபொருள் மட்டுமே வந்து சேர்வதாகவும், கையிருப்பு தீர்ந்தவுடன் எரிபொருள் கிடைக்கும் வரை அந்த நிரப்பு நிலையங்கள் மூடப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் மொத்த பெற்றோல் இருப்பு 4 ஆயிரம் மெற்றிக் தொன்களாக குறைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பெற்றோல் ஏற்றி வரும் கப்பல் ஒன்று எதிர்வரும் 22ஆம் திகதி இலங்கையை வந்தடைய உள்ளதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவிலிருந்து 40 ஆயிரம் மெற்றிக் தொன் டீசல் வந்தாலும், டீசல் விநியோகம் இன்னும் தடை செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

டீசல் கப்பல் இறக்கும் பணி தொடரும். கொலன்னாவை மற்றும் முத்துராஜவெல எரிபொருள் குதங்களில் டீசல் இறக்கப்படும்.

இதேவேளை, எதிர்காலத்தில் எரிபொருள் மற்றும் கச்சா எண்ணெயை இறக்குமதி செய்யும் திட்டம் தொடர்பில் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர பின்வரும் கருத்துக்களை வெளியிட்டார்.

நேற்று முன்தினம் ஜனாதிபதியுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது, நிதியமைச்சும் மத்திய வங்கியும் அரச மற்றும் தனியார் வங்கிகளுடன் இணைந்து கடன் கடிதங்களை வழங்குவதற்கு திட்டமிடுவதற்கும், போதுமான எரிபொருள் இருப்புக்களை ஒழுங்குபடுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

நீண்ட கால எரிபொருள் கிடைப்பதற்காக வழங்குநர்களுடன் உடன்படிக்கைகளை மேற்கொள்ளும் சாத்தியம் குறித்தும் சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டது. (அ)

## பெற்றோல்...

நாளொன்றுக்கு 50 மெற்றிக் தொன் பெற்றோலை மட்டுமே விநியோகிக்க முடிகிறது.

பெற்றோலுடன் அடுத்த கப்பல் 20 ஆம் திகதியே வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இருப்பினும், அதனை இறக்குவதற்கு முன் கட்டணம் செலுத்தப்பட வேண்டும். அது அடுத்த கட்ட சவாலாக இருக்கும் எனவும் கருதப்படுகிறது.

இதேவேளை, இலங்கையில் சுப்பர் டீசல் ஏற்கனவே முற்றாகத் தீர்ந்துவிட்டதாகவும், மீண்டும் எப்போது சுப்பர் டீசல் வரும் என்பது குறித்து உறுதிப்படுத்தப்படவில்லை என்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கை முழுவதும் அனைத்து வகை எரிபொருட்களுக்கும் பெரும் பற்றாக்குறை நிலவுகிறது. எரிபொருட்களைப் பெற்றுக்கொள்ள கிலோ மீற்றர்கள் நீண்ட வரிசையில் மக்கள் நாட்கணக்கில் காத்திருந்து தவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. அவ்வாறு காத்திருந்தும் கூட பெற்றோலை பெற முடியாத நிலை அல்லது மிகக் குறைந்தளவு பெற்றோலை பெற்றுக்கொள்ளும் நிலை தொடர்கின்றது. (அ)

### பொருளாதார நெருக்கடி;

# ஜனாதிபதி, பிரதமர் உட்பட 13 பேருக்கு எதிராக வழக்கு!

கொழும்பு, ஜூன். 19

இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு பொறுப்புக் கூறவேண்டியவர்கள் என பட்டியலிட்டு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உட்பட 13 பேருக்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்று உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

'டிரான்ஸ்பரன்சி இன்ரர்நஷனல் இலங்கை நிறுவனம்' மற்றும் மேலும் மூவர் இணைந்து இந்த மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, முன்னாள் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், முன்னாள் திறைசேரி செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிக்கல, பிரதமர் ரணில் விக்ரமசிங்க உட்பட 13 பேர் இந்த மனுவில் எதிர் மனுதாரர்களாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இலங்கையில் நெருக்கடி ஏற்படும் வகையில் பகிரங்க தன்மை இன்றியும் பொறுப்புக்கூறலை தவிர்த்து உயர்மட்ட முடிவுகளை எடுத்ததற்கு எதிராக இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடிக்கு காரணமான சில விடயங்களும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(1) 2019 ஆம் ஆண்டு சட்டவிரோதமாக வரிச்சலுகை வழங்கியதன் மூலம் அரசு வருமானத்தை குறைத்தது.

(2) அந்த வரிச் சலுகையை மீண்டும் மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காதது.

3) சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவு பெறுவதை தாமதப்படுத்தியது.

(4) ரூபாவின் மதிப்பு தொடர்பாக உரிய நேரத்தில் தீர்மானம் எடுக்காதது.

மேற்படி விடயங்கள் குறித்து சம்மந்தப்பட்ட எதிர் மனுதாரர்கள் நேரடியாக பொறுப்புக்கூற வேண்டும் என மனுதாரர்கள் தெரிவித்துள்ளனர். (அ)

# பெரியமுல்லையில் விபத்து இரண்டு பேர் உயிரிழப்பு!

கொழும்பு, ஜூன். 19

புத்தளம் - கொழும்பு பிரதான வீதியின் நீர்கொழும்பு பெரியமுல்ல பகுதியில் நேற்று முன் தினம் நள்ளிரவு இடம்பெற்ற வீதிவிபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் உயிரிழந்துள்ளனர்.

புத்தளம் நூர்நகர் பகுதியைச் சேர்ந்த 57 வயதான முஹம்மது சமூன் மற்றும் அவரது 12 வயதான மகன் முஹம்மது ஹமாஸ் ஆகிய இருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தளத்திலிருந்து கொழும்பை நோக்கிச் சென்ற ஓட்டோ ஒன்றும், கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த தனியார் பயணிகள் சேவை பஸ் ஒன்றும் மோதியதில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக நீர்கொழும்பு பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது ஓட்டோவைச் செலுத்திச் சென்ற தந்தையும், பின்னால் இருந்து பயணம் செய்த 12 வயதுடைய மகனும் படுகாயமடைந்த நிலையில், அங்கிருந்தவர்களால் நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும், ஓட்டோவைச் செலுத்திய நபர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என வைத்தியர்கள் தெரிவித்தனர்.

அத்துடன், ஓட்டோவின் பின்னால் இருந்து பயணம் செய்த 12 வயதான சிறுவன் ஆபத்தான நிலையில் நீர்கொழும்பு வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டபோதிலும், நேற்றுக் காலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

உயிரிழந்த தந்தை மற்றும் மகன் ஆகியோரது உடல்கள் பிரேத பரிசோதனைக்காக நீர்கொழும்பு வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்துடன் தொடர்புரைடய தனியார் பஸ்ஸின் சாரதி , விபத்தை ஏற்படுத்திவிட்டு அவ்விடத்தில் இருந்து தப்பிச் சென்று பொலிஸில் சரணடைந்த நிலையில் அவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

## காங்கேசன்...

மேம்படுத்தப்படவேண்டும். சில கட்டடங்கள் அமைக்க வேண்டும். அவை ஒப்பந்தங்கள் ஊடாகவே வழங்க முடியும். அதற்கான பணிகளை முன்னெடுக்கவேண்டியுள்ளது.

இவற்றினை மேற்கொள்ள குறிப்பிட்ட கால அவகாசம் ஏற்படும் என்பதனால் உடனடியாக கப்பல் சேவை ஆரம்பிக்கும் சாத்தியம் இல்லை. விரைவில் அதற்கான பணிகளை முன்னெடுக்கப்படும்-என்றார். (அ)

## புதிய...

கரமாக இடம்பெற்று வருகின்றன என்று கட்சிப் பிரமுகர் ஒருவர் தகவல் வெளியிட்டுள்ளார்.

2024 இல் நடைபெறும் என எதிர்பார்க்கப்படும் ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்தே, சம்பிக்க இவ்வாறான நகர்வில் இறங்கியுள்ளார் என அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (அ)

## நாளை...

பெறப்படவுள்ள கடன் தொடர்பான கலந்துரையாடல்களை முன்னெடுத்துச் செல்லும் நோக்கிலேயே இந்தக் குழு இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளது.

அவர்கள் ஜனாதிபதி, பிரதமர், நிதியமைச்சின் அதிகாரிகள் மற்றும் மத்திய வங்கி அதிகாரிகளைச் சந்திக்கவுள்ளதாக நிதியமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (அ)

## யாழ்.சர்வதேச...

அத்தோடு புலம்பெயர் தமிழர்கள் தமது தாயக நிலத்துக்கு நேரடியாக விமானம் ஊடாக வருகை தர முடியும் எனவும் அவர் கூறினார்.

யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத்தை மீண்டும் செயற்பட வைப்பது குறித்து ஆராயும் கூட்டம் நேற்று பலாலியில் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா நேற்று ரயில் மூலம் யாழ்ப்பாணம் வந்தார். பலாலியில் இது தொடர்பாக நடந்த கூட்டத்தின் பின்னர் கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

யாழ்.சர்வதேச விமான நிலையத்தை ஜூலை முதலாம் திகதி முதல் செயற்பட வைப்பதற்கான ஏற்பாடுகளை உடனடியாக மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த கூட்டத்தில் யாழ். அரச அதிபர் க. மகேசன், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஆகியோர் உட்பட முக்கிய அதிகாரிகள் பங்கேற்றனர். (அ)

**வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்கமுடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்**

**ஆகாஸ் நகைமாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகுவைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

**076 825 7716 (ஆகாஸ்)**







## மரண அறிவித்தல்

**தோற்றம்** 06 - 12 - 1935



**மறைவு** 17 - 06 - 2022

# திருமதி சரஸ்வதிஅம்மாள் துரைராஜா (செல்வமணி)

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், யாழ். மாதகல் கிழக்கை வதிவிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தையை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட சரஸ்வதி அம்மாள் துரைராஜா அவர்கள் 17.06.2022 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து இலட்சுமி தம்பதிகளின் மூத்த புதல்வியும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் சரஸ்வதி தம்பதிகளின் மூத்த மருமகளும்,காலஞ்சென்ற துரைராஜா அவர்களின் ஆருயிர் மனைவியும், ரவீந்திரராஜா (சுங்கத்திணைக்களம்), தேவிகாராணி (கனடா), மணிமாறன்(கனடா), அனுராதா (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும்,வளர்மதி, பாலச்சந்திரன் (கனடா), திருஉமா(கனடா), வரதராஜா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான செல்வரட்ணம், பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும்,காலஞ்சென்ற சிவபாக்கியம், துரைசிங்கம், காலஞ்சென்றவர்களான இராசபூபதி, பாலசுப்ரமணியம் ஆகியோரின் மைத்துனியும்,அஞ்சனா- குமுதன், செந்தூரன்- துஷியா, ஜனார்த்தனன், காயத்ரி, ஹம்சவேணி, சிந்துஜன், ரஜந்தன், அஜித், பிரவீன் ஆகியோரின் பாசமிகு பேத்தியும்,ஹரிசனா, ஊர்மிலன், தர்மிலன், சங்கவி ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 19.06.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 08:00 மணிமுதல் இரவு 08:00 மணிவரை ஜெயரட்ண மலர்ச்சாலையில் பார்வைக்காக வைக்கப்பட்டு, 20.06.2022 திங்கட்கிழமை அன்று மு.ப 10:00 மணியளவில் இறுதிக்கிரியை நடைபெற்று பின்னர் ந.ப 12.30 மணியளவில் New Gas Crematorium, Borella எனும் முகவரியில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**தேவிகாராணி - மகள்**

தொடர்புகளுக்கு:
**ரவீந்திரராஜா - மகன்** Mobile : +94777765693
**தேவிகாராணி - மகள்** Mobile : +14167731876
**மணிமாறன் - மகன்** Mobile : +14167540904
**அனுராதா - மகள்** Mobile : +14164960403

## மரண அறிவித்தல்

**தோற்றம்** 12 - 02 - 1942



**மறைவு** 17 - 06 - 2022

# திருமதி கனகசபாபதி உருக்குமணி

முல்லைத்தீவு முள்ளியவளையைப் பிறப்பிடமாகவும், வவுனியா குளவிசுட்டானை வதிவிடமாகவும் கொண்ட கனகசபாபதி உருக்குமணி அவர்கள் 17-06-2022 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி, சின்னம்மா தம்பதிகளின் அன்பு புதல்வியும், காலஞ்சென்ற சண்முகம், பார்வதி தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கனகசபாபதி அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான விநாயகமூர்த்தி, மனோன்மணி மற்றும் தியாகராஜா, பரமேஸ்வரி, புவனேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், திலகவதி, உதயகுமார், லீலாவதி, மனோகரா, செல்வன், செல்லம், விக்கினேஸ்வரன் (கண்டன்) ஆகியோரின் அன்புமிகு தாயாரும், சின்னையா, ஞானாம்பாள், ஏழுமலை, றஞ்சன், அன்பரசி, ஜெயதரன், தனுஷியா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், டிலக்ஷன், டிலக்ஷனா, டிபாகர், மதுரா, சாயித்தியன், மயூரபி, துளசிகா, புவிகா, திந்துஜா, சாருஜன், அனோசன், புவித்தா, சிவிஹா, ஷயுதா ஆகியோரின் பாசமிகு பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 20.06.2022 திங்கட்கிழமை அன்று ந.ப 12:00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் குளவிசுட்டான் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*முகவரிடு: -*
*பதி அகம்,*
*குளவிசுட்டான்,*
*நெடுங்கேணி*

தகவல்:
**கண்டன்(விக்கி) - மகன்.**

தொடர்புகளுக்கு:
**உதயன் - மகன்** Mobile : +94776054484
**செல்வன் - மகன்** Mobile : +94770229836
**கண்டன்(விக்கி) - மகன்** Mobile : +447484120319
**டிலக்ஷன் - பேரன்** Mobile : +94767180196

## மரண அறிவித்தல்

**தோற்றம்** 07 - 01 - 1931



**மறைவு** 11 - 06 - 2022

# திரு.கந்தப்பு இராசரத்தினம்

## (வடகோவை பூ.க.இராஜரட்ணம்)

*கோப்பாய் - லண்டன்*
*(ஓய்வுநிலை அதிபர் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி)*

யாழ்ப்பாணம், கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் கிழக்கு, கொழும்பு வெள்ளவத்தை, பிரித்தானியா லண்டன் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட வடகோவை கந்தப்பு இராசரத்தினம் அவர்கள் 11.06.2022 சனிக்கிழமை அன்று லண்டனில் இறைபதம் அடைந்தார் என்ற செய்தியை ஆழ்ந்த கவலையுடன் அறியத்தருகின்றோம்.

அன்னார், காலஞ்சென்ற திருமதி சரோஜினிதேவி இராஜரட்ணம் அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கந்தப்பு சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், கலா நிதி பிரேம்ராஜ் (அவுஸ்திரேலியா), சசிகலா (லண்டன்), உதயராஜ் (லண்டன்), மேகலா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், நாராயணி, சிறீதரன், வணுஷியா, திருநாவுக்கரசு ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான பூதத்தம்பி, அன்னலட்சுமி, துரைசிங்கம் மற்றும் இராசமணி, காசிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும், பரமேஸ்வரி, காலஞ்சென்ற பூமணி, இராசமணி, ஜெயக்குமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும் லவிண்ராஜ், அஸ்வின்ராஜ், ஜசின் ராஜ், சரன்ராஜ், பிரவீன்ராஜ் ஆகியோரின் பாசமிகு அப்பப்பாவும், டிலக்சன், பிவித்திகா, ஜக்சனா, மதுஜனா ஆகியோரின் பாசமிகு அம்மப்பாவும் ஆவார்.

பார்வைக்கு :
Saturday, 18 Jun 2022 9:00 AM - 11:00 AM
Saturday, 18 Jun 2022 5:00 PM - 8:00 PM
Divinity Funeral Care 209 Kenton Rd, Kenton, Harrow HA3 0HD, United Kingdom

கிரியை
Sunday, 19 Jun 2022 7:30 AM - 10:00 AM
Hendon Sports Centre (Youth & Community Centre) Algernon Rd, London NW4 3TA

தகனம்
Sunday,19 Jun 2022 10:30 AM - 11:00 AM
Hendon Cemetery & Crematorium Holders Hill Rd, London NW7 1NB, UK

மதிய போசனம்
Sunday, 19 Jun 2022 12:00 PM
Alperton Community School Ealing Road, Wembley HA0 4PW, United Kingdom

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வீட்டு முகவரி:
6 Dudley Road,
Harrow, HA2 0PR U.K.

தகவல் :
**குடும்பத்தினர்.**

தொடர்புகளுக்கு :
**பிரேம்ராஜ் (மகன்)** - 0061478005488
**சசிகலா (மகள்)** - 00447784384796
**மேகலா (மகள்)** - 00447908603770
**வணுஷியா (மருமகள்)** - 00447717042485
**கோபி** - 07465987533
**திபா** - 07824664665

*இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 19.06.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.*

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : அறிந்தும் அறியாமலும்
11.00 மணி : BEAT BOX
11.30 மணி : தடை அதை உடை-தற்காப்புக்கலை

**பகல்**

12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி



1.30 மணி : வீக் என்ட் மூவி-பகவதி
04.30 மணி : உதவும் கரங்கள்



5.00 மணி : COFFE WITH பிரமுகர்



6.00 மணி : கலக்கல் ஸ்ரார்-
திறமையாளர்களுக்கான களம்

**இரவு**

07.00 மணி : SPOTLIGHT
08.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி : டான் பட்டிமன்றம்-தந்தையர் தின சிறப்பு




10.00 மணி: -நேர்கொண்ட பார்வை -
இராசமாணிக்கம் சாணக்கியன்

## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

## சிவி

**காலை**

05.00 மணி : சிவாய மந்திரம்
06.00 மணி : சுப்ரபாதம்
06.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : திருமுறையும் பொருளும்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
06.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

07.00 மணி : செய்திகள்
07.30 மணி : அருளுரை
08.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இயேசுவின் போதனைகள் (மறுஒளிபரப்பு)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: விவிலியம் அறிவோம் (திருகோணமலை)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: மறைக்கல்வி(மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
7.00 மணி : ஞானவழி
7.30 மணி : படம்

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு